
உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
சுடர்: 29 கதிர்: 042 வள்ளுவர் ஆண்டு: 2044 மார்கழி 23, செவ்வாய் 07.01.2014
பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30


மப்பான வானிலை
29 C 24 C


பக்கம் 06
கட்சி தொடங்கும் எண்ணம் இல்லை


பக்கம் 07
அல் குவைதாவுக்கு எதிராக உதவத் தயார்


பக்கம் 22
ஜெனி பிளமிங்கின் சதத்தினால் சென்.ஜோன்ஸ் அணி அபார வெற்றி



பக்கம் 23
இங்கிலாந்து அணியை துவம்சம் செய்த ஆஸி.

## வடக்கு முதல்வரின் பெயரில் போலி நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஜன.7

வடமாகாண சபையின் பெயரால் மக்கள் தொடர்பாளர் பதவிக்கென போலியாகத் தயாரிக்கப்பட்ட நியமனக் கடிதங்கள் நேற்று தெல்லிப்பழை கட்டுவன் பகுதியில் வைத்து 15 இற்கும் மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் இவை முதலமைச்சரால் வழங்கப்படவில்லை என்றும் அவ்வாறான நியமனம் வழங்கும் நிகழ்வு வடமாகாண சபையால் நடத்தப்படவில்லை என்றும் முதல

2ம் ஆம் பக்கம் பார்க்க


வடமாகாணசபை
பணியமர்த்தல் மடல்

## கரையோரப் பாடசாலைகளுக்கு இன்றும் தொடர்ந்து விடுமுறை

யாழ்ப்பாணம், ஜன.7

தொடர்ச்சியான மழை மற்றும் கடும் காற்று வீசிக் கொண்டிருக்கும் சீரற்ற காலநிலை தொடருமானால் இன்றும் பாடசாலைகள் நடைபெறமாட்டாது என்று வடமராட்சி மற்றும் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.


நேற்று கடும் மழையாலும், காற்றினாலும் குடாநாட்டின் கரையோரப் பாடசாலைகள் மற்றும் முல்லைத்தீவுப் பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள 19 பாடசாலைகளும், வடமராட்சி கடற்கரையோரமாக உள்ள தொண்டமானாறு தொடக்கம் கற்கோவளம் வரையான 11 பாடசாலைகளும் என மொத்தமாக 30 பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுப் பாடசாலை

2ம் ஆம் பக்கம் பார்க்க

# தோண்டத் தோண்ட எலும்புக் கூடுகள்

## நேற்றும் 8 மனித மண்டையோடுகள் இதுவரை 26 எலும்புக் கூடுகள் மீட்பு



மேலும் செய்திகள் 2 ஆம் பக்கத்தில்

மன்னார், ஜனவரி 7

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில் இருந்து மேலும் 8 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுடன் இதுவரை 26 மனித மண்டையோடு கள், எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் குழந்தைகளின் எலும்புக் கூடுகளும் உள்ளதாகக் கூறப்படுகிறது. புதைகுழியைத் தோண்டும் பணிகள் நேற்றுக் காலை 8 மணி முதல் மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரட்ண ஆகியோர் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டன. இதன் போது குழந்தை ஒன்றின் எலும்புக் கூடு உட்பட 8 உடல் எச்சங்கள் மீட்கப்பட்டன.

கடந்த டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி திருக்கேதீஸ்வரம் பகுதியில் குடிதண்ணீர் விநி

2ம் ஆம் பக்கம் பார்க்க

## 58 குடும்பங்கள் முல்லைத்தீவில் இடம்பெயர்வு

முல்லைத்தீவு, ஜன.7

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு முதல் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு கள்ளப்பாடு கடற்கரையை அண்மித்த பகுதிகளில் இருந்து 58 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இவர்கள் கள்ளப்பாடு அ.த.க. பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுக்கு அண்மையில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் காரணமாக கரையோரப் பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் மக்கள் வீடுகளில் முடங்கியிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்றுக் காலை முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது.

முல்லைத்தீவின் கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகின்றது. கடல்அலை நேற்று சில அடி மேலெழுந்ததாகவும்

2ம் ஆம் பக்கம் பார்க்க

## மழை இன்றும் தொடரும்

யாழ்ப்பாணம், ஜன.7

திருகோணமலை கடற்பரப்பை அண்மித்து நிலைகொண்டிருந்த தாழமுக்கம் தற்போது முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நிலை கொண்டுள்ளமையால் நேற்றையதினம் போன்றே இன்று செவ்வாய்க்கிழமையும் கடும் காற்றுடன் ஆங்காங்கே மழையும் பெய்யும் என்று யாழ். திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

2ம் ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவுப் போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.7

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கடும் காற்று, கடற்கொந்தளிப்பு காரணமாகக் குறிகாட்டுவான் - நெடுந்தீவு இடையேயான கடற்போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை நெடுந்தீவுக்கான படகுச் சேவைகள் இடம்பெறவில்லை. இதனால் யாழ்ப்பாணம் வருவதற்காக

2ம் ஆம் பக்கம் பார்க்க

## தந்தையை ரி.ஐ.டி. விடுவிக்காததால் காத்திருக்கிறது சிறுவனின் உடல்

### உறவினர்கள் சிறைச்சாலைகளுக்கு அலைந்தும் முடிவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 7

கிளிநொச்சி, திருநகர் தெற்கில் திடீரென வீழ்ந்து உயிரிழந்த சிறுவனின் சடலம் தந்தையின் வரவுக்காக 4 நாள்களாக காத்திருக்கிறது. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட தந்தையை மகனின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள அனுமதிக்குமாறு கோரியுள்ள உறவினர்கள் நேற்றுமுன்தினம் முதல் அதற்காக அலைக்கழிக்கப்படுகின்றனர்.

திருநகர் தெற்கைச் சேர்ந்த வீ. நிதர்சன் (வயது -15) என்ற சிறுவன் கடந்த 4 ஆம் திகதி காலை வீட்டிலிருந்து பாடசாலைக்குப் புறப்படும் நேரத்தில் துடிதுடித்து உயிரிழந்தான். சிறுவனின் உயிரிழப்புக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அது தொடர்பில் ஆய்வு நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தந்தை கைது செய்யப்பட்ட பின்னர் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவன் போதிய உணவின்றியும் வயதுக்கு மிஞ்சிய வேலைப் பளு காரணமாகவும் நோய்வாய்ப்பட்டு இறந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த வருடம் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் ...

2ம் ஆம் பக்கம் பார்க்க


வங்காள விரிகுடாவில் உருவாகி உள்ள தாழமுக்கம் காரணமாக குடாநாட்டுக் கடற்பரப்புகள் கடும் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகின்றன. கடும் காற்றும் வீசுகிறது. இதனால் பருத்தித்துறைக் கடலில் அலை சில அடி உயரத்துக்கு எழுந்து கரையை மோதியது. (த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 143 இந்திய மீனவருக்கும் விளக்க மறியல் உத்தரவு



திருகோணமலை, ஜன.07
இலங்கைக் கடற் பகுதியில் அத்து மீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 143 இந்திய மீனவர்களையும் 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு திருகோணமலை பிரதான நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.
திருகோணமலை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 143 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.
குறித்த மீனவர்கள் நேற்று திருகோணமலை பிரதான நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் டி.சரவணராஜா உத்தரவிட்டார். (த-400)

# படையினரிடம் ஒப்படைக்கப்பட்டோரே மன்னாரில் எலும்புக்கூடுகளாக மீட்பு

### *ஐ.நா. விசாரணை தேவை என்கிறார் விக்கிரமபாகு*



கொழும்பு, ஜன.7
"மன்னாரில் மீட்கப்படும் எலும்புக் கூடுகள் குறித்து ஐ.நா. உடனடியாக விசாரணையை மேற்கொள்ள வேண்டும்" என நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.
போரின்போது படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களே இவ்வாறு எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.
மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் இதுவரை 26 மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, இன்னமும் இதன் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. இந்த நிலையில் இது குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மன்னாரில் தொடர்ந்தும் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு வருகின்றமையை பார்க்கும் போது எமக்கு சந்தேகம் ஏற்படுகிறது. ஏனென்றால், போர்க் காலத்தின் போது படையினரிடம் மக்கள் சரணடைந்தார்கள். அதேபோல், அருட் தந்தை பிரான்ஸிஸ் ஜோசப் தலைமையில் பலர் படையினரிடம் சரணடைந்தனர். ஆனால், இன்னமும் இவர்கள் குறித்த தகவல்கள் தெரியவில்லை. ஆகவே, மன்னாரில் தற்போது மீட்க்கப்பட்டுக் கொண்டிருக்கும் சடலங்கள் இவர்களுடையதாகவும் இருக்கலாம் என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.
இதனால், அரசு இதை உடனடியாக விசாரணைக்குட்படுத்த வேண்டும். அதுமட்டுமல்லாது, இதுகுறித்த விசாரணையை ஐக்கிய நாடுகள் சபையும் உடனடியாக மேற்கொண்டு உண்மையை வெளியுலகிற்குக் கொண்டுவர வேண்டும்" என்றார். (சி)

# மன்னார் மனிதப் புதைகுழி அமெரிக்காவின் கவனத்துக்கு

### *கொண்டுசெல்கிறது கூட்டமைப்பு*

கொழும்பு, ஜன. 7
மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மாபெரும் மனிதப் புதைகுழியை சர்வதேசப் போர்க் குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்காவின் விசேட தூதுவர் ஸ்ரீபன் ஜே.ராப்பின் கவனத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கொண்டு வரவுள்ளது.
மன்னார், திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியிலிருந்து நேற்று வரை 26 எலும்புக் கூடுகள் முழுமையாகவும், சில எலும்புக்கூடுகள் துண்டு துண்டாகவும் மீட்கப்பட்டுள்ள நிலையில், நேற்று இலங்கை வந்தடைந்த சர்வதேச போர்க் குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்காவின் விசேட தூதுவரை இன்று கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.
இதன்போது மன்னார் புதைகுழி விவகாரத்தை ஸ்ரீபன் ஜே. ராப்பின் கவனத்திற்குத் தாம் கொண்டுவருவோம் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று மாலை உதயனிடம் தெரிவித்தார்.
மன்னார் ஆயர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க குறித்த மனிதப் புதை குழி தொடர்பில் சர்வதேச விசாரணை உடன் தேவை என்று சர்வதேச போர்க் குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்காவின் விசேட தூதுவரிடம் தாம் இன்று வலியுறுத்தவுள்ளோம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார்.
மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியை அமெரிக்காவின் உயர் குழுவினர் நேரில் சென்று பார்வையிடவேண்டும் என்றும் அவரிடம் தாம் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
மன்னார் மனிதப் புதைகுழி, மாபெரும் மனிதப் புதைகுழியாக - இனப்படுகொலையின் சான்றாக இருக்கின்றது. எனவே, அதிலிருந்து மீட்கப்படும் எலும்புக்கூடுகளை ஆய்வு செய்வதற்கு சர்வதேச நிபுணர் குழுவை இலங்கை அரசு உடன் அழைக்க வேண்டும். அப்போதுதான் உண்மைகள் கண்டறியப்படும். உள்நாட்டு நிபுணர் குழுவில் எமக்கு நம்பிக்கை இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

## கணினிகள் திருட்டு

தென்மராட்சி, ஜன.7
புயல் எச்சரிக்கை காரணமாக மக்கள் வெளியே நடமாடாத வேளையில் கணினிக் கடையினுள் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான கணினிகளையும் உப கரணங்களையும் அபகரித்துச் சென்றனர்.
இச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சங்கத்தானையில் ஏ-9 வீதியுடன் இணைந்த கடையில் இடம்பெற்றுள்ளது.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை கடைகள் திறக்கப்படாததாலும் புயல் எச்சரிக்கை காரணமாக மக்கள் வெளியே நடமாடத் தயங்கியதாலும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கதவை உடைத்து திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.
திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

## நெடுங்கேணி பிரதேச சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம்


வவுனியா.ஜன.7
வவுனியாவடக்கு நெடுங்கேணி பிரதேச சபை ஊழியர்கள் சிலர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி இன்று செவ்வாய்க் கிழமை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.
தற்காலிக நியமனம் வழங்கி 3 வருடங்கள் கடந்த போதும் இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமையினாலேயே அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.
வவுனியா வடக்கு பிரதேச சபையில் தற்காலிகமாக கடமை புரியும் சாரதி, சுகாதாரத் தொழிலாளர்கள், காவலாளிகள் போன்ற 9 பேரே இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

> **"3 வருடங்கள் சென்ற போதும் இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமையினாலேயே அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.**

இது தொடர்பாக நெடுங்கேணி பிரதேச சபையின் தவிசாளர், பிரதேச சபை செயலாளர் போன்றோருக்கு தமது பிரச்சினை தொடர்பாக எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-422)

## பொங்கல் பெருவிழா

சித்தன்கேணி ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த தைப் பொங்கல் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் இடம்பெறவுள்ளது.
தைப்பொங்கல் தினத்தன்று விசேட பஜனைப் பாடல்களும், சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. இதில் உள்ளம்பெருங் கோயில் என்ற தலைப்பில்சைவப் புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் க.நித்தியத சீதரனும், சக்தி பின்னமிலான் என்ற தலைப்பில் வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் செ. கந்தசத்திய தாஸனும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்னும் தலைப்பில் இளம் சைவப்புலவர் கைலைநாதனும் உரை நிகழ்த்தவுள்ளனர். (த-400)



தற்போது பெய்துவரும் கடும் மழையுடன் கூடிய காற்றின் காரணமாக வடமராட்சிப் பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன் பிடிக்குச் செல்லவில்லை.
எனினும் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது என்பதற் காக அவர்கள் நேற்று கடலில் வீச்சு வலைத் தொழிலில் ஈடு பட்டனர். (த-21)

## பத்திரிசியார் கல்லூரியில் ஜேர்மன் மொழி வகுப்புக்கள்

### *தூதுவர் ஆரம்பித்து வைப்பார்*

யாழ்ப்பாணம்,ஜன.7
நாட்டின் தேசியக் கலைத் திட்டத்தில் தரம் 10,11 இல் பிற மொழிகள் கற்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன. அந்த வகையில் ஜேர்மன் மொழியை தரம் 10 இல் கற்பிக்கப்படுவதற்குப் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.
இலங்கையில் ஜேர்மன் மொழி கற்பிக்கும் நிறுவனமான "கோய்தே" (Goethe) மேற்படி கல்லூரியுடன் இணைந்து இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.
நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜேர்மன் தூதுவர் யூர் ஜென் மொர்காட் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஜேர்மன் மொழி வகுப்பை ஆரம்பித்து வைக்கின்றார்.
அன்றைய தினம் ஜேர்மன் மொழி கற்பிக்கும் நிறுவனமாகிய 'கோய்தே' Goethe நிறுவனத்துடன் இணைந்து புனித பத்திரிசியார் கல்லூரி ஓர் செயற்பாட்டு உடன்படிக்கையையும் செய்யவுள்ளது. (த)

# லயன் எயார் விமான பயணிகளை அடையாளம் காண நடவடிக்கை

### *மீட்கப்பட்ட ஆடைகள் காட்சிக்கு*

14 வருடங்களுக்கு முன்னர் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறப்படும் 'லயன் எயார் - அன்டனோவ் 24' ரக உள் நாட்டு பயணிகள் விமானத்திலிருந்து மீட்கப்பட்ட ஆடைகளைக்காட்சிப்படுத்தி உயிரிழந்தவர்கள் தொடர்பில் கண்டறிவதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.
இதற்கமைய, எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் இந்த ஆடைகள் காட்சிப்படுத்தப் படவுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இதன்போது 72 ஆடைகள், அடையாளம் காண்பதற்காக காட்சிப் படுத்தப்படவுள்ளன.
இதனால், 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29ஆம் திகதி சுட்டு வீழ்த்தப்பட்டதாக நம்பப்படும் 'லயன் எயார்' விமானத்தில் பயணித்து உயிரிழந்த பயணிகளின் உறவினர்கள் அல்லது அவர்கள் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் குறித்த இரு தினங்களில் யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு வருகை தந்து உயிரிழந்தவர்கள் தொடர்பில் தகவல் வழங்குமாறு பொலிஸ் தலைமை [illegible]
14 வருடங்களுக்கு முன்னர் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக நம்பப்படும் 'லயன் எயார் - அன்டனோவ் 24' ரக உள் நாட்டு பயணிகள் விமானத்தின் நொருங்கிய பகுதிகள் கடந்த மே மாதம் மீட்கப்பட்டன. வடபகுதி கடற்பரப்பின் இரணைதீவுக்கு அண்மையில், கடலுக்கு அடியிலிருந்து இந்த விமானத்தின் சிதைவடைந்த பாகங்கள் மீட்கப்பட்டன. விமானத்தின் என்ஜின், மோட்டர், விமானத்தின் பின்புறப் பகுதிகள், உயிரிழந்தவர்களின் எலும்புக்கூடுகள், ஆடைகள் போன்றன மீட்கப்பட்டுள்ளன. இலங்கை கடற்படைக்குச் சொந்தமான கப்பலொன்றின் உதவியுடன் இந்த விமானத்தின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.
பலாலி விமான நிலையத்திலிருந்து கடந்த 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் 29ஆம் திகதி 48 பயணிகள், 6 விமானப் பணியாளர்கள், இரு உக்ரேனிய விமானிகளுடன் இரத்மலானைக்குப் புறப்பட்ட இந்த விமானம், புறப்பட்டு 10 நிமிடங்களின் பின்னர் ராடர் திரையிலிருந்து மறைந்துபோனது.
புலிகளின் ஏவுகணைத் தாக்குதலில் இந்த விமானம் வீழ்த்தப்பட்டதாக நம்பப்படுகின்றது. இருப்பினும், இதன் மர்மம் இன்னும் பூரணமாகத் துலங்காத நிலையில் மேற்படி விமானத்தின் பாகங்களை கடற்படையினர் கண்டு பிடித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகள், காணிகள் நாளை கையளிப்பு

தென்மராட்சி, ஜன.7
வரணிப் பிரதேசத்தில் படையினரால் பயன்படுத்தப்பட்ட குடியிருப்புக்கள் மற்றும் காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் நாளை புதன்கிழமை கையளிக்கப்படவுள்ளன.
காணி உரிமையாளர்கள் அன்றைய தினம் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
வரணிப் பிரதேசத்தில் இயங்கி வந்த பல வீடுகளிலிருந்து படையினர் வெளியேறி வருவதால் அவை உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன. (ஒ-9)

# கண் 'கிளினிக்' நாளை இல்லை


தென்மராட்சி, ஜன.7
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதன்கிழமைகளில் நடைபெறும் கண் 'கிளினிக்' நாளை நடைபெற மாட்டாது என்றும் அடுத்த கிளினிக் வழமை போல் 15 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# றெக்ஷயன் கொலைக்கு உரிய விசாரணை தேவை

*வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.7
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் டானியல் றெக்ஷயன் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி எவ்வாறு பெறப்பட்டது என்பது தொடர்பில் உரிய விசாரணை நடைபெறவேண்டும். அதன் மூலமாகப் பலவிடயங்கள் வெளிவரலாம் என்று தெரிவித்தார் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
நல்லூர் நாயன்மார்கட்டில் நிர்மாணிக்கப்பட்ட எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:
காணாமற் போனவர்களுக்குத் தாங்கள் பொறுப்பில்லை. தமிழ் இயக்கங்கள்தான் அவர்களைக் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்று அதிகாரத்தில் உள்ளவர்களால் கூறப்படுகிறது.
இன்று ஜனநாயகத்துக்குத் திரும்பி விட்டதாகக் கூறும் பல முன்னைய இயக்கத்தினர் தொடர்ந்தும் ஆயுதங்களை வைத்திருப்பது தெரிய வந்துள்ளது. அண்மையில் நெடுந்தீவில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதற்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி எங்கிருந்து வந்தது என்பது பற்றி உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். அதிலிருந்து பல உண்மைகள் வெளிவரலாம்.
இராணுவத்தினரோ, அரசோ தமக்கு ஏதாவது நன்மை கிடைக்காவிட்டால் காணாமற் போனோரை விடுவிக்காது வைத்துப் பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. இதற்கு கூறப்படும் ஒரு காரணம் போரில் ஈடுபட்ட இயக்கத்தினர் பொன், பொருள், திரவியங்களை எங்கே புதைத்தோ, பத்திரமாகப் பதுக்கியோ வைத்திருக்கிறார்கள் என்பது பற்றிய விவரங்களை அறியவே என்பதுடன் இதற்காகச் சித்திரவதைப் படுத்தப்படுகிறார்கள் என்றும் செய்திகள் வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)

> " "
> காணாமற் போனவர்களுக் குத் தாங்கள் பொறுப்பில்லை. தமிழ் இயக்கங்கள்தான் அவர்களைக் கொண்டு சென்றி ருக்க வேண்டும் என்று அதி காரத்தில் உள்ளவர்களால் கூறப்படுகிறது.



யாழ்.புறநகர்ப் பகுதியான நாயன்மார்கட்டில் நிர்மாணிக்கப்பட்ட எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமத்தை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் சிறுவர் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தனர். அதன் ஆரம்ப நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதைக் காணலாம். (ஒ-4-21)

# 110 பேர் வசிக்கக் கூடிய பன்னாட்டு சிறுவர் கிராமம்

*நாயன்மார்கட்டில் திறக்கப்பட்டது*

யாழ்ப்பாணம், ஜன.7
12 வீடுகள் கொண்ட எஸ்.ஓ. எஸ். எனும் பன்னாட்டு சிறுவர் கிராமம் 110 பேர் வசிக்கக் கூடிய யாழ்.புறநகர்ப் பகுதியான நாயன்மார்கட்டில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
சிறுவர் பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் உட்படப் பலர் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.
இந்தக் கிராமத்தில் உள்ள 11 வீடுகளில் தற்போது 97 பேர் வசிக்கின்றனர். எனினும் இங்கு 110 பேர் வசிக்க முடியும் என்ற அளவுக்கு வசதிகள் உள்ளன. இந்தக் கிராம நிர்மாணிப்புக்குப் பெரியளவில் நிதியுதவி புரிந்தவர்கள் ஜேர்மனியைச் சேர்ந்த தனிநபர்களே. கடந்த வருடம் பெப்ரவரியில் இந்தக் கிராமத்தில் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 257 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கிராமம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
போர் காரணமாக 2009 ஏப்ரலில் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்தனர். அதில் ஆதரவற்ற நூற்றுக் கணக்கான சிறுவர்களும் உள்ளடங்கினர். அதனால் வவுனியா செட்டிக்குளத்தில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமின் 4 ஆவது வலயத்தின் எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமத்தின் மூலமாகத் தற்காலிக கவனிப்புத் திட்டம் 2009 ஒகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து ஆதரவற்ற 234 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வந்தனர். அவர்களில் 154 பேர் தமது குடும்பங்களுடன் இணைந்து கொண்டனர். ஏனைய 80 சிறுவர்களின் பாதுகாப்புக் கருதி 2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு நகர்ந்து 4 வாடகை வீடுகளில் வைத்துப் பாரமரிக்கப்பட்டு வந்தனர். தற்போது நாயன்மார்கட்டில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் கிராமத்தில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
இந்தக் கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்றும், ஆண், பெண், இளைஞர் இல்லம், கணினி நிலையம் என்பனவும் உள்ளன.
சிறுவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணிப் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். அன்பு, பாசம், ஆதரவுக்காக ஏங்கி நிற்கும் சிறார்களை இந்தக் கிராமம் ஏற்கத் தயாராக உள்ளது.
இல்லங்களில் அநாதரவான ஆயிரத்து 50 சிறார்கள் எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமங்களில் தங்கியுள்ளனர். ஏற்கெனவே மொரட்டுவ, காலி, மொனராகல, நுவரெலியா, அநுராதபுரம் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
6 ஆவது இட மாக யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் சிறார்களின் கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன. (வ-4)

# வலி.தென்மேற்குப் பிரதேச சபை சுகாதார தொழிலாளரின் கோரிக்கை

*சாதகமாகப் பரிசீலிப்பதாக உறுதிமொழி*

வலி.தென்மேற்கு, ஜன.7
வாகனம் மூலம் மலக் கழிவை அகற்றுவதற்கு வழங்கப்படும் வேதனத்தை 100 ரூபாவால் அதிகரிக்குமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பதில் தவிசாளரைக் கோரியுள்ள சுகாதாரத் தொழிலாளர்கள், வாகனத்தைக் கழுவித் துப்புரவு செய்வதற்கு 600 ரூபா வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.
வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பதில் தவிசாளருக்கும் சுகாதாரத் தொழிலாளருக்கும் இடையிலான கலந்துரையாடல் மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் சுகாதாரப் பரிசோதகர் இ.சோதீஷ், சுகாதார மேற்பார் வையாளர் எஸ்.சாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்தக் கலந்துரையாடலில் சுகாதாரத் தொழிலாளர் களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-
✱ மலக்கழிவு நீர் அகற்றுவதற்கு 100 ரூபாவும், மலக் கழிவு அகற்றுவதற்கு 150 ரூபாவும் வழங்கப்பட்டு வருகிறது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இந்த நேரத்தில் வேதனத்தை 100 ரூபாவால் அதிகரிக்க வேண்டும்.
✱ மலக்கழிவு அகற்றும் வாகனத்தின் பாதுகாப்புக் கருதி மாதத்தில் மூன்று தடவைகள் வாகனத்தைத் துப்புரவு செய்ய வேண்டியிருப்பதால் இதற்கான கொடுப்பனவை 600 ரூபாவாக வழங்க வேண்டும்.
✱ ஏற்கெனவே வழங்கப்பட்ட சீருடைகள் கைவசம் இருப்பதால் இந்த வருடத்துக்காக வழங்கப்படும் சீருடைக்குரிய பணத்தை தரவும்.
✱ தொழிலாளர்களுக்கான கையுறைகள், சப்பாத்துக்கள், மழை அங்கிகள், துடைப்பான்கள் வழங்கப்பட வேண்டும்.
✱ கடமை நேரத்துக்குப் பின்பு செய்யும் வேலைக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்க வேண்டும்.
✱ தமக்கு வழங்கப்படும் உபகரணங்கள் தரமுள்ளவையாக இருக்க வேண்டும்.
✱ சந்தைகளிலுள்ள குப்பை வாளிகள் யாவும் சேதமடைந்துள்ளமையால் புதிய குப்பை வாளிகள் வைக்க வேண்டும். அத்துடன் சவர்க்காரமும் ஒழுங்காக வழங்கப்பட வேண்டும்.
✱ திண்மக் கழிவுகளை ஏற்றும் டிராக்டர் பெட்டிகளுக்கு தட்டி. வலை இல்லாததினால் குப்பைகளை ஏற்றிச் செல்லும் போது பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதிருக்க தட்டி வலை செய்துதர வேண்டும்.
✱ திண்மக் கழிவுகளை அகற்றும் டிராக்டர் பெட்டிகளைத் தினமும் துப்புரவு செய்வதற்கு வசதியாக ஆனைக்கோட்டை உப-அலுவலகத்தில் இடம் ஒதுக்கித் தர வேண்டும்.
✱ தொழிலாளர் கடமைக்கு 4.5 கி.மீற்றர் தூரம் வரை செல்ல வேண்டியிருப்பதால் சைக்கிள் வாங்குவதற்குக் கடன் வழங்கப்பட வேண்டும்.
தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட பதில் தவிசாளர், நியாயமான கோரிக்கைகள் சபையில் முன்வைக்கப்பட்டு உரியதீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார். (ஒ-115)

# உருளைக்கிழங்கு செய்கை குடாநாட்டில் பாதிப்பில்லை

*200 ஏக்கரில் விளைச்சல்*



யாழ்ப்பாணம், ஜன.7
யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக் கிழங்குக்கு சாதகமான காலநிலை நிலவியதால் ஆரோக்கியமான வளர்ச்சி பெற்றுள்ளது.
இதனால் இருநூறு ஏக்கர் வரை உருளைக்கிழங்கு உற்பத்தி இடம் பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபால சுந்தரம் தெரி வித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு சாதகமான காலநிலை நிலவியதால் ஆரோக்கியமான வளர்ச்சி பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், இருநூறு ஏக்கர் வரை உருளைக் கிழங்கு உற்பத்தி இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்த யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த மழை காரணமாகவும் தொடர்ந்தும் தூறல் மழையும் மப்பும் மந்தாரமுமாக இருப்பதால் உருளைக் கிழங்கில் பிற்கூற்று வெளிறல் நோய்த் தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது.
விவசாயிகள் முற்பாதுகாப்பாக உருளைக்கிழங்குப் பயிரில் "டக் கோனில்" அல்லது நோய் அறிகுறி காணப்படின் 'சப்றியோ', 'டைற்கேன்', 'மன்கோ செப்' போன்றவற்றில் ஒன்றை உடனடியாகப் பயன்படுத்துக. பயிரைச் சூழ்ந்திருக்கும் மழை நீரை உடனடியாக முற்றாக வெளியில் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தெரிவித்தார். (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர் பாதுகாப்புக்கு துப்பாக்கி வழங்க வேண்டும்

*பழ.நெடுமாறன் கோரிக்கை*



சென்னை, ஜன.7

இலங்கைக் கடற்படையினரிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தமிழக மீனவர்களுக்குத் துப்பாக்கி வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மீனவர்கள் பிரச்சினையைத் தீர்க்கவும், அவர்களின் பாதுகாப்புக்காகவும் மீனவ மக்களுக்குத் துப்பாக்கி வழங்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் மீனவர்கள் நலன் பாதுகாக்க மீனவர் பாதுகாப்புப் படை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

உலகிலேயே 5ஆவது இடத்தில் இருக்கும் மிகப் பெரிய இந்தியக் கடற்படை தமிழக மீனவர்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது.

தமிழர் விரோதப் போக்கையே இந்திய மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதற்குரிய பயனை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் புரிந்துகொள்வார்கள்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மீன்பிடி அமைச்சர் ராஜிதவை சந்திப்பர் தமிழக மீனவர்கள்

சென்னை, ஜன.7

தமிழக மீனவர்கள் பிரநிதிகள் இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவை புதுடில்லியில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இந்தத் தகவலை இலங்கை மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசகர்களில் ஒருவரும் இந்திய- இலங்கை மீனவர்கள் சங்க அமைப்பின் இலங்கை இணைப்பாளருமான எஸ்.பி. அந்தோனிமுத்து வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "தமிழக மீனவர் பிரதிநிதிகளின் வேண்டு கோளின் படியே இந்தச் சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது. டில்லியில் தமிழக மீனவர்கள் இலங்கை அமைச்சரைச் சந்திப்பதற்கான திகதி இன்னும் குறிக்கப்படவில்லை. இந்தச் சந்திப்பு நிச்சயம் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துள்ளன. அதேவேளை, எதிர்வரும் 20ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலங்கை-இந்திய மீனவர்கள் இடையிலான பேச்சு வார்த்தைக்காக இலங்கைத் தரப்பினருக்கு இன்னும் உத்தியோகபூர்வமான அழைப்பு கிடைக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார்.



"தமிழக மீனவர் பிரதிநிதிகளின் வேண்டு கோளின் படியே இந்தச் சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது. டில்லியில் தமிழக மீனவர்கள் இலங்கை அமைச்சரை சந்திப்பதற்கான திகதி இன்னும் குறிக்கப்படவில்லை.

அதேவேளை, எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழக மீனவர் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் வடக்கு மீனவர் பிரதிநிதிகள் இடம் பெறவில்லை என்ற குற்றச்சாட்டை இலங்கை மீன்பிடித் துறை அதிகாரிகள் மறுத்துள்ளனர். இந்தியா செல்லவுள்ள இலங்கை மீனவர் பிரநிதிகள் 15 பேரில் 10 பேர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இருந்தபோதும், இந்த விவகாரத்தில் அனுபவமுள்ள மீனவர் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டாளர் ஹேர்மன்குமார, "இருதரப்பு மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் காலங்காலமாகப் பேச்சு நடத்தி வந்துள்ள இலங்கையின் முக்கிய மீனவர் பிரதிநிதிகளை உள்ளடக்காமல் நடைபெறும் இந்தச் சந்திப்பின் முடிவுகள் பயன் இருக்குமா என்பது சந்தேகமே" என்று தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கை இராணுவத்துக்கு பயிற்சிகள் வழங்கக் கூடாது

*ஜி.கே.வாசன் கோரிக்கை*

புதுடில்லி, ஜன.7

இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினருக்குப் பயிற்சிகள் வழங்குவது தொடர்பான உடன்படிக்கைகள் எதனையும் இந்தியா ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே.வாசன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினருக்கு இந்திய இராணுவம் பயிற்சிகள் வழங்குவதற்குத் தமிழக மக்களும் அரசியல் தலைவர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. தமிழகத்தின் எதிர்ப்புக்கு மத்தியில் அவ்வாறான உடன்படிக்கைகள் எதனையும் இந்தியா ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. அதேவேளை, தமிழகம் மற்றும் இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தியா வெளிவிவகார அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுத்து வருகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## சைவப்புலவர் பரீட்சைக்கான கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜன.7

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர், இளம் சைவப் புலவர் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்குகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் க. கந்தசத்தியதாசன் தெரிவித்துள்ளார். (த-400)

# தமிழருக்கு நீதி கிடைக்கும்வரை தொடர்ந்து நான் போராடுவேன்

*வைகோ சூளுரை*



சென்னை, ஜன.7

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கிடைக்கும்வரை தொடர்ந்துபோராடுவேன் என்று தெரிவித்துள்ளார் ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

புதுடில்லியில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் இரு நாள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின்போது அந்த நாட்டு இராணுவம் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையால் ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழர்கள் இந்தபூமிப்பந்தின்பழமையான குடிகள் என்பதை வரலாற்று ஆய்வாளர்கள், தொல்லியல் துறையினர், மானுடவியலாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஈழத் தமிழர்களும் இலங்கையின் பூர்வீகக்குடிகள். அங்கு ஈழத் தமிழர்களும் சிங்களவர்களும் தனித் தனியாக ஆட்சி செய்த வரலாறும் உண்டு. ஆனால் இலங்கையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய ஈழத் தமிழர்களை சிங்களவர்கள் பல வகையிலும் புறக்கணிக்கத் தொடங்கியமையே தனி ஈழ உரிமைக்காகத் தமிழர்கள் போராடக் காரணமாக அமைந்தது.

ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் சிங்கள அரசுகள் தொடர்ந்து ஈடுபட்டன. அதன் உச்சக்கட்டமாக 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்று கூறித் தமிழ் இன அழிப்பு வேட்டையை நடத்தியது இலங்கை அரசு. அதற்கு இலங்கைக்குத் தேவையான ஆயுதங்கள், இராணுவப் பயிற்சி என அனைத்து உதவிகளையும் இந்திய அரசும் செய்தது. அந்தப் போரில் ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

போருக்குப் பின்னரும் அங்குள்ள தமிழர்கள், குழந்தைகள் மீதும் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தனது கடமையைச் செய்யத் தவறிவிட்டது. இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள் தொடர்பாக சனல்-4 வெளியிட்ட காணொலிக் காட்சிப் பதிவுகள் ஆதாரமாகும். ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை இறுவட்டுக்கள் மூலமாகவும், புத்தகம் வாயிலாகவும் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களிடமும் கொண்டு செல்லும் முயற்சியை நான் மேற்கொண்டு வருகிறேன்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண சர்வதேசத்தின் மேற்பார்வையில் இலங்கையில் ஈழத் தமிழர்கள் வாழும் பகுதியில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்து, இனப் படுகொலை குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது கூட்டாளிகள் மீது சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும்வரை எனது இறுதி மூச்சு வரை தொடர்ந்து போராடுவேன்'' என்று தெரிவித்துள்ளார். (ற)

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

கிளிநொச்சி, ஜன.7

கிளிநொச்சி - முழங்காவில் வீதியின் புதுமுறிப்புக் குளத்துக்கு அருகிலுள்ள பகுதிகளில் வாகனங்களின் பயணிக்கும் போது அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

புதுமுறிப்புக்குளத்தின் வாய்க்காலில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

இதனால் வீதி ஓரத்திலேயே கற்கள், மண் என்பன குவிக்கப்பட்டுள்ளன. இந்த வீதியும் மிகவும் ஒடுங்கியதாகவும், நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாததால் குன்றும் குழியுமாகவும் காணப்படுகின்றது.

இந்த வீதியிலேயே கிளிநொச்சியிலிருந்து கோணாவில், அக்கராயன், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், முழுங்காவில், முக்கொம்பன் போன்ற இடங்களுக்கு பஸ்கள் சென்று வருகின்றன. இதனால் புது முறிப்புக்குளத் துக்கு அருகிலுள்ள வாய்க்கால் வேலைகள் நடைபெறும் பகுதிகளில் பயணிக்கும் வாகனங்களை மிகவும் அவதான மாகப் பயணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-426)

# பிரதிப் பொலிஸ்மா அதிபரை மக்கள் சந்திக்க ஏற்பாடு

வவுனியா மாவட்ட மக்கள் வவுனியா மாவட்டத்துக்கான பிரதி பொலிஸ்மா அதிபரை பிரதி புதன்கிழமைகளில் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொது மக்களால் பொலிஸ் நிலையங்களில் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் தொடர்பாக உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப் படாமல் இருப்பின் அல்லது ஏற்றுக் கொள் ளப்படாமல் இருப்பின் இது தொடர்பாக வவு னியா பொலிஸ் நிலையத்தில் பிரதி புதன் கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வவுனியா மாவட்டத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்து இது தொடர்பாக முறைப்பாடு தெரிவிக்க முடியுமென வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த விஜேயசிங்க தெரிவித்துள்ளார். (க-421)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட செயலக நிதிக்கிளையில் பொது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திருமதி இனிதா தவரூபன் அவர்களின் பாசமிகு தந்தையார்

செல்லத்துரை இராசலிங்கம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதம கணக்காளர், கணக்காளர்.
நிதிக்கிளை மற்றும் களஞ்சிய நலன்புரிக்கிளை உத்தியோகத்தர்கள்
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட செயலக நிதிக்கிளையில் பொது முகாமைத்துவ உதவியாளரும், எமது கழகத்தின் உப பொருளாளரும் ஆகிய திருமதி இனிதா தவரூபன் அவர்களின் பாசமிகு தந்தையார்

### செல்லத்துரை இராசலிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக்கழகம்

## மரண அறிவித்தல்

### கனகசபை லூர்த்துமலர்



இத்தாவில் பளையைப் பிறப்பிடமாகவும், நவாலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை லூர்த்துமலர் நேற்று (06.01.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் மேரி (ரஞ்சிதம்), மங்களதாஸ் (றீகன்) ஆகியோரின் பாசமிகு தாயும் விக்ரர்பேபியின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.01.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இத்தாவில் புனித பார்பராம்மாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
றீகன் (மகன்)
077 8543816

இத்தாவில், பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,134

## லொறிகள் பதிவு



யாழ்ப்பாணம், ஜன.7
யாழ்.மாவட்டத்தில் பாரவூர்திகள் சங்கத்தின் கீழ் 1,134 பாரவூர்திகள் (லொறிகள்) பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்டப் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் ஆர்.ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் கப்பல்களில் இருந்து பொருள்களை ஏற்றி இறக்கும் போது அவற்றைக் கொண்டு செல்வதற்கான சேவையில் பாரவூர்திகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அதனைத்தொடர்ந்துமகேஸ்வரி நிதியம் ஊடாக மணலை ஏற்றி இறக்குவதற்கான சேவைக்கு பாரவூர்திகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

தற்போது யாழ்.மாவட்டத்தில் 1,134 பாரவூர்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள போதும் வருமானத்துக்காக அந்தந்த பிரதேச சபைகளில் அனுமதி பெற்று மணல் ஏற்றி வருகின்றன. குறிப்பாக கண்டாவளை பிரதேசத்தில் மணல் ஏற்றுவதற்குப் பதியப்பட்ட பாரவூர்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன-என்றார். (வ-14)



# பிடுங்கி எறியப்பட்டன நடப்பட்ட பெயர்ப்பலகைகள்

வலி.வடக்கு, ஜன.7
குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தால் குப்பிளான் பகுதியில் சனிக்கிழமை வீதிகளுக்கு நடப்பட்ட ஐந்து பெயர்ப் பலகைகள் விசமிகளால் 24 மணி நேரத்துக்குள் வேண்டும் என்றே பிடுங்கி எறியப்பட்டுள்ளன .

வீதிகளுக்கு போடப்பட்ட பெயர் பலகைகள் பிடுங்கி எறியப்பட்ட சம்பவம் குறித்து வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷுக்கு நேற்று முன்தினம் காலை உடனடியாகக் குறிப்பிட்ட பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பிரதேச சபைத் தலைவர் கருத்து தெரிவிக்கையில்;

சிலருடைய அடாவடித்தனமான செயற்பாடுகளை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குறித்த விவரங்களை அந்தந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் தெரிவித்துள்ளார்கள். இது குறித்து பொலிஸார் நடவடிக்கை எடுத்ததும் மீண்டும் உரிய பெயர்ப் பலகைகள் பொதுமக்களின் நன்மை கருதி உரிய வீதிகளில் நடப்படும் என்று தெரிவித்தார். (வ-86)

# வலி.மேற்கில் விரைவில் சிவில் சமூகக் குழு

## *பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு*

வலி.தென்மேற்கு. ஜன.7
இந்து ஆலயங்கள் பல தற்போது இடிக்கப்படுகின்றன. திருட்டுக்கள் இடம்பெறுகின்றன. இந்த அசம்பாவிதங்கள் தொடர்பாக வெறும் அறிக்கைகள் விடுவதால் மட்டும் எதையும் சாதித்துவிட முடியாது. இவற்றை மேற்கொள்வோர் திட்டமிட்டு மிகத் தெளிவாகவே செய்கின்றார்கள். இன்றைய எமது பொருளாதார நிலையில் மீண்டும் அவற்றை அமைக்க முடியாது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். எனவே, ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சிவில் சமூகக் குழுவை விரைவில் வலிகாமம் மேற்கில் உருவாக்கவுள்ளேன்.

இவ்வாறு வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஜங்கரன் சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வராலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை விழாவில் கலந்துகொண்டு பேசும்போது தெரிவித்தார்.

ஆலயத்தில் பரிபாலன சபைத் தலைவர் தி.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தவிசாளர் தொடர்ந்து பேசம்போது கூறியதாவது:

இந்து மதம் தொடர்பாக இன்று பல விழிப்பூட்டும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நிலை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று அல்ல. எமது கலாசாரம், பண்பாடு என்பன பல வழிகளிலும் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. நாம் இந்த நாட்டில் சுயாதீனமான வகையில் எமது கலாசாரம், பண்பாட்டைப் பேணமுடியாத நிலை மறைமுகமாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. பல ஆயிரம் ஆண்டு காலமாகப் பாதுகாக்கப்பட்ட எமது இந்து மதம் இன்று பல வழிகளிலும் தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றது. வெறுமனே இறைபக்தியை மட்டும் கொண்டதல்ல மதம். ஒரு சமூகத்தினுடைய பல விடயங்களை உள்ளடக்கியதே மதம். இவ்வாறான இந்த மதத்தை அழித்தால் அல்லது பலவீனப்படுத்தினால் எமது இனத்தினுடைய இருப்பும் பலவீனப்படும். இதுவே இன்றைய பிரதான நோக்கம் இந்த நோக்கத்தை அடைய பல மார்க்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இன்று எமது மதத்தைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் ஒவ்வொரு ஆலயங்களிலும் அறநெறிப் பாடசாலைகள் ஏற்படுத்தப்படும். குறிப்பாக வலி.மேற்கில் இந்த நடவடிக்கை அடுத்த ஆண்டு முதலாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை ஏற்படுத்தப்படும். இந்த ஆலயங்களில் பிரதி வெள்ளி தோறும் மாலை 4.30 மணிக்குப் பின் அறநெறி வகுப்பு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (வ-115)

# கசிப்பு உற்பத்தி குடாநாட்டில் கட்டுக்குள்

## வன்னிப் பிரதேசத்தில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7
குடாநாட்டில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள போதும் வன்னிப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள கடந்த வருட புள்ளி விவரங்களின் அடிப்படையில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் குடாநாட்டில் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் வன்னிப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

குடாநாட்டில் அரச சாராயத்தின் வருகை தாராளமாக இருப்பதாலும் மதுப் பிரியர்களது நாட்டம் அரச சாராயத்தின் மீது திரும்பியுள்ளதாலும் கசிப்பு உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளனர்.

அத்துடன் கசிப்பு உற்பத்தியை மேற்கொள்வதற்கான சாதகமான இடங்கள் இல்லாத காரணத்தாலும் கசிப்பு உற்பத்திகள் மேற்கொள்ளப்படவில்லை.

எனினும் வன்னிப் பிரதேசத்தில் அரச சாராயத்தை வாங்குவதற்கு மதுப் பிரியர்கள் நகர்ப் புறங்களை நோக்கி வர வேண்டிய சூழல் காணப்படுவதால் கசிப்பு உற்பத்தியாளர்கள் இதனைத் தமக்குச் சாதகமாக்கி காட்டுப் பிரதேசங்களில் உற் பத்தி நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகின்றனர். (வ-14)

# சோளாவத்தை கிராமத்துக்கு மின்னிணைப்பு பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.7
கடந்த 30 வருடங்களுக்கு பின்னர் வேலணை சோளாவத்தை கிராமத்துக்கு மின்னிணைப்பு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் சில வாரங்களில் சோளாவத்தை கிராமம் முழுமையான மின்னொளியைப் பெறும் என்று வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

சோளாவத்தை கிராமத்துக்கு மின் வழங்குவதற்காகக் கடந்த வருடம் முயற்சிக்கப்பட்டது.

எனினும் வடக்கின் வசந்தம் திட்டம் மூலம் தற்போது திட்டம் விரைவில் முழுமை பெறும்.

இதனைத் தொடர்ந்து செட்டிபுலம் கிராமத்துக்கு வடக்கின் வசந்தத்தின் கீழான மின் விநியோகம் ஆரம்பிக்கப்படும்- என்றார். (வ-41)

# அ.அட்டை பெற்றுக்கொள்ள நடமாடும் சேவை

முள்ளியவளை, ஜன.7
கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்குமான தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் நாளை மறுதினம் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணிவரை நடத்த ஏற்படாகியுள்ளது.

சர்வோதயம் மற்றும் கரித்தாஸ் நிறுவனங்கள் இந்த நடமாடும் சேவைக்கு அனுசரணைவழங்கியுள்ளன. (ஒ-433)

# சுற்றுமதில் அமைக்கும் பணி அடாவடித்தனத்தால் தடை

## *வலி.தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கான*

வலி.தென்மேற்கு. ஜன.7
வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தின் பாதுகாப்புக் கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள சுற்று மதில் அமைக்கும் பணிகள் அருகில் வசிப்பவர்களின்அடாவடிச்செயற்பாட்டால் தடைப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நிதியுதவியுடன் வாங்கிய காணியில் பல மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட மாடிக் கட்டடத்தில் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் இயங்கி வருகின்றது.

குறித்த காரியாலயத்தின் பாதுகாப்புக் கருதி சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய பின்புறத்திலுள்ள வேலி அகற்றப்பட்டு சுற்றுமதில் கட்டும் பணிகள் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

அந்த நேரத்தில் அருகில் வசிப்பவர்கள் அங்கு வந்து சுற்றுமதில் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் சுற்றுமதில் அமைக்கும் பணி தடைப்பட்டுள்ளது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை,இந்தவேலையைப் பார்வையிடுவதற்காக உறுப்பினர் ஒருவர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் சகிதம் அவ்விடத்துக்குச்சென்ற போது அவரைக் கல்லைக் காட்டிப் பயமுறுத்திய பெண்ணொருவர் தகாத வார்த்தை களால் திட்டித் தீர்த்துள்ளார்.

குறித்த பெண்ணின் செயல் குறித்து உறுப்பினர் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்து சென்று விசாரணையைத் தொடர்ந்துள்ளனர். (வ-115)

# கிராம ரீதியாக ஏற்றப்படும் கால்வாய் நோய்த்தடை தடுப்பூசி மருந்து

அச்சுவேலி, ஜன.7
யாழ்.மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கால்வாய் நோய்த் தடை மருந்து சகல பிராந்திய கால்நடை வைத்தியர் பிரிவிலும் கிராம வாரியாக ஏற்றப்படுகின்றது. 5 மாதங்களுக்கு மேற்பட்ட வயது உள்ள சகல மாடுகளுக்கும் தடை மருந்து ஊசியை ஏற்றிக் கொள்ளுமாறும் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணியை மேற்கொள்வதற்கு வசதியாக மத்திய கால்நடை உற்பத்தி சுகாதார அமைச்சு இரண்டு வாகனங்களையும் வழங்கி உள்ளது என்று யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்திசுகாதாரதிணைக்களப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஆரம்பத்தில் கோப்பாய், தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, சங்கானை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளில் காணப்பட்ட நோய் ஏனைய பிரிவுகளுக்கும் பரவக்கூடும் [illegible] சகல பிரதேசங்களிலும் நோய்த் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு சமகாலத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

[illegible] நான்கு வாகனங்களில் நடமாடும் அணிகள் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. அத்துடன் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகளும் தடுப்பூசி ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நோய்த் தடை மருந்தை ஏற்றுவதற்கு வசதியாக மத்திய கால்நடை உற்பத்தி சுகாதார அமைச்சு நுவரெலியா, வவுனியாவிலிருந்து தலா ஒரு வாகனத்தை அனுப்பி உதவியுள்ளது என்று தெரிவித்தார்.

"-"

**ஆரம்பத்தில் கோப்பாய், தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, சங்கானை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளில் காணப்பட்ட நோய் ஏனைய பிரிவுகளுக்கும் பரவக்கூடும்.**


மாடுகள் வெளியான இடங்களில் நடமாடும் போது நோய் கால்களிலும் வாயிலும் தொற்றிக் கொள்ளும். இதனைத் தடுப்பதற்கு 5 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட வயது கொண்ட மாடுகளுக்குத் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. தடுப்பூசி கிராம அலுவலர் பிரிவு வாரியாக மற்றும் உபகிராமங்களில் மத்தியான இடங்களில் வைத்து ஏற்றப்பட்டு வருகின்றன. (வ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

*சரத்பவார் அறிவிப்பு*

மும்பை, ஜன.7
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளார் மத்திய அமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவருமான சரத்பவார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் இருப்பது கட்சிப் பணிகளில் கவனம் செலுத்த உதவியாக இருக்கும். ஆனால் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு உத் தேசித்துள்ளேன். மகாராஷ்டிர அரசில் இடம் பெற்றுள்ள மூத்த அமைச்சர்கள் சிலர் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட கேட்டுக்கொள்ளப்படுவார்கள்" என்று தெரிவித்துள்ளார்.(ற)




சென்னையை அடுத்துள்ள பறவைகள் சரணாலயமான புலிகாட் ஏரியில் ஆயிரக்கணக்கில் வெளிநாட்டுப் பறவைகள் வந்துள்ளன. சிறகடித்து வானில் வட்டமிடும் நாரை கூட்டம்.

# கட்சி தொடங்கும் எண்ணம் இல்லை

*ஜி.கே.வாசன் தெரிவிப்பு*

சென்னை, ஜன.7
புது கட்சி எதுவும் தொடங்கும் எண்ணம் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"கடந்த 10 ஆண்டுகளில் காங்கிரஸ் தலைமையிலான மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு சிறப்பாக செயற்பட்டுள்ளது. தே.மு.தி.க. போன்ற மத சார்பற்ற கட்சிகள் காங்கிரஸ் கூட்டணியில் சேர்ந்தால் அதை வரவேற்போம்.
நாடாளுமன்றத் தேர்தலில் 2004 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கூட்டணி பெற்ற இடங்களை விட 2009ஆம் ஆண்டு அதிக இடங்களைக் கைப்பற்றியது. 2014 ஆம் ஆண்டு தேர்தலில் முன்பு பெற்றதைவிட அதிக இடங்களை வென்று காங்கிரஸ் கூட்டணி மத்தியில் ஆட்சியை பிடிக்கும்.



நான் தனிக்கட்சி தொடங்கப் போவதாக வந்த செய்தி அடிப்படை ஆதாரமற்றது. புதிய கட்சி எதுவும் ஆரம்பிக்கும் எண்ணம் எனக்குத் துளியும் இல்லை" என்று தெரிவித்துள்ளார்.(ற)

## எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்ற தேர்தல்

புதுடில்லி, ஜன.7
இந்திய நாடாளுமன்றத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் 5 கட்டங்களான நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் அல்லது மார்ச் மாத முதல் வாரத்தில் வெளியாகலாம் என கூறப்படுகிறது.
நாடாளுமன்றத் தேர்தலுடன், ஆந்திரா, ஒரிசா, சிக்கிம் ஆகிய மாநிலங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட உள்ளது. நாடாளுமன்றத்தின் தற்போதைய பதவி காலம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியுடன் நிறைவடைகின்றது. அதையடுத்து எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் புதிய அரசு அமைக்கப்பட வேண்டும்.(ற)

## ரஜினியிடம் ஆதரவு கோருகிறது பா.ஜ.க.


திருச்சி, ஜன.7
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக முன்னணி நடிகர் ரஜினிகாந்த் உட்பட தமிழகத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் மற்றும் தலைவர்களிடம் ஆதரவு கோரப்பட உள்ளது என்று தெரிவித்துள்ளார் தமிழக பா.ஜ.க. தலைவர் பொன். ராதாகிருஷ்ணன்
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியால் வெற்றி பெற முடியாது. அதன் காரணமாகவே பிரதமர் மன்மோகன்சிங், இளைய தலைமுறைக்கு வழிவிட்டு பிரதமர் பதவிக்கு போட்டியிடப்போவதில்லை எனக்கூறி உள்ளார். அவரின் விலகல் நாட்டிற்கு நல்லது தான். அவர் காங்கிரஸ் அரசின் கைப்பாவையாகத் தான் இருந்துள்ளார். அவர் நல்ல மனிதர், திறமை படைத்தவர் தான். ஆனால் செயற்பட முடியாமல் இருந்து விட்டார்.
நடிகர் ரஜினி காந்த் உட்பட தமிழகத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் மற்றும் தலைவர்களிடம் ஆதரவு கேட்க உள்ளோம். அதனால் பலமான அணியாக தமிழகத்தில் பாரதிய ஜனதா தேர்தலை எதிர்கொள்ளும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஜம்முவில் நிலநடுக்கம்

ஸ்ரீநகர், ஜன.7
ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவு கோலில் 3.4 ஆகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் தோடா, கிறிஸ்த்துவார், பெதவா போன்ற மாவட்டங்களில் உணரப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் எந்த வித சேதங்களும் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது.(ற)

## உயிரை பறித்த முட்டை

புதுவை, ஜன.7
வேக வைத்த முட்டை ஒன்றை முழுதாக விழுங்கிய ஒருவர் அது தொண்டையில் சிக்கியதால் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் புதுவையில் நடந்துள்ளது.
புதுவையைச் சேர்ந்த 37 வயதுடைய பாண்டியன் ஒரு குடிப்பிரியர். அச்சகம் ஒன்றில் பணியாற்றும் அவர் தினமும் வீடு செல்லும்போதே போதையேற்றிச் செல்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்.
இந்தநிலையில் நேற்று முன்தினமும் வழமைபோன்று போதையில் சென்ற பாண்டியன், இரவு உணவை ஒரு பிடி பிடித்தார். அப்போது இரவு உணவில் வைக்கப்பட்டிருந்த அவித்த முட்டையைப் பார்த்ததும் அவருக்கு விபரீத ஆசை ஏற்பட்டுள்ளது. முட்டையை எடுத்து அப்படியே 'லபக்' என்று வாயில் போட்டுக் கொண்டார்.
முட்டையை அப்படியே விழுங்கியபோது அது தொண்டையில் சிக்கிக் கொண்டு விட்டது. அதையடுத்து அவசர அவசரமான மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார் பாண்டியன். ஆனால் அவர் வழியிலேயே உயிரிழந்து விட்டார். (ற)



இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'ஜிஎஸ்எல்வி - டி 5' ரொக்கெட் ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.18 மணிக்கு வெற்றிகரமாக விண்ணுக்குச் செலுத்தப்பட்டது. அது 1982 கிலோ எடை கொண்ட 'ஜிசாட்-14' என்ற தொலைத்தொடர்பு செயற்கைக்கோளை இந்த ரொக்கெட் விண்ணில் நிலைநிறுத்தவுள்ளது. 'ஜிஎஸ்எல்வி-டி5' ரொக்கெட் 17 நிமிடங்கள் பயணம் செய்து 'ஜிசாட் - 14' செயற்கைகோளை பூமியிலிருந்து அதிகபட்சமாக 35 ஆயிரத்து 975 கிலோமீற்றர் தூரமும், குறைந்தபட்சம் 180 கி.மீற்றர் தூரமும் கொண்ட பாதையில் நிலைநிறுத்தும். ஜிஎஸ்எல்வி-டி5' இந்தியாவின் 8ஆவது ரொக்கெட் ஆகும். அதில் 2ஆவது முறையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கிரையோஜெனிக் இயந்திரத்துடன் இந்த ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஊழல் விவகாரத்தில் சமரசத்துக்கு இடமில்லை

*புதுடில்லி முதலமைச்சர் திட்டவட்டம்*

புதுடில்லி, ஜன.7
ஊழலைப் பொறுத்தவரை முன்னாள் முதலமைச்சர் ஷீலா தீட்சித் ஆகட்டும், பா.ஜ.க.வினர் ஆகட்டும், ஆம் ஆத்மி கட்சியினர் ஆகட்டும் யாராக இருந்தாலும் அவர்களோடு சமரசமாகப் போகும் பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் புதுடில்லியின் புதிய முதலமைச்சார் அரவிந்த் கெஜ்ரிவால்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"டில்லியின் முன்னாள் முதலமைச்சர் ஷீலா தீட்சித் ஆட்சியின் போது நடைபெற்ற ஊழல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ஜ.க. தலைவர் ஹர்ஷ வர்த்தன் என்னிடம் தெரிவித்தார். ஊழல்களை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை கொடுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளேன்.
ஊழல் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தப்பிக்க விட மாட்டேன். ஊழலொழி சமரசம் என்ற பேச்சுக்கே என்னிடம் இடமில்லை. ஊழலை எதிர்த்து போராடுவதில் எனது ஆயுட்காலம் வரையில் உறுதியுடன் நிற்பேன். அது ஷீலா தீட்சித் ஆகட்டும், அவரது அமைச்சர் ஆகட்டும், எவ்வளவு பெரிய அரசு அதிகாரி ஆகட்டும் அல்லது காங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சியினர் ஆகட்டும், ஏன்... எங்களது ஆம் ஆத்மி கட்சியினர் ஆகட்டும், ஊழல் செய்பவர்கள் மீது கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
கடந்த ஆட்சியின் போது ஊழல் தடுப்பு பிரிவின் பல பணியிடங்கள் நிரப்பப்படாமலேயே கிடப்பில் போடப்பட்டன. அந்தப் பதவிகளில் எல்லாம் நேர்மையான அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன்.



அத்துடன் பொதுமக்களிடம் இருந்து அரச அதிகாரிகளின் ஊழல்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெறுவதற்கும் தனிப்பிரிவு உருவாக்கப்படும். அந்தப் பிரிவுக்கு மக்கள் அனுப்பும் முறைப்பாடுகள் விரைவாக விசாரிக்கப்பட்டு, தவறு செய்தவர்கள் அல்லது செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.(ற)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தோனேசியாவில் வடக்கு சுமாத்ரா தீவில் உள்ள 'சீனாபங்ஸ்' வெடித்துச் சிதறத் தொடங்கியுள்ளது. கடந்த சனிக்கிழமை முதல் குமுறத் தொடங்கியுள்ள இந்த எரிமலை இதுவரை 50 தடவைகளுக்கு மேல் வெடித்துச் சிதறி தீக்குழம்பைக் கக்கியுள்ளது.

## நெரிசலில் சிக்கி 14 பேர் சாவு

*சீனாவில் பரிதாபம்*



பீஜிங், ஜன.7

சீனாவில் மசூதி ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயம் அடைந்தனர்.

சீனாவின் கயுவான் நகராட்சி பகுதியில் உள்ள மசூதி ஒன்றில் சிறப்பு தொழுகை முடிந்து பாரம்பரிய உணவு வழங்கப் பட்டது. அதைப் பெறுவதற்காக கூடிய மக்களிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டு பலர் நெரிசலில் சிக்கிகொண்டனர். இதில் 14 பேர்உயிரிழந்தனர். 10 பேர் காயம் அடைந்தனர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்தவர்களில் 4 பேரின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற)

## கடத்தப்பட்டார் ஒசாமா

*அதிர்ச்சித் தகவலை வெளியிடுகின்றார் குவைத் பேராசிரியர் ஒருவர்*

குவைத், ஜன.7

அல் குவைதா அமைப்பின் முன்னாள் தலைவரான ஒசாமா பின்லேடன் அமெரிக்க சீல் படையினரால் சுட்டுக் கொல்லப்படவில்லை. அவர் அமெரிக்கப் படையினரால் கடத்தப்பட்டார் என்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார் குவைத் பேராசிரியர் ஒருவர்.

அல் குவைதா அமைப்பின் முன்னாள் தலைவரான ஒசாமா பின்லேடன் 2011ஆம் பாகிஸ்தானின் அபோட்டாபாத் நகரில் அமெரிக்க சீல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடல் கடலின் நடுவே அடக்கம் செய்யப்பட்டு விட்டது என்று அமெரிக்க அரசு அறிவித்தது.

இந்தநிலையில் இந்தச் சம்பவம் நடைபெற்று மூன்று ஆண்டுகள் நெருங்கும் சமயத்தில் குவைத் பல்கலைக்கழக பேராசிரியரான அப்துல்லா அல் நபீசி என்பவர் பரபரப்புத் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஒசாமா பின்லேடன் அமெரிக்க சீல் படையினரால் சுட்டுக் கொல்லப்படவில்லை. அவர் அமெரிக்கப் படைகளால் கடத்தப்பட்டார் என்பதே அந்தத் தகவல்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டார் என்று அமெரிக்கா கூறுவது உண்மையல்ல. அவர் கொல்லப்பட்டதாக அமெரிக்கா கூறுவதை நான் சந்தேகிக்கிறேன். அவர் அமெரிக்காவால் கடத்தப்பட்டார். இன்னும் உயிருடன் மறைத்து வைக்கப்பட்டுள்ளார் என்றே நான் நம்புகிறேன்.

உலகின் மிகப்பெரிய சக்தியான அமெரிக்கா 11 ஆண்டுகளாக வலை வீசி தேடி வந்த பின்லேடனை கண்டவுடன் சுட்டுக்கொன்று விட்டது என கூறப்படுவது நம்பக் கூடிய கதையல்ல.

கோடிக்கணக்கான நிதியைச் செலவழித்து 11 ஆண்டுகளாக அவரை தேடிக் கண்டுபிடித்த தன் பலன் தான் என்ன? என்னைப் பொறுத்தவரை ஒசாமா பின்லேடனை அமெரிக்கா கடத்திச் சென்று உயிருடன் வைத்துள்ளது. இந்த உண்மையைமறைப்பதற்காகஅவரை சுட்டுக் கொன்று பிணத்தை நடுக்கடலில் புதைத்து விட்டோம் என்று அமெரிக்கா பொய்யைப் பரப்பி வருகிறது" என்று தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் அப்துல்லா அல் நபீசி வெளியிட்டுள்ள இந்தத் தகவல் தற்போது மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா நாடுகளில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. (ற)

## காதலிக்காக தாடி வளர்க்கும் இளவரசர் ஹரி

லண்டன், ஜன.7

காதலியின் விருப்பத்தின்படி தாடி வளர்த்து வருகின்றார் பிரிட்டிஷ் இளவரசர் ஹரி. ஆனால் அதை உடனடியாக அகற்ற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார் பிரிட்டிஷ் ராணி எலிசபெத்.

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ்-டயானா தம்பதியின் 2ஆவது மகன் இளவரசர் ஹரி (வயது 29). இவர் இங்கிலாந்து விமானப் படையில் அப்பாச்சி ஹெலிகொப்டர் விமானியாகப் பணியாற்றுகின்றார்.

இவர் தற்போது சிறிய அளவில் தாடி வளர்க்கிறார். அது பிரிட்டன் பத்திரிகைகளில் படத்துடன் வெளியாகியிருந்தது. அதைத்தொடர்ந்து இந்த விவகாரம் அவரது பாட்டி ராணி எலிசபெத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. உடனே தாடியைச் சவரம் செய்யுமாறு அவர் இளவரசர் ஹரிக்கு உத்தரவிட்டுள்ளார். ஆனால் தாடியை உடனே அகற்ற இளவரசர் ஹரி மறுத்துவிட்டார். ஏனெனில் இவர் கிரசிடா போனாஸ் என்ற பெண்ணைக் காதலிக்கிறார். அவரது விருப்படியே தாடி வளர்க்கின்றார் என்று கூறப்படுகின்றது. தனது பாட்டியின் உத்தரவை ஏற்றுக் கொள்வதாக கூறியுள்ள ஹரி தனது காதலி பார்த்த பிறகே தாடியை அகற்றுவேன் எனக் கண்டிப்பாக தெரிவித்துவிட்டாராம். (ற)

## அல் - குவைதாவுக்கு எதிராக உதவத் தயார்

*ஈராக்குக்கு உதவிக் கரம் நீட்டுகிறது ஈரான்*



தெஹ்ரான், ஜன.7

அல்-குவைதா அமைப்பினருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈராக் அரசுக்கு உத வத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது ஈரான்.

இதுகுறித்து அந்நாட்டின் இராணுவத்தலைமையகம்அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

"ஈராக் விரும்பினால் ஈரான் இராணுவ உபகரணங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கத் தயராக இருக்கின்றது. ஈராக்கைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மனிதவளம் தேவையில்லை. எனவே தான் ஈரான் இராணுவத் தளபாடங்களை வழங்க முன்வந்துள்ளது. பயங்கரவாதிகளை எதிர்ப்பது தொடர்பில் இணைந்து பணியாற்றுவதற்கான அழைப்பு இதுவரை ஈராக்கிடம் இருந்து வரவில்லை." என்று தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் முக்கிய நகரான பலுஜா அல்-குவைதா அமைப்பால் கைப்பற்றப்பட்டுள்ளது. அந்த நகரை மீட்பதற்கு ஈராக் மிகப் பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்குத் தயாராகி வருகின்றது. இந்தநிலையிலேயே ஈரான் இவ்வாறு தெரிவித்துள்ளது. (ற)

## வன்முறைகளுடன் கூடிய தேர்தலில் அமோக வெற்றியீட்டியது ஆளும்கட்சி

### பங்களாதேஷில் இயல்புநிலை முற்றாகப் பாதிப்பு



டாக்கா, ஜன.7

பங்களாதேஷில் வன்முறைகளில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஷேக் ஹசீனா தலைமையிலான ஆளும் அவாமி லீக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

எதிர்க்கட்சிகள் தேர்தலை புறக்கணித்த நிலையில் பங்களாதேஷில் நேற்றுமுன்தினம் திட்டமிட்டபடி வாக்குப்பதிவு நடந்தது. வன்முறைகள் காரணமாக பெரும்பாலான மக்கள் வீடுகளை விட்டு வெளியே வராததால் மந்தமான நிலையிலேயே இருந்தது. தேர்தல் நடைபெற்ற 59 மாவட்டங்களிலுமொத்தமுள்ள 300 தொகுதிகளில் 147 தொகுதிகளுக்கு காலை 8 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 4 மணி வரை நடைபெற்றது.

எதிர்க்கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்திருந்த நிலையில் தேர்தலில் களமிறங்கிய 390 வேட்பாளர்களில் பெரும்பாலானவர்கள் அவாமி லீக் மற்றும் அதன் கூட்டணிக் கட்சியான ஜாதீயக் கட்சியை சேர்ந்தவர்கள். மீதமுள்ள 153 தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படவுள்ளனர்.

தேர்தலை கண்டித்து எதிர்க்கட்சியினர் நடத்திய வன்முறை சம்பவங்களில் பாதுகாப்புப் படை வீரர், தேர்தல் அதிகாரி உட்பட 21 பேர் உயிரிழந்தனர். 200க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

பங்களாதேஷில் கடந்த நவம்பர் மாதம் முதல் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் 275க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். (ற)

## பனிப் பொழிவு: அமெரிக்காவில் 13 பேர் சாவு

நியூயோர்க், ஜன.7

அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள பாஸ்டன் முதல் நியூயார்க் வரையிலான நகரங்களில் வீசி வரும் பனிப்புயலுக்கு இலக்காகி 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

அப்பகுதியில் கடும் பனிப்பொழிவுடன் காற்றும் வீசி வருகிறது. இதனால் இரவு நேர வெப்பநிலை பூஜ்ஜியத்துக்கும் கீழே சென்றுள்ளது. ஆயிரக்கணக்கான விமான சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன. (ற)

## உறைபனியில் சிக்கிய கப்பல்களை மீட்க அமெரிக்கா களமிறங்குகிறது




லண்டன், ஜன.7

அண்டார்டிக்கா பகுதியில் உறை பனியில் சிக்கியுள்ள ரஷ்ய மற்றும் சீனக் கப்பல்களை மீட்கும் முயற்சியில் களமிறங்கியுள்ளது அமெரிக்கா. இரு கப்பல்களையும் மீட்பதற்கு ஆஸ்திரேலிய அதிகாரிகள் கோரிக்கை விடுத்ததை அடுத்தே அமெரிக்கா இந்த நடவடிக்கையில் களமிறங்கியுள்ளது.

அதையடுத்து அமெரிக்கா தனது மிகப்பெரிய பனிதகர்ப்புக் கப்பலை குறித்த பகுதிக்கு அனுப்பவுள்ளது. இந்தப் பணியில் ஈடுபட அமெரிக்க கடலோரப்படை தயார் நிலையில் இருக்கிறது என்றும் பசிபிக் பகுதி அமெரிக்கக் கடற்படைத் தளபதி பால் சுகுந்ப்த் தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள்; நிகழ்வில் ஐவருக்கு சிவத்தமிழ் விருது



வலி. வடக்கு. ஜன.7

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டியின் 89 ஆவது பிறந்த நாள் அறக்கொடை நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மகரகம தேசிய கல்வி நிறுவக முன்னாள் பிரதி கல்விப் பணிப்பாளரும், அகில இலங்கை இந்து மாமன்ற சைவ சமய விவகாரக் குழுத் தலைவருமான கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் தம்பதிகளும்,

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா, யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா, யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் பல்வேறு துறைகளிலும் சேவையாற்றிய ஐந்து பேருக்கு சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

* உசன் சிவநெறிப் புலவர் இளைப்பாறிய பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரும், உசன் கஜகேணிப் பிள்ளையார் கோயில் முகாமையாளரும், கந்த சுவாமி கோயில் உதவி தர்மகர்த்தாவுமான வைத்திய கலாநிதி கந்தையா மாணிக்கம்.

* மல்லாகம் பழம்பெரும் ஒலி, ஒளி அமைப்பாளரும் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய நிர்வாக சபை உறுப்பினருமான நாகலிங்கம் தவமணிநாயகம்.

* நெல்லியான் சுழிபுரம் மூத்த இசைக்கலைஞர் வட மாநில கல்வித்திணைக்கள இளைப்பாறிய இசைத்துறை வித்தியாபதி கலாபூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளை.

* திருநெல்வேலி கொழும்பு மூத்த ஊடகவியலாளரும் எழுத்தாளருமான வீரகேசரி ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி இராஜதுரை.

* மட்டுவில் இளைப்பாறிய அதிபரும் சமயம், தமிழ் இலக்கிய எழுத்தாளருமான நாகமுத்து நல்லதம்பி ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளார்கள். (ஒ-86)

## அறக்கொடையாக ரூ.3½ லட்சம்

வலி. வடக்கு. ஜன.7

அன்னை சிவத்தமிழ் செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டியின் 89 ஆவது பிறந்த நாள் அறக்கொடை நிகழ்வுகளையொட்டி நாளை செவ்வாய்க் கிழமை அன்னையின் பிறந்த நாள் அறக் கொடையாக மூன்றரை லட்சம் ரூபா நிதி அன்னையின் பிறந்த நாள் அறநிதியச் சபையினால் அறக்கொடையாக வழங்கப் படவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த சுத்திகரிப்பு பிரிவுக்கு ஒரு லட்சம் ரூபாவும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சிறுவர் விடுதி பராமரிப்புக்கு ஐம்பதாயிரம் ரூபாவும், யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சி.ஈ. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் திறமையில் உச்சமும் வறுமைநிலையில் உச்சமும் கருத்தில் கொண்டு நூறு மாணவர்களுக்கு வழங்குவதற்காக இரண்டு லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. (ஒ-86)

## மாமனைக் குத்திய மருமகன் மாட்டினார்

மாமனைக் கத்தியால் குத்திவிட்டுப் பத்து மாதங்களுக்கு மேலாகப் பொலிஸாரின் கண்களில் அகப்படாமல் மறைந்து திரிந்த மருமகன் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். பொலிஸார் இவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

கடந்த வருடம் மார்ச் மாதம் சண்டிலிப்பாய் ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரை மரணத்தை ஏற்படுத்தும் வகையில் நெஞ்சில் கத்தியால் குத்திக் காயப்படுத்திய மருமகன் பொலிஸாரின் கண்களில் அகப்படாமல் மறைந்து வாழ்ந்து வந்தார்.

பத்து மாதங்களுக்குப் பின் இவரின் நடமாட்டம் குறித்து மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து. கொன்ஸ்டபிள்கள் வசீபன், குணசேன, சந்தன, சுரவீர ஆகியோர் நெல்லியடிக்கு விரைந்து சென்று மறைந்திருந்த மருமகனைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். (ஒ-115)

**விற்பனைக்கு**

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், அவற்றுக்கான அழகுப் பொருள்கள், [illegible] மற்றும் [illegible] 300/= [illegible] 300/= [illegible] மற்றும் பல இன [illegible] அனைத்தும் விற்பனைக்குள்ளன. (42075)(3,6,4)

யாழ் அக்கூரியம், நட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

**காரைநகர் பயிரிக்கூடல்**
**சுப்பிரமணிய சுவாமி கோயில்**
**மகோற்சவ விஞ்ஞாபனம் - 2014**

2014.01.07 செவ்வாய்க்கிழமை கொடியேற்றம்
2014.01.13 திங்கட்கிழமை வேட்டைத்திருவிழா
2014.01.14 செவ்வாய்க்கிழமை பெரிய சப்பறம்
2014.01.15 புதன்கிழமை தேர்த்திருவிழா
2014.01.16 வியாழக்கிழமை தீர்த்தம், கொடியிறக்கம்.

மகோற்சவ குரு : சிவஸ்ரீ.கு.சண்முகராஜக் குருக்கள் (ஆலய குரு)

பயிரிக்கூடல், காரைநகர். திருவிழா உபயகாரர்

### மீள் கேள்வி அறிவித்தல் - 2014
### கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட நிலையங்களை 01.01.2014 தொடக்கம் 31.12.2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்: அலுவலக நாள்களில் மு.ப 8.30 - பி.ப 3.00 மணி வரை 07.01.2014 - 10.01.2014

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியும் நேரமும்: 13.01.2014 - மு.ப 9.30 மணி வரை

கேள்வி திறக்கும் திகதி: 13.01.2014 - மு.ப 10.30 மணி

கேள்வி திறக்கும் இடம்: கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **தலைவர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி** என்ற முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில்கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி** என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும் என்பதுடன் அதன் நிழல்படப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT, நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| மாட்டிறைச்சிக் கடைப் பெயர் | | | | |
| 1 | கல்லாறு | 10,000.00 | 1,000.00 | 320,000.00 |
| 2 | ஸ்கந்தபுரம் | 20,000.00 | 1,000.00 | 711,000.00 |
| 3 | ஜெயந்திநகர் | 10,000.00 | 1,000.00 | 361,000.00 |
| 4 | ஊற்றுப்புலம் | 10,000.00 | 1,000.00 | 396,000.00 |
| 5 | வன்னேரி | 10,000.00 | 1,000.00 | 168,300.00 |
| 6 | அம்பலப்பெருமாள் சந்தி | 10,000.00 | 1,000.00 | 170,610.00 |
| 7 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | 655,000.00 |
| 8 | வட்டக்கச்சி | 20,000.00 | 1,000.00 | 577,500.00 |
| 9 | கிளிநொச்சி | 40,000.00 | 1,000.00 | 3,005,000.00 |
| கோழி இறைச்சிக் கடை | | | | |
| 1 | கிளிநொச்சி இல -02 | 40,000.00 | 1,000.00 | 1,420,000.00 |
| 2 | உருத்திரபுரம் D/10 | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| ஆட்டிறைச்சிக் கடை | | | | |
| 1 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | 90,000.00 |

நிபந்தனைகள்:

1 உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
2 கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்.
3 கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
4 சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
5 மேலதிக விபரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**[illegible]**
**தவிசாளர்,**
**கரைச்சிப் பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

**ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்**

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி

veta Spoken English
Veta Fluency Diploma



புதிய பிரிவுகள் ஆரம்பம்.

யாழ்ப்பாணம்: Mon,Wed: 9.30 a.m. Tue, Fri : 3.30 p.m.
நெல்லியடி: Sat, Sun 4.00 p.m. Mon,Fri 11.30 a.m.
சாவகச்சேரி: Mon, Wed, Fri 8.00 a.m.
சுன்னாகம்: Sat, Sun 10.00 a.m. Tue,Thu 11.00 a.m.

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள் Duration: 3 Months

பல்கலைக்கழகம் செல்லவுள்ளோருக்கான விசேட பிரிவுகள்

DMI COMPUTER EDUCATION

UK விசாவுக்கான ஆங்கிலப்பரீட்சை A1-Exam B1-Exam
City & Guilds Approved Center
IELTS •Unique Test Tips •Latest course Materials
IELTS பரீட்சை பதிவுகள் இலவசமாக எந்த கிளையிலும் மேற்கொள்ள முடியும்

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம்: No.113 கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி: M.M.V. வீதி, Tel.:021-226 2470
சாவகச்சேரி: கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம்: 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970

(C/10984)

**ஆசிரியர்களுக்கான வெற்றிடம்**

வடமராட்சி, தென்மராட்சிக்கான "GMATH Abacus" ஆசிரியர்களுக்கான வெற்றிடம்

4-13 வயது மாணவர்களுக்கு மனக் கணித கற்கை நெறியைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் வெற்றிடம் இருப்பதனால் ஆர்வமுடையோர் தங்கள் சுயவிவரக் கோவையினை 17.01.2014ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

L.Sepamalai Amma
Light House Lane
Near "Kannan Stores"
Point Pedro

குறிப்பு : 1. நேர்முகத் தேர்வுக்கான திகதி தங்களின் தொலைபேசி மூலம் அறியத் தரப்படும்.
2. பருத்தித்துறை, புலோலி, துன்னாலை, கரவெட்டி, நெல்லியடி, வியாபாரி மூலை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் கூடிய வெற்றிடங்கள் இருப்பதனால் மேற்குறிப்பிட்ட இடங்களினை வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மேலதிக தொடர்புகளுக்கு : 077 384 8004**
**புதிய பிரிவுகளுக்கான வகுப்புக்கள் யாவும் எமது அனைத்து நிலையங்களிலும் 18.01.2014 சனிக்கிழமை ஆரம்பமாகும்.**

(43043)(7,8,3)

**ஆளுமைத்திறன்/முகாமைத்துவப் பயிற்சிப்பட்டறை**
**Leadership/Management Training Programme**

யாழ்நகரில் முதன்முறையாக செல்வரத்தினம் நிமால் அவர்களின் ஆளுமைத்திறன், முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை

இடம் : கிறீன் கிறாஸ் ஹோட்டல்
33, ஆசீர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 19.01.2014 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : 9.00a.m. - 12.30p.m.
கட்டணம் : 2000.00

யாருக்காக?
+ பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கும்
+ முகாமைத்துவ தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும்
+ பாடசாலைக் கல்வியை முடித்து வேலை வாய்ப்பை எதிர்நோக்கியிருப்பவர்களுக்கும்
+ மற்றும் வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் மிகப்பொருத்தமானது

விரிவுரைகள் இலகு ஆங்கிலத்தில் தேவையான இடங்களில் தமிழ் விளக்கத்துடன் அளிக்கப்படும்.

பின்வரும் இடங்களில் முன்கூட்டியே ஆசனப் பதிவுகளை மேற்கொண்டு உங்கள் வரவை உறுதிசெய்து கொள்ளவும்.

1) Green Grass Hotel 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna.
2) Vista Vision Colour Lab 52, Palaly Road, Jaffna.
3) Sree Ram Jewellers 158, Kasthuriar Road, Jaffna.
4) Medi Aids Pharmacy 644, Point Pedro Road, Nallur, Jaffna.

தொடர்புகட்கு : S.Nimal (IEng.MIET,MBA,HCM)
077 377 1222
s.nimal@live.com

கட்டணம் 2000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்குச் செல்ல வேண்டாம்

## *மன்னார் இடர் முகாமைத்துவப் பிரிவினர் அறிவித்தல்*

மன்னார், ஜன.7

மன்னார் மீனவர்களை மறு அறிவித்தல் கிடைக்கும் வரை கடலுக்குச் செல்ல வேண்டாமென மன்னார் இடர் முகாமைத்துவப் பிரிவினர் அறிவித்தல் வழங்கியுள்ளனர்.



மன்னார் கடலில் உருவாகிய தாழமுக்கம் முல்லைத்தீவு கடல் வழியாகக் காங்கேசன் துறையைக் கடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்ட மீனவர்கள் நேற்று திங்கட்கிழமை காலை கடலுக்குச் செல்லவில்லை.

மன்னாரில் தொடர்ந்தும் மழை பெய்து கொண்டிருப்பதோடு காற்றும் வீசி வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட மீனவர்களை மறு அறிவித்தல் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் அறிவித்தல் வழங்கியுள்ளனர்.

இதனால் மீனவர்கள் எவரும் தொழிலுக்குச் செல்லவில்லை. தொழிலுக்குச் சென்ற மீனவர்களையும் கடற்படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதியில் உள்ள மக்களை வேறு இடத்துக்குச் செல்லுமாறு மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் ஒலி பெருக்கி மூலமாக அறிவித்தல்களை வழங்கி வருகின்றனர். (க-56)

**மீனவர்கள் எவரும் தொழிலுக்குச் செல்லவில்லை. தொழிலுக்குச் சென்ற மீனவர்களையும் கடற்படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.**

## மழையால் மகிழ்ச்சியும் கவலையும்

கிளிநொச்சி, ஜன.7

வன்னிப் பகுதியில் தற்போது இடையிடையே பெய்துவரும் மழை காரணமாக விவசாயிகள் ஓரளவு மகிழ்ச்சியடைந்த போதிலும் குடிசைகளில் வசிக்கும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான பருவ மழை உரிய காலத்தில் பெய்யாதமையால் அதனை நம்பி நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் பயிர்கள் வாடிவதங்கிய நிலையில் காணப்பட்டன. தற்போது ஓரளவு மழை பெய்து வருகின்றது. இதனால் விவசாயிகள் நெற்பயிர்களை ஓரளவாவது காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

ஆனால் போர் அழிவுகளால் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்து நான்கு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் தற்காலிகக் கொட்டகைகளில் அவல வாழ்க்கை அனுபவித்து வரும் மக்கள் இடையிடையே பெய்யும் மழை காரணமாக இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-426)

## ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்



முல்லைத்தீவு, ஜன.7

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உடையார் கட்டு ஏ-35 வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஓட்டோ விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடையார்கட்டு கமநல சேவை நிலையத்துக்கு முன்பாக கடந்த 4 ஆம் திகதி மாலை 6 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து சென்ற மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாகப் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சிப் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் புதுக்குடியிருப்பு பொலிஸார் ஓட்டோ சாரதியைக் கைது செய்துள்ளனர். (க-55)



நெடுங்கேணி பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர் குழு அங்கத்தவர்களின் பனைசார் உற்பத்தியை மேம்படுத்தும் பொருட்டு பொஸ்ரோ நிறுவனம் உபகரணங்கள் சிலவற்றை வழங்கியது. (க-435)

## போக்குவரத்து நெருக்கடியில் இரணைமாதா நகர் கிராமம்

கிளிநொச்சி, ஜன.7

கிளிநொச்சி இரணைமாதா நகர் கிராம மக்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் தினமும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இந்த இரணைமாதா கிராமம் அமைந்துள்ளது. இங்கு 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் கிராமம் ஒரு பின்தங்கிய பகுதியாகக் காணப்படுவதுடன் அடிப்படை வசதிகள் எவையும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் போக்குவரத்து வசதிகளும் இல்லாததால் இவர்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் முதலில் மீளக்குடியமர்ந்த பூநகரிப் பிரதேசம் அபிவிருத்தியைக் காணாத நிலையில் இருப்பதாகப் பலரும் தெரிவித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-55)

## கிராமிய வீதிகளை புனரமைத்து ரயில் கடவைகளையும் அமைக்கவும்

### *உமையாள்புரம் மக்கள் கோரிக்கை*

கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் உமையாள்புரம் கிராமத்தின் ஊடாகச் செல்லும் ரயில் பாதையைக் குறுக்கறுத்துச் செல்லுகின்ற கிராமிய வீதிகளை உடனடியாகப் புனரமைப்பதுடன் ரயில்கடவைகளையும் அமைக்க வேண்டும் என இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உமையாள்புரம் கால் ஏக்கர் திட்டத்தில் அமைந்துள்ள குடியிருப்பு வீதிகளை ஊடறுத்துச் செல்லும் ரயில் பாதை தற்போது புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றது.

ஆனால் இதனை ஊடறுத்துச் செல்லும் சிறு வீதிகள் உள்ள இடங்கள் புனரமைக்கப்படாது கற்குவியல்களாகக் காணப்படுகின்றன. தற்போது இந்த வீதிகளைக் கடப்பதில் பல்வேறு சிரமங்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் அடிக்கடி விபத்துக்களும் இங்கு இடம்பெற்று வருகின்றன.

மேலும் பாதுகாப்புக் கடவைகளும் அமைக்கப்படவில்லை. தற்போது கிளிநொச்சி வரைக்கும் இடம் பெறும் ரயில் சேவை பளைவரை நீடிக்கப்படும் போது விபத்துக் கள் ஏற்படுவதற்கான அபாய நிலையும் காணப்படுகின்றது. எனவே ரயில் வீதியைக் குறுக் கறுத்துச் செல்லும் சிறு கிராமிய வீதிகளைப் புனரமைப்பதுடன் ரயில் கடவைகளையும் அமைத்துத் தருமாறு இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## முருகனூர் மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

### *புலம்பெயர்ந்து வாழும் ஒருவரால்*

வவுனியா, ஜன.7

வவுனியா முருகனூர் பாடசாலை மாணவர்களுக்குப் புலம்பெயர்ந்து வாழும் ஒருவரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமப் புற மாணவர்களின் கல்விக்குத் தேவையான உதவிகளை வழங்கி வரும் வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் மேற்படி பாடசாலைக்குச் சென்று அங்குள்ள மாணவர்களின் தேவைகளை அறிந்து வந்ததைத் தொடர்ந்து சுவிஸ் நாட்டில் வாழுகின்ற எஸ்.சுரேஸ்குமார் என்பவர் நிதியுதவி புரிந்தார். இதனைக் கொண்டு 50 மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் கற்கை உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் பி.நேசராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத் தலைவர் எஸ்.குமாரசாமி, செயலாளர் கு.சதீஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டதுடன் சுரேஸ்குமாரின் தாயார் திருமதி சற்குணம் கற்கை உபகரணங்களை வழங்கினார். (க-421)

## வசதிகள் இல்லாத பொதுச் சந்தை

### *வர்த்தகர்களும், நுகர்வோரும் சிரமத்தில்*

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாண்டியன் குளம் பொதுச் சந்தை அடிப்படை வசதிகள் கூட இல்லாது காணப்படுவதால் சந்தை வர்த்தகர்களும், நுகர்வோரும் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாந்தை கிழக்குப் பிரதேசசபைக்குட்பட்ட பாண்டியன் குளம் பொதுச் சந்தை கடந்த 2008 ஆம் ஆண்டு போர் காரணமாக மோசமாகச் சேதமடைந்தது. கடந்த 2010 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்தனர். இதன்போது சந்தையில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்ற போதிலும் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் சந்தை வர்த்தகர்களும், நுகர்வோரும் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பாண்டியன் குளம் பிரதேசம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (க-55)

## நிரந்தர வீடுகளுக்குத் தேவையான மரங்களைப் பெறுவதில் இடர்கள்

அக்கராயன், ஜன.7

பூநகரியிலுள்ள சின்னப்பல்லவராயன்கட்டு கிராம மக்கள் நிரந்தர வீடுகளை அமைப்பதற்குத் தேவையான மரங்களைப் பெறுவதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சொந்தமாகவுள்ள காணிகளில் நிற்கும் ஒன்று அல்லது இரண்டு மரங்களை நிரந்தர வீடுகளை அமைப்பதற்குப் பயன்படுத்துவதற்குப் பூநகரி பிரதேச செயலகம் அனுமதி வழங்கி வருகின்றது. இந்த நிலையில் சின்னப்பல்லவராயன்கட்டு கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட காணியில் 28 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட காணியில் மரங்கள் எதுவுமில்லை. பிற இடங்களில் மரங்களை வெட்டுவதற்கும் அனுமதி இல்லை. கூரை வேலைக்கென ஒதுக்கப்படும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் அதிக விலை கொடுத்து மரங்களை வாங்குவதற்கும் தச்சுக் கூலி உட்பட பிற செலவுகளைச் சமாளிப்பதிலும் வீட்டுத் திட்டப் பயனாளிகள் திணறி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பாக பூநகரி பிரதேச செயலகம் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசதிகளை ஏற்படுத்தக் கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

பன்குளம், ஜன.7
திருகோணமலை-மூதூர் பெரிய பாலம் அல் மினா மஹா வித்தியாலயத்தில் ஆளணி பற்றாக்குறை மற்றும் கட்டட வசதியின்மை போன்ற வற்றை நிவர்த்தி செய்யக் கோரி மாண வர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.
50 வருடங்கள் பழைமை வாய்ந்த பாடசாலையாக காணப் பட்ட போதும் பல அரசி யல்வாதிகளிடமும், கல்வித் திணைக்கள அதிகாரிகளிடமும் தெரிவித்தும் இன்னும் குறை




பாடுகள் நிவர்த்தி செய்யப்பட வில்லை,
அதனைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப் பட்டதாகப் பாடசாலை அபிவி ருத்திச் சங்கத்தின் செயலா ளர் நசீம் தெரிவித்தார்.
ஆர்ப்பாட்டத்தின் போது மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.விஜயானந்தமூர்த்தி வருகை தந்து கூடிய விரைவில் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியதை அடுத்து ஆர்ப்பாட் டம் கைவிடப்பட்டதாகவும் பாட சாலையின் முக்கிய அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

"-"

**ஆளணி பற்றாக் குறை மற்றும் கட்டட வசதி யின்மை போன்ற வற்றை நிவர்த் செய்யக் கோரி ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.**

காலை ஏழு மணிக்கு ஆரம்பிக் கப்பட்ட ஆர்ப்பாட்டம் 10 மணிக்கு நிறைவடைந்தது. (வ)

# கல்குடா வலய இடமாற்றங்கள் அரசியல் தலையீட்டால் ரத்து

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜன.7
மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்வி வலய ஆசிரியர் இடமாற்றச் சபையால் தீர்மா னிக்கப்பட்ட ஆசிரியர் இடமாற் றங்கள் அரசியல் தலையீட்டின் காரணமாக ரத்துச் செய்யப் பட்டுள்ளதாக இலங்கை ஆசிரி யர் சங்கம் குற்றம் சுமத்தியுள் ளது.
கல்குடா கல்வி வலயத்தின் ஆசிரியர் இடமாற்றச் சபையின் தீர்மானத்துக்கு முர ணாக சில ஆசிரிய இடமாற்றங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதைக் கண் டித்து இலங்கை ஆசிரியர் சங் கத்தின் மட்டக்களப்புக் கிளை செயலாளர் பொ.உதயரூபன் ஊடகங்களுக்கு வெளியிட் டுள்ள அறிக்கையில் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர் களின் வருடாந்த இடமாற்றம் இடமாற்ற சபையின் தீர்மா னத்துடன் வெளிப்படைத் தன் மையுடன் நிறைவேற்றப்பட்ட பின் தூரநோக்கற்ற அரசியல் தலையீட்டின் காரணமாகச் சில ஆசிரியர்களின் இடமாற்றங் கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.
கல்குடா கல்வி வலயத்தில் அமைந்துள்ள பிரபல 1ஏபி பாட சலைகளில் ஒன்றான செங்கலடி மத்திய கல்லூரியின் ஆசிரியர் சேவையைச் சேர்ந்த பிரதி அதிபரின் இடமாற்றமும் சில ஆசிரியர்களின் இடமாற்றங்க ளும் ரத்துச் செய்யப்பட்டுள் ளமை இடமாற்ற சபையின்

"-"

**8 வருட பூர்த்தியை நிறை வேற்றிய பல ஆசிரி யர்களுக்குத் தேசிய இடமாற்றக் கொள்கைக் குட்பட்டு இக் கல்லூரி யில் இருந்து இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.**

தீர்மானத்துக்கு முரணானதா கும்.
குறிப்பிட்ட பிரதி அதிபர் நீண்ட காலமாக நேரசூசியின்றியும், கஷ்டப் பிரதேசங்களில் சேவை யைப் பூர்த்தி செய்யாதவராக வும் உள்ளார். அதேசமயம் 8 வருட பூர்த்தியை நிறைவேற் றிய பல ஆசிரியர்களுக்கு தேசிய இடமாற்றக் கொள்கைக் குட்பட்டு இக் கல்லூரியில் இருந்து இடமாற்றம் வழங் கப்பட்டுள்ளது-என்றுள் ளது.
இக்கல்லூரிக்கு 1998/23 இலக் கமிடப்பட்ட கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் படி அதிபர், பிரதி அதிபர் ஆகியோர் அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் மாகா ணக் கல்விச் செயலாளர் நியம னம் வழங்க வேண்டும் என்று எமது சங்கம் வலியுறுத்து கிறது-என்றுள்ளது. (வ)

# திருமலை வைத்தியசாலை நோயாளருக்கு உணவு

திருகோணமலை, ஜன7
திருகோணமலை-மகாதிவுள் வெவ பிரதேச வைத்தியசா லையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு இம் மாதம் தொடக்கம் உணவு வழங்கப்பட்டு வருவதாக வைத் தியசாலை நிர்வாகம் தெரிவித் துள்ளது.
கடந்த வருடம் நோயாளர் களால் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து இவ்வருடம் உணவு வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வந்த தாகவும் தெரியவருகின்றது.
நீண்ட தூரத்தில் இருந்து வரும் நோயாளர்களை வைத் தியசாலையில் அனுமதித்த பின்னர் மீண்டும் அவர்களை பார்வையிட உறவினர்கள் இரவு நேரங்களில் வருவ தில்லை.
அதனால் நோயாளர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின் றனர்.
இரவுச் சாப்பாட்டுக்காக உணவுப் பொருள்களைக் கொண்டு வரு வது மிகவும் கஷ்டமான காரி யமாகும். இப்பகுதியில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதால் அதற்குப் பயந்து நோயாளர்களைப் பார்ப் பதற்கு எவரும் வருவதில்லை என்றும் தெரிய வருகின்றது.
அதனால் அன்றிரவு நோயா ளர்கள் பசியில் இருப்பதை கருத்திற்கொண்டு அதிகாரிக ளுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.
அத்துடன் நோயாளர்களின் நலன் கருதி புதிய தாதியர் களையும்.சிற்றூழியர்களையும் நியமிக்குமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர். (வ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது



மட்டக்களப்பு, ஜன.7
ஏறாவூர் நடமாடும் பொலி ஸாரது சோதனையின்போது குண்டு மற்றும் துப்பாக்கி வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை நிறுத்தி சோதனையிடும் போது அந்நபரிடம் குண்டு மற்றும் துப்பாக்கி இருப்பது தெரிய வந் துள்ளது.
சந்தேகநபர் நேற்று முன் தினம் ஏறாவூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (வ)



வடிகால் இன்றி நீண்ட காலமாக வெள்ளத்தில் மூழ்கிய பெரிய நீலாவணை புலவர் மணி ஷரிபுத்தீன் வித்தியாலய வீதியின் குறுக்கு வீதிக்கான வடிகால் அமைக்கும் பணி தற்போது மிகவும் துரிதமாக நடைபெற்று வருகின்றது. பிரதி அமைச்சர் அட்மிரல் சரத்வீர சேகர ஒதுக்கிய பத்து இலட்சம் ரூபா நிதியில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த வேலைத்திட்டத்தை கல்முனை மாநகர சபை உறுப்பினர் றஹ்மான் சனிக்கிழமை பார்வையிட்டார்.

# குற்றச் செயல்களில் ஈடுபட்ட 13 பேர் கைது

அம்பாறை, ஜன.7
அம்பாறை மாவட்டத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்று வந்ததாகக் கூறப்படும் கோழிப் பண்ணையாளர் ஒருவர் உட் பட 8 பேரையும் கஞ்சா வைத்திருந்ததாகக் கூறப்படும் 5 பேரையும் கைது செய்துள் ளதாக அக்கரைப்பற்று பொலி ஸார் தெரிவித்தனர்.
இலங்கை மின்சார சபையின் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் அக்கரைப் பற்று பொலிஸாரும் இணைந்து அட்டாளைச்சேனை பிரதே சத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீர்ச் சோதனையை மேற் கொண்டனர். இதன்போது, மேற்படி சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதுடன், அவர் களிடமிருந்து மின்சார வயர் களையும் கைப்பற்றியுள்ளதா கவும் பொலிஸார் கூறினர்.
இதேவேளை, அட்டாளைச் சேனை பிரதேசத்தின் ஆலங் குளம் பிரதேசத்தில் 30 வயது டைய ஒருவரை 2 கிராம் கஞ் சாவுடனும் பாலமுனை 15 ஆம் பிரிவில் 36 வயது டைய ஒருவரை 2 1/2 கிராம் கஞ்சா வுடனும் பாலமுனை பிரதேசத் தில் 34 மற்றும் 38 வயது டைய இருவரையும் அக்க ரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் 33 வயதுடைய ஒருவரையும் கஞ்சாவுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை கைதுசெய் துள்ளதாகவும் பொலிஸார் கூறி னர்.
அவர்கள் தங்களது உடைமை யினுள் கஞ்சாவை மறைத்து வைத்திருந்தபோதே கைது செய்துள்ளதாகவும் பொலி ஸார் கூறினர்.
சந்தேக நபர்களை நேற்று திங் கட்கிழமை அக்கரைப் பற்று நீதிமன்றத்தில் முன் னிலைப்ப டுத்துவதற்கான நடவடிக்கை களை மேற் கொண்டுள்ளதா கவும் பொலிஸார் கூறினர். (வ)

# வடக்கு முதலமைச்சருக்கு அனைவரும் ஒத்துழைக்குக

## கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் வேண்டுகோள்

அம்பாறை, ஜன.7
"இந்த நாட்டின் அரசமைப்பை பின் பற்றி அதை நடைமுறைப்படுத்தி சட்ட, நீதி ஒழுங்கு செய்த ஒருவரான சீ.வி.விக்னேஸ்வரன் வடமாகாண முத லமைச்சரானமை சிறந்த ஜனநாயக உருவாக்கத்துக்கு வழி சமைக்கும் எனவே அவரது பணிக்கு அரச ஊழியர் கள் உட்பட அனைவரும் பூரண **ஒத்துழைப்பு நல்க வேண்டும்."**
இவ்வாறு, கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர் கூறினார்.
ஏறாவூர் நஜீமுல் உலூம் அரபுக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கல்லூரியின் பணிப்பா ளர் அலி முஹமட் (ஆசிரியர்) தலை மையில் விழா நடைபெற்றது.
**நிகழ்வில் பிரதம தவிசாளர் சுபைர்** தொடர்ந்து உரையாற்றுகையில் வட மாகாண முதலமைச்சர் தமது கடமையையும் பணிகளையும் முன் னெடுப்பதில் இடையூறுகளை எதிர் நோக்குவதாகவும் சில அதிகாரிகளின் செயற்பாடுகளால் தன் பணிகளைத் தொடர்வதில் அவர் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது.
**ஆனால் இந்த நாட்டின் அரசியலமைப்** பைப் பின்பற்றி அதை நடைமுறைப் ப டுத்தி சட்ட நீதி ஒழுங்கு செய்த ஒருவர் வட மாகாண சபையின் முதலமைச்சரா னமை சிறந்த ஜனநாயக உருவாக்கத் துக்கு வழி சமைக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.
எனவே, அவரது பணிக்கு சகல அரச அதிகாரிகளும் வழிவிட்டு, அவற்றுக் குப் பூரண ஒத்துழைப்பையும் நல்க **வேண்டும்.**
நாட்டில் ஒரு சாரார் மாகாண முறை மையை அழிப்பதற்கும், இன்னு மொரு சாரார் மாகாண முறைமை யைப் பாதுகாப்பதற்கும் உறுதி பூண் டுள்ள நிலையில் வடபுல முதமைச் சரின் வரவு நிச்சயம் மாகாண முறை மையிலான அதிகாரங்களைப் பாது காப்பதற்கும், மாகாண முறைமை யைப் பாதுகாப்பதற்கும் உதவும். என்றார். (வ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வைத்தியசாலைகளில் இனி திடீர் சுற்றிவளைப்புகள்

## தரமான சேவை நடக்கிறதா என்பதை கண்டறிவதற்கு

கொழும்பு,ஜன.7
நாடளாவிய ரீதியில் உள்ள அரச வைத்தியசாலைகளில் திடீர்ச் சுற்றி வளைப்புகளை மேற்கொள்வதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.
மாதத்துக்கு 3 சுற்றிவளைப்புக்களையேனும் மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் மக்களுக்கு தரமான சேவை கிடைக்கின்றதா என்பதைக் கண்டறிவதே இதன் நோக்கம் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

“–”

**விசேட சுற்றி வளைப்புப் பிரிவின் அதிகாரிகளை இந்த நடவடிக் கையில் ஈடுபடுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

சுகாதார அமைச்சின் விசேட சுற்றி வளைப்புப் பிரிவின் அதிகாரிகளை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
வைத்தியசாலைகளில் உள்ள வாகனங்களின் பயண விவரம் பதிவு செய்யப்படுகின்றமை குறித்து விசேட கவனம் செலுத்துமாறும் சுகாதார அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஒ-சி)

## பணக்கொள்ளையில் ஈடுபட்ட 17 பெண்கள் கொண்ட குழு கைது



கிராமங்களிலிருந்து கொழும்புக்கு வருகின்றவர்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து பணம் மற்றும் பொருள்களை சூறையாடி வந்த 17 பெண்கள் கொண்ட குழுவொன்றைச் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
மாயாஜாலங்கள் மற்றும் கண்கட்டிவித்தைகளைக் காண்பித்து அவர்களை ஏமாற்றி கொள்ளையடிப்பதே அந்தக் குழுவின் செயற்பாடு என்று தெரிவித்த பொலிஸார், இவர்கள் தொடர்பில் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-சி)



இந்தியத் தூதர் வை.கே.சிங்ஹா மலையகத் துக்கான பயணத்தின் போது புஸ்ஸல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரிக்கும் சென்றிருந்தார். (வ)

# ஆள்கடத்தலை முறியடித்த பொலிஸ் அதிகாரி நீக்கம்

கொழும்பு,ஜன.7
வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலுள்ள சாதாரண பொது மக்களைச் சட்டவிரோதமாக படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிக்கொண்டிருந்த பிரதான சூத்திரதாரி உட்பட பல சந்தேக நபர்களைக் கைதுசெய்ய மூல காரணமாகவிருந்த மாத்தறை பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி தம்மிக்க ஹப்புகொட தனது பதவியை விட்டு விலகிச் சென்றுவிட்டார் என்று கணிக்கப்பட்டதன் பேரில் அவரது பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் திணைக் களம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.
ஒரு மாதத்துக்கு முன்பு ஏழு நாள் விடுமுறை எடுத்துக் கொண்டு இந்தியாவுக்குச் சென்றவர் இதுவரை பணிக்குத் திரும்பாததால் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் கீழ் தென்மாகாணத்துக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தம்பிக்க ஹப்பு கொட பதவியிலிருந்து விலகிக் கொண்டதாகக் கருதி அவரைப் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இலட்சக்கணக்கான ரூபா பணத்தைப்பெற்றுக் கொண்டு சட்டவிரோதமாக வடக்கு, கிழக்குப் பொதுமக்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புபவர்களைத் தேடிப் பிடிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட பொலிஸ் குழுவின் தலைவராகச் செயற்பட்டவர் இவரே. இவர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் காரணமாகத் திருகோணமலையிலுள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரும் கடற்படையின் உயரதிகாரிகள் சிலரும் உட்பட மொத்தமாக 27 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-சி)

# கைக்குண்டுடன் மூவர் சிக்கினர்

மீகஹதென்ன - வெலகவத்தை பகுதியில் கைக்குண்டுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள் ளனர்.
நேற்று முன்தினம் மீகஹதென்ன பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் பெலவத்தை வீதியில் பயணித்த சிறிய லொறி ஒன்றை நிறுத்திப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இதன்போது கைக்குண்டு வைத்திருந்த லொறிச் சாரதி உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் வெலிபன்ன பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.
குறித்த சந்தேகநபர்கள் மத்துகம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
இதேவேளை, இலக்கத் தகடு இல்லாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரையும் மீடியாகொட பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# பெண் வேடத்தில் வங்கிக் கொள்ளை; படை அதிகாரிக்கு 2 வருட கடுங்காவல்

## இராணுவ நீதிமன்றம் வழங்கியது

கொழும்பு,ஜன.7
இராணுவத்தில் பணி புரியும் கப்டன் தரத்திலான ஓர் அதிகாரிக்கு இராணுவப் பொது நீதிமன்றம் ஒன்று இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனையையும் கௌரவமற்ற முறையிலான பதவி நீக்கமும் செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.
இந்த இராணுவ அதிகாரி முஸ்லிம் பெண் வேடத்தில் 2013 பெப்ரவரி 6 ஆம் திகதி கண்டி மகியாவ தேசிய வங்கியில் கொள்ளையடிக்க முயன்றார் என்றும் அதன் மூலம் இராணுவத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தினார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.
இலங்கை இராணுவத்தின் தொண்டர் படைப்பிரிவில் பணி புரிந்துள்ள கப்டன் ஏ.எம்.யு. சமரக்கோன் என்பவரே இந்த அதிகாரி.
சம்பந்தப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாகச் சிவில் நீதிமன்றம் ஒன்றில் விசாரணை நடைபெற்று வரும் நிலையில் அதற்கு முன்பாகவே இராணுவப் பொது நீதிமன்றம் விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கியிருப்பது இராணுவ வரலாற்றில் இதுவே முதல் தடவை என்று கருதப்படுகின்றது.

“–”

**இராணுவ பொது நீதிமன்றம் விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கியிருப்பது இராணுவ வரலாற் றில் இதுவே முதல் தடவை என்று கருதப்படுகின்றது.**

இராணுவத் தளபதியின் குற்றமிழைக்கும் இராணுவத்தினர் மீது சகிப்பு காட்டப்படமாட்டாது என்று கொள்கைக்கமைவாக இராணுவத் தீர்ப்பாயம் கடந்த நவம்பரில் நிறுவப்பட்டு ஆறு நாள்கள் விசாரணைகள் நடத்தப்பட்டு இராணுவச் சட்டம் 109 மற்றும் 129 பிரிவுகளின் படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ப)

# ஈரான் எண்ணெய் இறக்குமதி: இலங்கைக்கு அமெரிக்கா தடை

ஈரான் மீதான சில தடைகளை அண்மையில் விலக்கியுள்ள போதிலும், அந்த நாட்டிடம் இருந்து இலங்கை மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய முடியாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.
இதுதொடர்பாக இலங்கை அரசுக்கு அமெரிக்கா அறிவித்துள்ளதாக இலங்கையின் பெற்றோலிய வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.
இதுதொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துடன் பல சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், வொசிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகமும், அமெரிக்க அரசுடன் பேச்சுகளை நடத்தியதாகவும், பெற்றோலியத்துறை அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.
இந்தப் பேச்சுக்களின் போதே, ஈரான் மீதான சில தடைகளை விலக்க உலகத் தலைவர்கள் இணங்கிய போதிலும், எண்ணெய் இறக்குமதி மீதான தடைகள் இன்னமும் தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது ஈரானிய மசகு எண்ணெயை மட்டுமே சுத்திகரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள, சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு ஆலையைக் கொண்டுள்ள இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அரசு கூறியுள்ளது.
இலங்கை தனது எண்ணெய் பயன்பாட்டில் 93 சதவீதத்தை ஈரானிடம் இருந்தே பெற்று வந்தது. அணு சக்தித் திட்டத்தை நிறுத்தி வைக்க ஈரான் வாக்குறுதி அளித்ததை அடுத்து ஈரான் மீதான தடைகள் சிலவற்றை விலக்க அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முடிவு செய்திருந்தன.
இதனால் தம் மீதான எண்ணெய் இறக்குமதி தடை நீங்கும் என்று கருதியிருந்த இலங்கைக்கு அமெரிக்காவின் இந்த முடிவு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.



# உலக சமாதானத்தை அச்சுறுத்தும் நாடாக அமெரிக்கா

## ஆய்வில் தகவல்

கொழும்பு,ஜன.7
உலகின் சமாதானத்தை அச்சுறுத்தும் நாடாக அமெரிக்காவே உள்ளது என ஆய்வு ஒன்றின் மூலம் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
உலகளாவிய சுதந்திர வலையமைப்பும் கோல்அப் நிறுவனமும் இணைந்து இந்த ஆய்வை கடந்த ஆண்டு இறுதியில் நடத்தின. அதன்படி அமெரிக்காவின் நட்பு நாடுகள் உள்ளிட்ட 68 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படியே இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
இதேவேளை குறித்த குற்றச்சாட்டினை அமெரிக்காவின் தோழமை நாடான துருக்கி, கிரீஸ் ஆகிய நாடுகளும் முன்வைத்துள்ளதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்போது உலகப் பொலிஸ்காரனாக அமெரிக்கா நடந்து கொள்வதாகப் பல நாடுகளினால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆய்வின் போது 60 நாடுகளில் உள்ளவர்களில் 24 வீதத்தினர் அமெரிக்காவே உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தல் என்று குறிப்பிட்டுள்ளனர்.
அத்துடன் உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கும் இரண்டாவது நாடாக 8 வீத வாக்குகளால் பாகிஸ்தான் பதிவு பெற்றுள்ளது.
அதேபோல் சீனா 6 வீத வாக்குகளுடன் உலக சமாதான அச்சுறுத்தலுக்கான மூன்றாவது நாடாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆப்கானிஸ்தான், ஈரான், இஸ்ரேல், வட கொரியா என்பன உலக சமாதான அச்சுறுத்தல் நாடுகளாக காட்டப்பட்டுள்ளன.
இதேவேளை, மத்திய கிழக்கு மற்றும் வடஆபிரிக்க நாடுகளிலேயே அமெரிக்கா அச்சுறுத்தல் நாடாக இருப்பதாக பெருமளவு மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.
மேலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளும் அமெரிக்காவை பயங்கரமான நாடாக சுட்டிக்காட்டியுள்ளன. இறுதியாக அமெரிக்காவின் 70 வீதமான மக்கள், தமது நாடு, 2014 ஆம் ஆண்டில் முகங் கொடுக்கும் பிரச்சினைகளுக்கான தகுதியைக் கொண்டிருக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளதாக அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“–”

**ஆப்கானிஸ்தான், ஈரான், இஸ்ரேல், வட கொரியா என்பன உலக சமாதான அச்சுறுத்தல் நாடுகளாக காட்டப்பட்டுள்ளன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜெனிவா மாநாடு இலங்கைக்கு அக்கினிச் சுடராக மாறுமா.....?

எதிர்வரும் மார்ச் மாதம் மூன்றாம் திகதி, ஜெனிவாவில் ஆரம்பமாகும் மனித உரிமைகள் பேரவையின் மாநாடு, முன்னைய இரண்டு ஆண்டுகளையும் விட மிக்கவும் காரம் நிறைந்ததாக இருக்கும் என்று, ராஜதந்திர வட்டாரங்கள், இப்போதே எதிர்வுகூறத் தொடங்கி உள்ளன.

இலங்கைக்கு, இலங்கை அரசுக்கு, அனைத்துலக சமூகத்தில் உள்ள நண்பர்கள் உதவி செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அனைத்துலக அரங்கில் இலங்கை தனிமைப்படவில்லை என்று எமது ஜனாதிபதி கூறி வந்தாலும் நிலைமை அவ்வாறில்லை.

எமது நாட்டு விவகாரம் தொடர்பில், அமெரிக்கா, கனடா உட்பட மேற்கு நாடுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் இப்போது உடனுக்குடன் உண்மையான, பாதகமான தாக்கங்களை வெளிப்படுத்தாவிடினும், காலப்போக்கில் பெரும் சங்கடங்களை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் தூதுவர் ஸ்ரீபன் ஜே ராப்பின் கொழும்பு வருகை, பதினொரு சர்வதேச நீதியரசர்கள் அடங்கிய ஆயம் இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டு அறிக்கை ஒன்றைத் தயாரித் துள்ளமை ஆகியன, கொழும்பு அரசியல் வட்டாரங் களில் பெரும் பரபரப்பை உண்டாக்கி உள்ளதை மறைக்க இயலாது.

போர்க்குற்றச்சாட்டுகளிலிருந்து தப்புவதற்கு, இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை களுடன் ஒப்பிடும்போது, இலங்கை மீது போர்க் குற்ற விசாரணைகளை நடத்துவதற்கு புலம்பெயர் நாடுகளில் இலங்கைத் தமிழர்களின் விவகாரங்களைக் கையாளும் அமைப்புகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பல மடங்கு அதிகம் எனலாம்.

தமது முயற்சிகளில் புலம்பெயர் தமிழர் அமைப் புக்கள் சிறிதளவாவது தளர்ந்து விடவில்லை. அதனால் போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து இலங்கை விலகிச் செல்ல இயலாது, நிலைமை இறுகி உள்ளது. போர்க்குற்ற விசாரணை இலங்கையை மிக நெருங்கி வருகிறது என்பதே யதார்த்த நிலை.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக மற்றொரு பிரேரணையைக் கொண்டுவர அமெரிக்கா மேற்கொண்டுள்ள நடவடிக்கை மற்றும் சுயாதீனமாக இயங்கும் சர்வதேச நீதிபதிகள் ஆயம் தயாரித்துள்ள போர்க் குற்றச்சாட்டு அறிக்கை ஆகியவற்றின் பின்னணியிலும், புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் பங்களிப்பை எந்த வகையிலும் நிராகரித்து விட இயலாது. ஜெனிவாவில் இலங்கைக்கு அபாய மணி என்று சமகால அரசியல் நடவடிக்கைகள் குறித்து, அரசியல் அவதானிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

நேற்று கொழும்பு வந்துள்ள ஸ்ரீபன் ஜே ரர்ப், 11 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார். அரச அதிகாரிகள், அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகளுடனான சந்திப்புகளின்போது இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்க முயற்சி குறித்து அவர் கலந்துரையாடுவார்.

ஸ்ரீபன் ராப்பின் இரண்டாவது இலங்கைப் பயணம் இதுவாகும். 2012 மார்ச்சில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தனது முதலாவது தீர்மானத்தை ஜெனிவாவில் சமர்ப்பிக்கவிருந்த நிலையில், பெப்ரவரி மாதம் அவர் இலங்கை வந்தார். அமெரிக்கா மூன்றாவது தீர்மானத்தை ஜெனிவாவில் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் இன்றைய சூழ்நிலையில், ஸ்ரீபன் ராப் மீண்டும் இலங்கை வருவதால் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவருவது உறுதியாகி விட்டது எனின் தப்பன்று. இம்முறை இலங்கை எதிர் நோக்கப் போகும் ஆபத்துக்கள் குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு ஏற்கெனவே சமிக்ஞைகள் காட்டப்பட்டுவிட்டன என்றும் சொல்லப்படுகிறது.

ஜெனிவா மனித உரிமைகள் மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட முன்னைய இரு தீர்மானங்களையும் முழுமையாக நிறைவேற்றத் தவறியுள்ள நிலையில், அரசுக்குத் தற்பொழுது உள்ள ஒரே தெரிவு மட்டுமே உண்டு. உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டி, அமெரிக்கத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதே அது. உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இந்த மாத இறுதியில் ஜெனிவா செல்கிறார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

2012 இலும் 2013 இலும் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானங்களின் பரிந்துரைகளை நிறைவு செய்வதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை அவர் உறுப்பு நாடுகளுக்குத் தெரியப்படுத்துவார் என்று கூறப்படுகிறது. தூதுவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார். கடந்த வருடம் அல்ஜீரியா, சீனா, கியூபா, பிரான்ஸ், மாலைதீவுகள் மெக்சிக்கோ மொரோக்கோ, நமீபியா, சவூதி அரேபியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு உறுப்பு நாடுகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில், இலங்கை அரசுக்கு ஆதரவான நாடுகளும் உள்ளபோதிலும், அமெரிக்காவினதும், பிரிட்டனினதும், இந்தியாவினதும் செல்வாக்குக்கு உட்பட்ட நாடுகளே அதிகம்.

எதிர்வரும் ஜெனிவா மாநாட்டையொட்டி, இலங்கை அரசு அவசரம் அவசரமாக சில நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும், காத்திரமான செயற்பாடுகளுக்குக் காலம் பிந்தி விட்டது என்றே நோக்கர்கள் கருதுகிறார்கள். இலங்கைக்கு இனியும் அவகாசம் கொடுக்க முடியாது என்ற முடிவுக்கு அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் வந்திருப்பதால், ஜெனிவா மாநாடு இலங்கைக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாகவே இருக்கப்போகிறது.

# அரசின் இராஜதந்திர நகர்வுகள்

## ஜெனிவா பொறிக்குள் தப்புமா?

கந்தவனம் கோணேஸ்வரன்

இலங்கை அரசு ஜெனிவாவில் 25ஆவது மனித உரிமைகள் மாநாட்டை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறது. தனக்கெதிராக மார்ச்சில் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படும் பிரேரணையை இல்லாமற் செய்துவிடவேண்டும் அல்லது பலமிழக்கச் செய்யவேண்டும் என்பதில் தீவிர கரிசனையுடன் செயற்படத் தொடங்கியிருக்கிறது.

இந்த இராஜதந்திரத்தின் பாற்பட்டுப் பலநகர்வுகள் இலங்கையில் இடம்பெறத் தொடங்கியிருக்கின்றன. வடக்கு, கிழக்கு மக்களின் சொத்திழப்புகள், உயிரிழப்புகள் பற்றிய தகவல்கள் வெகுவிரைவாகவே சேகரிக்கப்படுகின்றன. புள்ளிவிவரத் திணைக்களம் தனது அறிவாண்மையைப் பயன்படுத்தித்தான் தரவுசேகரிப்பில் ஈடுபட்டிருந்ததெனினும் மக்கள் மத்தியில் அது நம்பத்தகுந்ததாக இருக்கவில்லை.

### காணமற் போனோர் கணக்கெடுப்பு

முற்றாக அழிந்த குடும்பங்களின் இழப்புகள் தொடர்பான தகவல்கள் அரசவிதிகளின்கீழ் புத்திசாலித்தனமாக நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. உறவுகளை இழந்து, சொத்துக்களை இழந்து, வேறுநாடுகளுக்குச் சென்று உயிர்தப்பிவாழும் தமிழர்களின் இழப்புகள் சம்பந்தமான தகவல்களும் உள்வாங்கப்படாதிருப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. தாயைப் பறிகொடுத்த மகள், மகன், வயதுவந்து திருமணம்செய்து விட்டால் அவர் வேறுகுடும்பமாகக் கருதப்பட்டு அவ்விழப்புகள் பதிவுக்குட்படாமல் தவிர்க்கப்படுகின்றன.

இதன்படி பார்த்தால் மூன்றிலொரு பங்கு இழப்புகள்கூட தரவுகளாக வரபோவதில்லை என்பது தெளிவாகிறது. பாதிப்புக்குள்ளான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வளர்ந்து பெரியவர்களானதால் சட்டரீதியாகப் பிரிக்கப்பட்டு வேறு குடும்பங்களாக்கப்பட்டு தமது இரத்த உறவுகளின் இழப்புகளைக்கூட பதியமுடியாதவாறு மௌனமாக்கப்பட்டிருக்கிறார்கள். இது உண்மையான கணக்கெடுப்பாகாது. அவசரஅவசரமாகக் காணாமற் போனோர் தொடர்பாகவும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. இதுபற்றி ஆராயப்புகுந்த குழுவுக்கு இதுவரை பதினோராயிரம் முறைப்பாடுகளே கிடைக்கப்பெற்றிருக்கின்றன எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. எவ்வாறெனினும், குழு வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று தகவல்களைச் சேகரிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

### கரும்புத்தோட்டமும் காணிச்சுவீகரிப்பும்

இவை தமிழர்களுடைய இழப்புகள் பற்றிய தகவல்கள் சார்ந்தவை. அரசால் இன்னொரு நகர்வு தமிழர்களுக்கு எதிர்கால இழப்புகளை உருவாக்கும் உத்திகள் சார்ந்து மேற்கொள்ளப்படவிருக்கிறது. ஏற்கெனவே இராணுவ முகாம்கள், உயர்பாதுகாப்பு வலயங்கள், சிங்களக் குடியேற்றங்கள் என்று தமிழர்காணிகள் பறிபோவது போதாதெனக் கரும்புச் செய்கை என்ற பேரிலும் வடபகுதியில் பெருந்தொகையான காணிகளைச் சுருட்ட அரசு திட்டமிட்டு வருகிறது.

இவ்வாரமே அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் நிலையிலிருக்கின்ற கரும்புப் பயிர்ச்செய்கைத் திட்டத்தின்படி நாடுதழுவிய வகையில் ஒரு இலட்சத்து எண்ணாயிரத்து எண்ணூற்றேழு ஹெக்ரேயர் காணி சுவீகரிக்கப்படவிருக்கிறது. இதில் வடக்கில் மாத்திரம் எழுபத்தோராயிரத்து எழுநூற்றுப் பதினாறு ஹெக்ரேயர் காணி கரும்புத் தோட்டத்துக்காகக் கையகப்படுத்தும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இது வெளிப்பார்வைக்குச் சீனி உற்பத்தியில் தன்னிறைவு அடையும் திட்டம் எனப் பேசப்பட்டாலும் தமிழர் காணியில் தமிழர்களுக்குரிய அதிகாரத்தை அகற்றுவதற்கான ஒரு திட்டமாகவே கொள்ளப்படவேண்டியிருக்கிறது. இக்காணிச் சுவீகரிப்பு நிகழ்ந்தவுடன் முற்றுமுழுதாக இக்காணிகள் அனைத்தும் மத்திய சீனி அமைச்சின் கீழேயே கொண்டுவரப்பட்டு மாகாணசபைக்குரிய பிடிமானங்கள் அனைத்தும் முற்றாக அறுத்தெறியப்படும்.

அபிவிருத்திகள் தமிழர்பகுதிகளில் இடம்பெறுவதைத் தமிழர்கள் விரும்பவில்லை என்பது இதன் கருத்தாகாது. அரசின் செயற்பாடுகளில் நம்பிக்கை வைக்க முடியாத நிலையில் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் இதன் பொருள். ஒவ்வொரு வாய்ப்பிலும் தமிழ்ப் பிரதேசங்களைக் கபளீகரம் செய்யும் நோக்கில்தான் அரசு செயற்பட்டு வருகிறது. அதற்கான சட்ட ஏற்பாடுகள்தாம் கரும்புத்தோட்டமும், காணிச்சுவீகரிப்பும்.

### அரசு எதிர்நோக்கும் சவால்கள்

இதேநேரத்தில் அரசின் திருகுதாளங்கள் சர்வதேசமட்டத்தில் எடுபடுவதாகவும் தெரியவில்லை. சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் அரசு தனது செயற்பாடுகளை வகுத்துக்கொண்டாலும், மார்ச்சில் ஜெனிவாவில் எழப்போகும் சிக்கல்களைக் கடந்துசெல்வதற்கான பலம் இலங்கையிடம் இருக்கிறதா என்பதே கேள்வி. கடந்த ஓகஸ்ட் இறுதியில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளையின் வருகை இலங்கை இராஜதந்திரத்தின் மிகப் பெரிய சரிவுக்கான ஆரம்பம் எனலாம். அதன்விளைவு வருகிற மார்ச்சில் எதிரொலிக்கவிருக்கிறது.

பொதுநலவாய மாநாட்டைக் கனடா புறக்கணித்ததும், மொரிஸியஸ் பங்குபற்ற மறுத்ததும், இருபத்துமூன்று அரசதலைவர்கள் மட்டுமே பங்குபற்றிய நிகழ்வாக அது அமைந்ததும் இன்னொரு சரிவு. டேவிட் கமரூன் வடபகுதிக்குத் தன்முனைப்போடு சென்று மக்களுடன் உரையாடி, அதன் பின்னர் இலங்கைப் பற்றி விமர்சனம் செய்தது மூன்றாவது வீழ்ச்சி.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வருகைதர மனமிருந்தும், பொதுநலவாயத்தில் பங்குகொள்ள முடியாமல் தவித்து நின்றமை இலங்கைக்கான மிகப்பெரிய அவமான நிகழ்வு. இது தமிழக மக்களின் இலங்கை அரசுக்கெதிரான நிலைப்பாட்டுக்குக் கிடைத்த வெற்றி.

அமெரிக்காவும் தன்பங்குக்கு இலங்கையை வாட்டி எடுத்துவருகிறது. இவற்றின் உச்சம் நிச்சயமாக ஜெனிவாவில் எதிரொலித்தே தீரும் என நம்பலாம். அதற்கேதுவாக ஐ.நாவின் அகதிகளுக்கான விசேடஅறிக்கையாளர் சலோகா பெயானியும் இலங்கை வந்து தமிழ்த் தலைவர்களுடனும் மக்களுடனும் நேரடியாக உரையாடித் தகவல்களைப் பெற்றுச்சென்றிருக்கிறார்.

ஐ.நாவின் வேண்டுகோளை இலங்கை அரசு எந்தளவுக்கு ஏற்றுநடந்திருக்கிறது என்பதை அறியவும், அவற்றில் எவையெவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதுபற்றிய அறிக்கை சமர்ப்பிக்கவுமென அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலாளர் நிஸா தேசாய் பிஸ்வால் எதிர்வரும் வாரங்களில் இலங்கை வரவிருக்கிறார். இவரையடுத்து பெப்ரவரி முதல்வாரத்தில் நவநீதம்பிள்ளையின் அணியைச் சேர்ந்தவர்களும் இலங்கை வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க, இலங்கைமீது பொருளாதாரத்தடை கொண்டுவருவதுபற்றி ஆலோசிக்கத் தொடங்கியிருக்கிறது. பிரிட்டனும் தன்னோடு இணைந்த நாடுகள்மூலம் இலங்கை வாணிபத்தில் அழுத்தங்களைப் பிரயோகிப்பது பற்றிக் கவனம் செலுத்தி வருகிறது. இலங்கையின் அரசதலைவர்களினதும், இராணுவத் தலைவர்களினதும் வெளிநாட்டுப் பயணங்களை முடக்கும் திட்டமும் பிரிட்டனின் பரிசீலனையில் இருக்கிறதெனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றோடு புலம்பெயர்தமிழர் அமைப்புகளும் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இருந்தாவது இலங்கையின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டும் என்றமுடிவுடன் தீவிரமான முன்னெடுப்புகளில் ஈடுபட்டு வருகின்றன. இலங்கைக்கு எதிராகத் திரும்பியிருக்கும் சர்வதேச அபிப்பிராயங்களைச் சாதகமாக்கித் தமிழரின் அரசியல் தேவைகளைப் பூர்த்திசெய்துவிட வேண்டுமென்ற துடிப்பு புலம்பெயர் தமிழர்களிடமும் காணப்படுகிறது. ஜெனிவா மாநாட்டின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தங்களுடன் இணைந்துநின்றால் அதன் பயன் அதிகமாகலாமென இவர்கள் நம்புகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. அதனையேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஜெனீவா சென்று மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் சர்வதேசப் பிரதிநிதிகளைத் தனித்தனியாகச் சந்தித்து உண்மை நிலையைத் தெளிவாகவும் சரியாகவும் உணர்த்துவதே சாலச்சிறந்ததென்று தாயகத் தமிழர்களும் விரும்புகிறார்கள்.

இதேவேளை உண்ணாட்டு நிலவரமும் அரசுக்குச் சாதகமாக இருப்பதாகத் தெரியவில்லை. ஈரானிய எண்ணெய்யைக் கொள்வனவு செய்யக்கூடாது என்ற அமெரிக்காவின் உத்தரவின்படி நடக்க வேண்டிய நிலையில் இலங்கை இருக்கிறது. பிரதமருக்கு எதிரான போதை மருந்துக் குற்றச்சாட்டும் வலுப்பெற்று வருகிறது.

இலங்கைப் பிரச்சினை ஐ.நா. செல்வதற்குக் காரணமாக இருந்தவர் இன்றைய ஜனாதிபதிதான். எனவே, ஐ.நாவின் அறிவுரைகளை அவர் நிறைவேற்றியேயாக வேண்டும். சர்வதேச சமூகத்துடன் பேசி ஒரு நல்லமுடிவை எட்டாவிட்டால் நாடு பிளவுபடுவது தவிர்க்கமுடியாததாகிவிடும் என எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அரசை எச்சரித்திருப்பது நிலைமையின் பாரதூரத்தைக் காட்டுகிறது.

இனிமேலும் போலி உத்திகள்மூலம் தமிழர்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றிவிடலாமென அரசு கனவுகாண்பது நல்லதல்ல. வடக்கில் இராணுவக் குறைப்பு, கையகப்படுத்தப்பட்ட தமிழர் காணிகளின் மீள் ஒப்படைப்பு, தமிழ்ப் பகுதிகளில் சிங்களக்குடியேற்றங்களுக்கான முற்றுப்புள்ளி போன்ற ஒருவாரத்துக்குள்ளே செய்யக்கூடியவற்றையாவது உடனடியாகச் செய்வதன்மூலம் தமிழர்பால் அரசுதன் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்செல்வி பேணிய தவத்தமிழ் மகத்துவம்



சிவ-சண்முகவடிவேல்

அருணகிரிநாதர் சுவாமிமலைச் சுவாமிநாதன் மீது திருப்புகழை விருப்புடன் பாடுகின்றார். இறை புகழ் இசைக்க இன்பத் தமிழ் தந்த மயில் மேலழகா என்கின்றார். உச்சி மேல் வைத்து முருகனை மெச்சுகின்றார். அரிய தமிழ் தந்தமையைச் சொல்லுகின்றார்.

முருகு என்றால் அழகு. அழகன் அருளில் மொழி அருந்தமிழ். தவத் தமிழ் என்றால் தவத்தை உடையவர்கள் தந்த தமிழ் என்று பொருள் உண்டு. கொன்றை சூடியார் தவத் தையே குணக்குன்றெனக் கொண்டவர். சிவபெருமான் அதி தவ சிரேட்டரான அகத்திய முனிவருக்கு அறிவுறுத்தியது அருந் தமிழ். பொதிய முனி பதிய வைத்தது அருந் தமிழாம் அகத் தியம்.

அவ்வாறான ஆன்றோர்களாலும் ஆன்று அவிந்து அடங்கிய சான்றோராலும் தழைத்த தமிழ் ஆதலினால் தவத்தமிழ் எனப்பட்டது. அத் தமிழில் வல்லவராதலினால் சிவத்தமிழ்ச் செல்வி என்னும் சிறந்த பட்டத்தால் பல்லோராலும் பாராட்டப்பட்டவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

தங்கம் மாவானால் உலகெங்கும் வியாபித்துச் சூரிய ஒளியில் பிரகாசிக்கும். அது போன்று அம்மையார் அகிலம் எங்கும் அடங்காப் புகழ் பூத்துப் பொலிந்தார்.

தமிழ்ச் சுவையை நன்று மென்றார். தின்றார். பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாரெல்லாம் பழி பாவங்களை வென்றார். அவருடைய பக்தி வெள்ளம் தமிழ் ஆளுக. கரை புரண்டு ஓட குரல் வளம், இசை வளம் சிந்தனைக் கருவூலம் இருமருங்கும் வரம்பாக அணை கட்டியது. முருக பத்திச் சுவை சர்க்கரைப் பந்தலில் தேன் மழையாகப் பொழிந்தது.

திருக்கோயில் சொற்பொழிவு, மேடைப் பிரசங்கம், மாநாட்டுத் தலைமைப் பேருரைகள் எல்லாமே கேட்போர் செவிகளில் தித்தித்தது. அம்மையார் திருக்கோயில் திருவிழாவில் திருமுறைகளைத் தேனாகப் பருகச் செய்தார். ஆண்டுக்கு ஒரு முறை அடியார்களை அழைத்து திருமுறை முற்றோதல் திகழ வைத்தார். நிறைவு நாளில் அன்னப் பாலிப்பும் பேசும் தமிழுமாகக் கோலாகலம் செய்தார். திருமுறைக்கென துர்க்கா தேவி ஆலய வீதியில் இடம் ஒன்று அமைத்தார். திருமுறை மடம் எனத் திருப் பெயரும் இட்டார்.


ஆண்டுக்கு ஒன்றாக மூன்று புராணங்களைப் போற்றினார். சிவபெருமானுடைய மூன்று திருக் கண்களைப் போன்ற பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் பாட்டும் பயனும் ஆகியது. புராணபடன வித்தகர்கள் மூலம் விருத்தியுரை விளம்ப வைத்தார்.

திருவெம்பாவை நாள்களில் திருவாதவூரடிகள் புராணம் ஓதலும் உரை விரிப்பதுமானார். சிவராத்திரி அன்று அடிமுடி தேடு படலம் படிக்கப்படும். ஆலய திருவீதி மற்றும் கோயிலின் உட்புறத்தில் கூட்டுப் பிரார்த்தனை செய்வித்தார்.

அறிஞர்களை ஆதரித்தார். கலைஞர்களுக்குக் கை கொடுத்தார். அடியவர்களை ஆதரித்தார். அறக்கொடை நிதியிலிருந்து பொன் மழை பொழிந்தார். இரும்பு மனங்களையும் இளகச் செய்து பத்தரை மாற்றுப் பசும் பொன்னாக்கினார். புவி புகழ வைத்தவர் தங்கப் பெயர் பூண்ட அம்மா- (அன்னை) என்றால் அது மிகையாகாது.

# பெற்றோர்களே பிள்ளைகளை சரியாக வளர்க்கிறீர்களா?

குழந்தைகள் இப்போது இருக்கும் நிலையில் இன்னும் எந்தவிதமாகச் சிறப்பு சேர்க்கலாம் என்கிற மாதிரி யான தன்னம்பிக்கைப் பேச்சுக்குத் தான் இன்றைய தலைமுறை காது கொடுக்கிறார்கள்.



அருவி

பிள்ளைகளை வளர்க்கும் விடயத்தில் பெற்றோர் எப்போதுமே பாசமாகவும் அக்கறையாகவும் இருக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதில் வைத்துக் கொண்டு அவர்கள் காட்டும் அந்த அக்கறை தான் பிள்ளைகளை பெற்றோர் நினைத்துப் பார்க்கும் உயரத்தில் நிறுத்தி வைத்து அழகு பார்க்கிறது.

ஆனால் பலரும் ஆலோசனை என்ற பெயரிலோ, கட்டளை என்ற பெயரிலோ பிள்ளைகளை தங்கள் எதிர்பார்ப்புக்கேற்ற விதத்தில் வளைக்கப் பார்க்கிறார்கள். இந்தத் திணிப்பு பல நேரங்களில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான இடைவெளியை அதிகரிக்கப் பண்ணி விடுகிறது.

### பழைய கதைகள் சொல்லும்போது பக்குவமாக சொல்ல வேண்டும்

குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும்என்பதைவிட அவர்களை எப்படியெல்லாம் வளர்க்கக் கூடாது என் பதைத்தான் முதலில் பெற்றோர் தெரிந்து கொள்ள வேண்டும். சில அப்பாக்கள் இருக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்பட்டு படித்து வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வந்திருப்பார்கள்.

இவர்கள் தங்கள் பிள்ளைகளின் மாணவப் பருவத்தில் தாங்கள் கடந்து வந்த கடின பாதைகளைச் சொல்லி பிள்ளைகளை வளர்க்க முயற்சிக்கிறார்கள். இப்ப நீ காரில் பாடசாலைக்கு போகிறாய்! நானெல்லாம் நடந்தே நாலு மைல் தொலைவில் இருக்கிற பள்ளிக்கூடம் போவேன் தெரியுமா? என்று ஆரம்பிப்பார்கள்.

ஒரு கட்டம் வரை இதற்கு அமைதி காக்கும் பிள்ளைகள், அப்புறமாய் இவர்கள் ஆரம்பிக்கும் போதே முகம் சுழிக்கத் தொடங்கி விடுவார்கள். சாப்பாட்டு மேசையில் வகை வகையாய் உணவு வகைள் பரப்பி வைக்கப்பட்டிருக்கும். பிள்ளைகள் ஆசையாய் சாப்பிடத் தொடங்குவார்கள். அப்போது இந்த அப்பா ஆரம்பிப்பார்.

எங்களுக்கெல்லாம் அப்ப ஒடியல்மா பிட்டுத்தான் காலைச் சாப்பாடாக இருக்கும் என்பார்கள். அப்படியானால் இப்போதும் அதைத்தான் சாப்பிட வேண்டும் என்று அப்பா வற்புறுத்துகிறாரா? என்று பிள்ளைகள் யோசனை ஓடும். இதை சொல்லித்தான் ஆக வேண்டுமென்றால் கொஞ்சம் மாற்றி இப்ப இருக்கிற உணவு வகைகளில் சத்தென்பதே கிடையாது.

எங்கட காலத்தில் நாங்க சாப்பிட்ட சத்தான சாப்பாடுதான் இப்பவும் எங்கள ஆரோக்கியமா வைச்சிருக்கு அதைச் சாப்பிடுறதே தனி ருசி என்று சொன்னாலாவது அப்பா இன்னொரு சத்துணவை அறிமுகப்படுத்துகிறார் என்பதாக எண்ணிக் கொள்வார்கள்.

### நம்பிக்கைப் பேச்சைத்தான் குழந்தைகள் விரும்புகிறார்கள்

குழந்தைகள் இப்போது இருக்கும் நிலையில் இன்னும் எந்தவிதமாக சிறப்புச் சேர்க்கலாம் என்கிற மாதிரியான தன்னம்பிக்கைப் பேச்சுக்குத் தான் இன்றைய தலைமுறை காது கொடுக்கிறார்கள். பெற்றோர் கஷ்டப்பட்டு முன்னேறித்தான் தங்கள் வாழ்க்கையைச் சிறப்புற அமைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது பிள்ளைகளுக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும்.

அதை நாசூக்காகப் பிள்ளைகள் மனதில் பதிகிற மாதிரி ஒருமுறை சொன்னாலே போதும். இன்றைய பிள்ளைகள் உடனே அதைப் புரிந்துகொண்டு விடுவார்கள். இந்த வசதி வாய்ப்பு சும்மா வந்ததல்ல, நம் பெற்றோரின் கடின உழைப்பில்வந்தது என்பதை அவர்களாகப் புரிந்துகொள்ளும்போது இது அவசியம் இது அநாவசியம் என்பதை அவர்களாகவே முடிவு செய்து தேவையற்றதைத் தவிர்த்து விடுவார்கள்.

சில பெற்றோர் இருக்கிறார்கள். குடும்பத்தில் என்ன கஷ்டம் என்றாலும் அதைப் பிள்ளைகளிடம் காட்டிக் கொள்ளமாட்டார்கள். பிள்ளைகள் நம் குடும்பம் நல்ல நிலையில் இருக்கிறது என்பதாக எண்ணிக் கொண்டு அதே ஆடம்பரத்தில் வாழ்வார்கள்.

இந்த மாதிரியான சூழலில் பிள்ளைகளைத் தனியாக அழைத்து குடும்பத்தின் சூழலை விளக்கி விடலாம். தப்பில்லை. அப்புறமாய் இந்தப் பிள்ளைகளும் குடும்பத்தின் நெருக்கடி நிலையைப் புரிந்துகொண்டு பெற்றோருக்கு உறுதுணையாகச் செயல்படத் தொடங்கி விடுவார்கள்.

### பெற்றோர்கள் பிள்ளைகளின் நண்பனாக மட்டும் இருக்க முடியாது

சில பெற்றோர் பெருமையாக எங்கள் குடும்பத்தில் நானும் என் பிள்ளைகளும் நண்பர்கள் போல் பழகுகிறோம் என்பார்கள். உண்மையில் நண்பன் என்ற ஸ்தானம் வேறு. எந்த விடயத்தையும் தப்பாகப் பார்க்கத் தோன்றாது நண்பனின் மனம்.

அப்படி தவறாகவே இருந்தாலும் அதற்கும் ஒரு நியாயம் கற்பித்துக் கொண்டு நண்பனை விட்டுக் கொடுக்க முடியாத நண்பர்கள் தான் இங்கே அதிகம். அதனால் பெற்றோர் ஒருபோதும் பிள்ளைகளின் நண்பனாக முடியாது. சில நேரங்களில் பிள்ளைகளின் செயல்பாடுகளில் அதிருப்தி ஏற்படும்போது அதைக் கண்டித்துச் சொல்ல வேண்டிய கட்டாயம் பெற்றோருக்கு ஏற்படும்.

அப்போது நண்பன் மாதிரி கண்டு கொள்ளாமல் நீ செய்தால் சரியாகத் தான் இருக்கும் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. நேசம் பாராட்டுங்கள். அதே நேரம் தவறு செய்தால் தண்டனை உண்டு என்ற பெற்றோர் முகமும் காட்டத்தானே வேண்டி வரும். அப்போது உங்கள் நண்பன் என்ற நிலை அடிபட்டுப் போகுமே. அதனால் நாங்கள் நல்ல நண்பர்கள் மாதிரி என்றெல்லாம் சொல்லி கண்டிப்பான அப்பாக்கள் [illegible]. [illegible] நேரத்தில் அன்பைக் காட்டுங்கள். கண்டித்து உணர்த்த வேண்டிய கட்டங்களில் கண்டிப்பை வெளிப்படுத்துங்கள் என்பது தான்.

### கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டியுங்கள்

சில வீடுகளில் பிள்ளைகளின் மதிப்பெண் விடயத்தில் மிகக் கவனமாக இருப்பார்கள். நீ நல்ல மதிப்பெண் எடுத்தால் மட்டுமே முன்னேற முடியும் என்பதை வேதம் போல காதுக்குள் ஓதிக்கொண்டே இருப்பார்கள்.

இது பிள்ளைகளுக்கு எரிச்சலான விடயம். ஒருநாள் நீங்கள் எத்தனை மதிப்பெண் எடுத்தீர்கள் அப்பா? என்று கேட்கும் பிள்ளைகளிடம் உங்களால் பதில் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டு விடும். படிப்பதை உற்சாகப்படுத்துங்கள். புரியாத பாடங்களுக்கு மேலதிக வகுப்புகள் ஒழுங்கு செய்யுங்கள்.

உங்கள் அக்கறையைப் பார்க்கும் போதே சுமாராகப் படிக்கும் பிள்ளைகளும் நமக்காக இல்லாவிட்டாலும் நம் பெற்றோரின் எதிர்பார்ப்புக்காகவாவது அதிக மதிப்பெண்களை எடுத்தாக வேண்டும் என்ற எண்ணத்துக்குள் வந்து விடுவார்கள். தங்களை வருத்திக் கொண்டு படிக்கத் தொடங்குவார்கள். இப்படி அதிக மதிப்பெண்கள் எடுத்து மாநில அளவில் சாதித்த பலரின் பின்னணியில் பெற்றோரின் மீதான பிள்ளைகள் அன்பு இருப்பதை மறந்துவிடக்கூடாது.

### வயது வரும் போது பாலியல் அறிவை மெல்லமெல்ல புகட்ட வேண்டும்

பாலியல் விடயம் பற்றி பிள்ளைகளிடம் பேசுவது பாபாதகம் என்பதாக இப்போதும் பல பெற்றோருக்குள் ஓர் எண்ணம் ஓடிக்கொண்டிருக்கிறது.

உரிய நேரத்தில் பிள்ளைகளிடம் அதுபற்றிச் சொல்லவேண்டியது பெற்றோரின் கடமை. குறிப்பாக பெண் பிள்ளைகள் வளரும்போது அம்மாக்கள் அவர்களின் தோற்றமாற்றம் பற்றி, பருவப்பெண் நிலைக்கு அவர்கள் வளர்ந்து கொண்டிருப்பதையெல்லாம் உணர்த்த வேண்டும்.

வயதுக்கு வரும்போதும், வந்த பிறகும் பெண் பிள்ளைகளிடம் தாயின் அன்பும் அக்கறையும் இன்னும் அதிகரிக்க வேண்டும். இந்த அன்பு தான் பெண் பிள்ளைகளுக்கான நிஜமான பாதுகாப்பு கவசம். உங்கள் பிள்ளைகள் பற்றிய விரும்பத்தகாத செய்திகள் உங்களை அடைந்தால் உடனே பதறாமல் மனம் சிதறாமல் அதன் மூலம் பற்றி முதலில் அறிய முற்பட வேண்டும்.

அதற்குப் பதிலாக என் பிள்ளை இதை ஒருபோதும் செய்திருக்கவே மாட்டான் என்று பிடிவாதமாய் மல்லுக் கட்டிக் கொண்டிருக்கக் கூடாது. உங்கள் கணிப்பையும் மீறி பிரச்சினைக்குரிய தவறை உங்கள் வாரிசு செய்திருந்தால் அதற்கான பரிகாரத்தை ஏற்று செயல்படுத்துவதோடு, உங்கள் வாரிசிடம் இன்னும் அதிக தோழமையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். காலப்போக்கில் மாசு அகன்று மாசு மறுவற்ற உங்கள் பிள்ளையைப் பார்ப்பீர்கள். மாறாக, நீ நம் குடும்ப கௌரவத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டாய் என்பதாக வானத்துக்கும் பூமிக்கும் எகிறிக் குதிக்கும் பெற்றோரால் தான் பல பிள்ளைகள் தடம் மாறிப் போய் விடும் விபரீதம் நடந்துவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்யா

**மேடம்**: உணர்ச்சிபூர்வமாகப் பேசுவதை விட்டு அறிவு பூர்வமாகப் பேசுவீர்கள். செயற்படுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார்.

**இடபம்**: நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். நம்பிக்கைக்குரியவர்களை ஆலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மிதுனம்**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரைச் சந்திக்கலாம். பழைய பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள்.

**கடகம்**: எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு. மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உங்களது திறமைகள் மீது நீங்கள் நம்பிக்கை வைப்பது நல்லது. பேச்சால் பிரச்சினைகள் வரக்கூடும்.

**சிங்கம்**: புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**கன்னி**: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

**துலாம்**: புதிய திட்டங்கள் நிறைவேறும். நட்பால் ஆதாயம் உண்டு. உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**விருச்சிகம்**: எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**தனுசு**: உறவுகள் தேடி வருவார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் சந்தை இரகசியங்களைத் தெரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**மகரம்**: செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள். நீண்டநாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**கும்பம்**: உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள்.

**மீனம்**: வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். சிறுசிறு காயங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் மறைமுகத் தொந்தரவுகள் வரக்கூடும்.

# ராஜயோகம்




## விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

இந்த யோகம் மற்றயோகங்கள் ஒவ்வொன்றுடனும் பொருந்துவதாகும். நம்பிக்கையுடனோ, அதின்றியோ எந்த வகையிலாவது சாதனை செய்பவர்களுக்கெல்லாம் இது பொருந்தும். ஒவ்வொரு சாஸ்திரத் துக்கும் தனியான ஓர் ஆராய்ச்சி முறை உள்ளது போல், இந்த ராஜ யோகம் சமய சாஸ்திரத்துக்கே உரிய ஒரு சிறந்த முறை. இந்தச் சாஸ்திரமும் பயில்பவரின் பற்பல இயல்புகளுக்கு ஏற்றவாறு பற்பல செயல் முறைகளை உடையது. இதன் முக்கியப் பகுதிகள் பிராணாயாமம், மன ஒருமைப்பாடு, தியானம் என்பன். கடவுள் நம்பிக்கை உடையவர்களுக்கு 'ஓம்' அல்லது வேறு புனிதச் சொற்களைக் குருவிடமிருந்து பெறுவது பெருந் துணையாக இருக்கும். 'ஓம்' என்பது அனைத்திலும் உயர்ந்தது; அதன் பொருள் பரப்பிரம்மமே. இந்தப் புனிதச் சொற்களை ஓதும் போதே இவற்றின் பொருளையும் தியானிப்பதே முக்கியப் பயிற்சியாகும்.

ஞானயோகம் : இதில் மூன்று பகுதிகள் உள்ளன. முதலாவது, உண்மையைப் பற்றிக் கேட்பது– அதாவது ஆன்மா ஒன்றே மெய்ப்பொருள். மற்றவை யாவும் மாயை (வியாவகாரிகம்) என்பதைக் கேட்டறிதல். இரண்டாவது , எல்லா வகையிலும் இந்தத் தத்துவத்தை நியாய முறைப்படி ஆராய்வது. மூன்றாவது, வாதங்களை முற்றிலும் நிறுத்திவிட்டு, அனுபவத்தால் உண்மையை அறிவது. இந்தக் காட்சிக்கு வேண்டுவனவாகிய நான்கு : (1) பிரம்மமே உண்மை, மற்றவை யாவும் உண்மையற்றவை என்ற உறுதி. (2) சிற்றின்ப நுகர்ச்சியிலுள்ள ஆசையை முற்றிலும் விடுதல். (3) ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்குதல். (4) விடுதலை அடைவதில் மிகுந்த ஆசை என்பவை.

எப்போதும் உண்மைப் பொருளையே தியானிப்பது, ஆன்மாவுக்கு அதன் உண்மையான இயல்பை நினைவூட்டுவது ஆகிய இரண்டுமே இந்த யோகத்தின் வழிகளாகும். இது அனைத்திலும் உயர்ந்த நெறி; ஆனால் அனைத்திலும் மிகவும் கடினமானதுமாகும். பலருக்கு இது அறிவுக்கு எட்டலாம், ஆனால் அனுபவத்தில் உணர்பவர் மிகச் சிலரே.


# சனி கிரகத்தை சுற்றியுள்ள வளையங்கள் 440 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானவை..



சனிக் கிரகத்தைச் சுற்றியுள்ள வளையங்கள் 440 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானவை என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஏனைய கிரகங்களுக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு சனிக் கிரகத்துக்கு உண்டு. இக்கிரகத்தை மட்டுமே வட்ட வடிவ வளையங்கள் சூழ்ந்துள்ளன. இவை எப்போது உருவானது என்ற சர்ச்சை விஞ்ஞானிகளிடையே பல்லாண்டுகளாக இருந்து வருகிறது. இந்தநிலையில் சனிக் கிரகத்தைச் சுற்றியுள்ள வளையங்கள் 440 கோடி ஆண்டுக்கு முன் உருவானவை என நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சனிக் கிரகத்தில் ஆய்வு மேற்கொள்ள நாஸா மையம் வாஸ்சின் என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது. அதில் பொருத்தப்பட்டுள்ள சக்தி வாய்ந்த காஸ்மிக் டஸ்ட் அனலைசர் என்ற கருவி மூலம் சனிக் கிரகத்தின் வளையங்களை போட்டோ எடுக்கப்பட்டு பூமிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதை வைத்துப் போல்டரில் உள்ள கொலொரடோ பல்கலைக்கழக விஞ்ஞானி கச்சா கெம்ப் ஆய்வு செய்தார். அதில் சனிக் கிரகத்தைச் சுற்றியிருக்கும் வளையங்கள் மயிரிழை போன்ற மிக மெலிதாக உள்ளன.

2 லட்சத்து 80 ஆயிரம் கிலோ மீற்றர் நீளம் படர்ந்து இருக்கும் இவை நீள்வட்ட வடிவில் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது.



## நாளை

மார்கழி-24

புதன்கிழமை 08.01.2014

திதி: அட்டமி பி.இ.03.15 வரை

நட்சத்திரம்:

ரேவதி பி.இ.02.32 வரை

சுபநேரம்:

05.02- 06.32 வரை

இராகுகாலம்:12.32-02.02 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 4 | 2 | | | | |
| 1 | | 8 | 3 | | | | | 5 |
| 3 | | 6 | | | | | 9 | 4 |
| | | | | | 9 | | | |
| | | 9 | 8 | | 4 | 2 | | |
| 8 | 1 | | 2 | | | | | |
| 2 | 5 | | | 6 | | 8 | | 1 |
| 6 | | | | | 2 | 9 | | 3 |
| | | | | 8 | 7 | | 6 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 3 | 9 | 5 | 6 | 1 | 2 | 8 |
| 5 | 8 | 9 | 1 | 2 | 7 | 3 | 6 | 4 |
| 1 | 2 | 6 | 3 | 4 | 8 | 7 | 5 | 9 |
| 8 | 9 | 2 | 7 | 3 | 4 | 5 | 1 | 6 |
| 6 | 1 | 4 | 2 | 9 | 5 | 8 | 7 | 3 |
| 3 | 5 | 7 | 8 | 6 | 1 | 4 | 9 | 2 |
| 4 | 7 | 1 | 6 | 8 | 2 | 9 | 3 | 5 |
| 9 | 6 | 5 | 4 | 7 | 3 | 2 | 8 | 1 |
| 2 | 3 | 8 | 5 | 1 | 9 | 6 | 4 | 7 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியின் மூலம் 130 மாணவருக்கு ஆங்கில கல்வி



கொமர்ஷல் வங்கி முன்னெடுத்து வருகின்ற சமூக நலத் திட்டங்களில் ஒன்றான தேசிய மட்டத்தில் ஆங்கில அறிவை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் மூலம் மேலும் 130 மாணவர்களுக்கு ஆங்கில அறிவை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம் ஆங்கில அறிவை பெற்றுக் கொண்டு சான்றிதழ் வழங்கப்பட்ட இரண்டாவது தொகுதி மாணவர்கள் இவர்களாவர். முதல் கட்டம் களுத்துறை மாவட்டத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆங்கில பாடத்திட்டம் இரண்டு மணிநேரம் கொண்ட 16 வகுப்பறை அமர்வுகளாக நான்கு மாதங்களுக்கு நடத்தப்படுகின்றது. Life Eglish Academy (LEA) இந்தப் பாடத்திட்டத்தை நடத்துகின்றது.

இது இலங்கையில் முன்னணி வகிக்கும் ஆங்கில மொழி பயிற்சி நிலையமாகும். தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான மேலதிக பாடநெறியாக இது நடத்தப்படுகின்றது.

களுத்துறை மாவட்டத்துக்கான ஆங்கில பாடநெறி வாதுவ தர்மபால மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது. வாதுவ மகளிர் வித்தியாலயம், பொஹத்தரமுல்ல கனிஷ்ட வித்தியாலயம், மடவில்கொட ஸ்ரீ ஞானானந்த கனிஷ்ட வித்தியாலயம், வீரகம வித்தியாலயம், தம் மானந்த மகா வித்தியாலயம்,புனித மேரிஸ் கல்லூரி வாதுவ, பொத்துபிட்டிய மகா வித்தி யாலயம், தல்பிட்டி கனிஷ்ட வித்தியாலயம், மாவல கனிஷ்ட வித்தியாலயம், மற்றும் பயிற்சிகள் இடம்பெற்ற தர்மபால மகா வித்தியாலயம் என்பனவே முதற்கட்ட ஆங்கில பயிற்சி நெறியில் பங்கேற்ற பாடசாலைகளாகும். மிக விஷேடமாக வடிவமைக் கப்பட்ட இந்த ஆங்கில கல்வித் திட்டம் தனிப்பட்ட ஆளு மைக்கு அவசியமான ஆங்கிலப் பேச்சு வன்மை மற்றும் அடிப்படை எழுத்தாற்றல் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

இந்த ஆங்கிலப் பயிற்சித் திட்டத்தின் குறிக்கோள்கள் பற்றி விளக்கமளித்த கொமர்ஷல் வங்கியின் சந்தைப்படுத்தல் பிரதி பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க தனிப்பட்ட ஆளுமை விருத்திக்கு ஆங்கில அறிவு இன்றியமையாததாகும். ஒரு தேசம் உலகளாவிய சாதனைகளை எட்டவும் அவசியமானதாகும். மாணவர்கள் குறிப்பாக கிராமப் பகுதி மாணவர்கள் தங்களது ஆங்கில அறிவு ஆற்றலை மேம்படுத்துவதன் அவசியத்தை நன்கு உணர்ந்துள்ளனர். (த)



செலான் ஷீவர் சேமிப்பு மற்றும் நடைமுறை கணக்கானது சீட்டிழுப்பின்றி இலவச பணப் பரிசுத் திட்டங்களை உள்ளடக்கிய ஒரு சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்காகும். கிளிநொச்சி கிளையில் நடைபெற்ற செலான் ஷீவர் சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்குக்கான விழிப்புணர்வு நிகழ்வின்போது நிரப்பப்பட்ட கூப்பனில் தெரிவு செய்யப்பட்ட மூன்று வெற்றியாளர்களில் முதல் வெற்றியாளரான உருத்திரபுரத்தைச் சேர்ந்த வி.ராஜேஸ்வரிக்கு முகாமையாளர் இ.சதாகரனால் 10,000 ரூபா பணப்பரிசு வழங்கப்படுகிறது.



இரண்டு தவணைகளுக்கான கட்டணமாக காப்புறுதிக் கட்டணம் ரூபா 446 செலுத்திய நபருக்கு ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினர் ஒரு லட்சம் ரூபாவை இழப்பீட்டுத் தொகையாக வழங்கினர். புத்தூர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் பலியான யாழ்.பல்கலைக்கழக மாணவனான சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த சோகேஸ்வரன் கஜேந்திரன் என்பவருக்கு இழப்பீட்டுத் தொகையான ஒரு லட்சம் ரூபா அவரின் தாயாரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. சாவகச்சேரி கிளை முகாமையாளர் எம்.கோபிதாஸன் காசோலையை கையளிப்பதையும் அருகில் நிறுவன விற்பனை மேற்பார்வையாளர்களான எம்.பிரகாஸ், தனபிரகாஸ் ஆகியோரும் காணப்படுகின்றனர். (த-9)

# பெண்களின் சுயதொழில் மேம்பாட்டுக்கு உதவுகிறது பிரதேச அபிவிருத்தி வங்கி



யாழ்ப்பாணம், ஜன.7

பெண்களது வாழ்வாதாரத்தை தரம் உயர்த்தும் நோக்குடன் அவர்களின் சுயதொழில் முயற்சியை அபிவிருத்தி செய்வதற்கான கடன்களை பிரதேச அபிவிருத்தி வங்கி முதன்மைப்படுத்தி வழங்கி வருகிறது என்று பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ்.கீர்த்திசீலன் தெரிவித்தார்.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளையின் புதுவருட நிகழ்வு கடந்த முதலாம் திகதி வங்கியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவிக்கும் போது:-

பெண்களுக்கு இடையில் குழு அடிப்படையில் கடன் உதவிகளை வழங்கி கூடுதல் இலாபத்தை வடமாகாணத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளை பெற்றுள்ளது. வங்கிக்கு தனிப்பட்ட இலாபத்தைப் பெற்றுக் கொடுப்பது மட்டும் நோக்கமாக இல்லாது பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதே இந்தக் குழு அடிப்படையிலான கடன் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த ஆண்டில் இதனை மேலும் விரிவு படுத்துவதற்காக இரண்டரை இலட்சம் வரையான வட்டியில்லாக் கடனை சுயதொழில் முயற்சியாளர்களாக உள்ள பெண்களுக்கு வழங்க வங்கி முன்வந்துள்ளது.

> பெண்களுக்கு இடையில் குழு அடிப்படையில் கடன் உதவிகளை வழங்கி கூடுதல் இலாபத்தை வடமாகாணத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளை பெற்றுள்ளது. வங்கிக்கு தனிப்பட்ட இலாபத்தைப் பெற்றுக் கொடுப்பது மட்டும் நோக்கமாக இல்லாது பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் .

சுயதொழில் முயற்சியாளர்கள் தாம் மேற்கொள்ளப் போகும் தொழிலின் அடிப்படையில் தகுதியான கடன் திட்டத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

நாடளாவிய ரீதியில் 267 கிளைகளைக் கொண்டுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கி அரச வங்கிகளில் அதிக இலாபத்தை ஈட்டி மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. சமூக நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வங்கி மேலும் பல சேவைகளை விரிவுபடுத்தி வாடிக்கையாளர்களுக்கு நன்மையைப் பெற்றுத்தரும்-என்றார். (த-14)






செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையில் புதுவருட நிகழ்வுகள் இடம்பெற்றன. கிளையின் முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிவஸ்ரீ பா.முரளிதரக் குருக்கள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். பெருமளவு வாடிக்கையாளர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி மாலினி பாலசந்திரா
அவர்களின் அன்பு மாமனார்
ஏகாம்பரம்பிள்ளை கதிர்காமத்தம்பி
அவர்கள் 08.12.2013 அன்று இறைபதம் எய்தியதையிட்டு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடையவும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை, வட்டுக்கோட்டை.
(41979) (3.6.4)

# முதலாம் ஆண்டு நினைவு



பிறப்பு 12★03★1968
இறப்பு 19★12★2012
திதி: ஸப்தமி [07.01.2014]

ஆவரஞ்சாட்டி கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் இடைக்குறிச்சி வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் கந்தசாமி காந்தராசா

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அப்பாவே!
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு மறையாது அப்பா!
உங்களின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

இடைக்குறிச்சி, வரணி.
என்றும் நினைவில்
மனைவி, பிள்ளைகள்.
(F/10965)(3.6.4)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 18 - 02 - 1925
இறைவன் மடியில் 07 - 12 - 2013



அமரர்
ஆறுமுகம் கந்தையா
கொக்குவில் கிழக்கு - பிரபல வர்த்தகர் (மாத்தளை)

எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாயிருந்து
ஆதரித்த அன்புத் தெய்வமே!
எங்கள் உள்ளங்களில் நீங்கள் நினைவாய்
நின்று வழிகாட்டுவீரே!

கடந்த 07.12.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல உதவிகளையும் முன் வந்து உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை நவில்கின்றோம்.

குறிப்பு: 31ஆம் நாள் நிகழ்வுகள் நேற்று (06.01.2014) நடைபெற்றன.

உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

தகவல்: குடும்பத்தினர்.
(C/11161) (7.6.3)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
சின்னத்தம்பி கிருபாகரன்

தோற்றம் 15.04.1955
மறைவு 08.12.2013

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட
எமது குடும்பத் தலைவர்
சின்னத்தம்பி கிருபாகரன்
கடந்த 08.12.2013 சிவபதமடைந்தார்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.01.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
பட்டினசபை வீதி, மானிப்பாய்.
(41889) (7.6.3)


## முதியோர் இல்லத்தில் இன்று ஒளிவிழா

குருநகர்.ஜன.7

கைதடி அரச முதியோர் இல்லத்தில் ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல்ல மண்டபத்தில் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறும். (ஒ-51)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையில் பெற்று விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார். (ந-122)

## வவுனியாவில் நடந்த திருவாசக விழா

வவுனியா. ஜன.7

வவுனியா தமிழ்ச் சங்கம் சிறப்பாக நடத்திய திருவாசக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மங்கல விளக்கினை தம்பையா சிவபாலன் - மனோராஞ்சிதம் தம்பதியர் ஏற்றி வைத்தனர். 'நான் கலந்து பாடுங்கால்' என்னும் மகுடத்தில் இடம் பெற்ற கருத்தரங்கத்தில் "விலங்கு மனம்" எனும் பொருளில் சிவஜன் உரையாற்றினார். தமிழ்மணி கே.கே.அருந்தவராஜா, கவியெழில், திருமதி த.நிறைமதி, ல. சதீஸ்குமார் , சி.வரதராஜன், செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில்திருவாசகத்திருமுறைக்குத்தொண்டாற்றிவரும் கலாபூஷணம் வை.செ.தேவராசாவும் நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் அ.பாலச்சந்திரனும் (சுதந்திரன்) தமிழ்ச் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-402)

## சித்தன்கேணி சிவன் ஆலயத்தில் மாலைநேர பஜனை

வலி.தென்மேற்கு.ஜன.7

சைவ மக்கள் மத்தியில் சமயத்தை வளர்க்கும் நோக்குடன் சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வராலயத்தில் கடந்த வெள்ளிக் கிழமையிலிருந்து மாலை நேர பஜனை ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவர் தி.ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஜங்கரன், வைத்திய அதிகாரி ஆ.நந்தகுமாரன், இளைப்பாறிய விலை மதிப்பீட்டு உத்தியோகத்தர் வி.க.விஜயரட்ணம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர். சபா வாசுதேவ குருக்கள் ஆசியுரை வழங்கினார். (ஒ-115)

## கைதடி முதியோர் இல்ல ஊழியர் நலன்புரி சங்க நிர்வாகிகள்

கைதடி அரச முதியோர் இல்லத்தின் ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடை பெற்றது.

இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைவராகவும், சு.கமலநாதன் செயலாளராகவும், வை.இராஜேஸ்வரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப் பட்டனர். பி.ஜே.கனியூட், எஸ்.புஸ்பராசா, கே.புவனலோஜினி, திருமதி எஸ்.செல்வமலர், பி.பாஸ்கரன், திருமதி கே.இராஜகுமாரி ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப் பட்டனர்.

இதனைத் தொடர்ந்து வருடாந்த ஒன்று கூட ... இல்லத்தில் நடைபெற்றது. (ஒ-51)


# நான்காம் ஆண்டின் நினைவுச் சுவடுகள்



அமரர் சிதம்பரப்பிள்ளை குலசபாநாதன்
(முன்னாள் தலைமை அதிகாரி - தேயிலைத் தொழிற்சாலை)
திதி: மார்கழி மாத பூர்வபக்க சப்தமி

எம் அப்பா ....!
எம்மை விட்டு நீங்கி
நீண்டது நான்காண்டுகள்...
எம் நினைவில் வாழ்வீர்கள்
நிறையும் எம் வாழ்நாள் வரை

தோற்றம் 06.06.1946
மறைவு 23.12.2009

கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு.
குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

08.12.2013 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி




திருமதி
கருணாவதி சண்முகலிங்கம்
அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.01.2014) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணியளவில் நயினாதீவு கங்காதரணி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால்
அத்தருணம் தாங்களும் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு,
தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

7ஆம் வட்டாரம்.
நயினாதீவு.
021 568 5821
குடும்பத்தினர்.
(42014) (7.6.3)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்: 19.10.1924
மறைவு: 08.12.2013

08.12.2013 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர் ஏகாம்பரம்பிள்ளை கதிர்காமத்தம்பி
(இளைப்பாறிய பிரதம இலிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (07.01.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அங்கு நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு றோட், மூளாய் கிழக்கு, சுழிபுரம்.
குடும்பத்தினர்.
(42084) (2.6.3)

# ஈரவிழிகளுடன் மூன்று வருடங்கள்...

எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய
பாசமகன்
அமரர்
அன்னராசா தபீபன்



மலர்வு 10.04.1982
உதிர்வு 11.01.2011

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப்பிள்ளையாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி சுவரிந்தனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
கனத்த இதயமுடன் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்
ஆண்டுகள் மூன்று ஆனபோதும்
ஆறவில்லை எம்மனம் காயவில்லை எம் ஈரவிழிகள்.

இன்று (07.01.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

161, காரைநகர் வீதி,
வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(42063) (7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாந்தைகிழக்கு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01ஆம் திகதி முதல் மாந்தைகிழக்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ இலக்க கடிதத்திற்கு அமைவாகவும் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமை யுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சேவை நிபந்தனைகள்
1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

அடிப்படைத் தகைமைகள்
1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களை கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் மாந்தைகிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் விண்ணப்ப இறுதி தினத்தன்று வசித்து வருபவராகவும் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். (கிராம அலுவலரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட வதிவிட சான்றிதழ் / வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
5. தொழில்நுட்பம்சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் தேவையான தொழிற்தகைமை சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் முறை
அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை
1. மாந்தைகிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா100.00 இனைச்செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப் பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படவேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத் தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக்கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படுதல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்கு பின்னராகவோ, நியமனத்தின்போதோ அல்லது முன் வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் நிறுத்தப்படும்.

விண்ணப்ப முடிவுதிகதி
2014.01.24 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பதவிகள்
1. காரியாலய காரியசகாயர் பதவி (வெற்றிடம் 02)
2. வேலை/வெளிக்களத்தொழிலாளர் பதவி (வெற்றிடம் 01)
3. சுகாதாரத் தொழிலாளி (வெற்றிடம் 01)

கல்வித் தகைமை
கல்விப் பொதுதராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/ சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சம்பளம்
2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-1-2006-A ஆகும். இதற்கமைய மாதாந்தம் 11730-120x10-130x10-145x10-160x12-17600 என்ற சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவர்.

4. மின் இணைப்பாளர் பதவி (வெற்றிடம் 01)
5. ஆயுர்வேத மருந்தாளர் (வெற்றிடம் 01)

கல்வித் தகைமை
கல்விப்பொதுதராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/ சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

தொழில்சார் தகைமைகள்
இப்பதவிக்கு விண்ணப்பக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித்திகதி அன்று ஆறு மாதங்களுக்கு குறையாதவகையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து தொழிற்பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பளம்
2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-2-2006-A ஆகும். இதற்கமைய மாதாந்தம் 12210-130x10-145x10-160x10-170x12-18600 என்ற சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவர்.

6.சாரதிப்பதவி (வெற்றிடம் 02)
கல்வித்தகைமை
கல்விப் பொதுதராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/ சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

ஏனைய தகைமைகள்
1. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை / தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப இறுதிதிகதிக்கு மூன்று (3) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் வாகன சாரதியாக 3 வருட அனுபவத்திற்கான சான்றிதழ்
3. விண்ணப்பதாரி அகக்குறைந்தத 5அடி 2 1/2 அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியை கொண் டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். இதற்கான மருத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
5. பெருந்தெரு விதிமுறைகள்பற்றி சிறந்த அறிவைக்கொண்டிருத்தல் வேண்டும் .

சம்பளம்
2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-3-2006-A ஆகும். இதற்கமைய மாதாந்தம் 12470-130x10-145x10-160x10-170x12-18860 என்ற சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவர்.

திருமதி கு.சண்முகலிங்கம்
செயலாளர்
மாந்தை கிழக்கு பிரதேச சபை,
பாண்டியன்குளம்.

06.01.2014 (சி/10970)(7.6.3)

# சடலம் மீட்கப்பட்டமை தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியா, ஜன.7

மெனிக்பாம் மூன்றாம் பிரிவு கிராமத்திலுள்ள வீடொன்றின் மலசல கூடக் குழியில் இருந்து சடலம் மீட்கப்பட்டமை தொடர்பாக செட்டிக்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

வவுனியா மெனிக் பாம் மூன்றாம் பிரிவு கிராமத்தில் உள்ள வீடொன்றில் துர்நாற்றம் வீசியது தொடர்பாக அயலவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்தச் சடலம் மீட்கப்பட்டிருந்தது. முனியாண்டிதுரை சாமி (வயது-26) என்பவரே சடலமாக மீட் கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. சந்தே கத்தின் பேரில் பொலிஸார் அவரது மனைவி மீது தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இந்தக் கொலை தொடர்பாக பல கோணங்களிலும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

(க-402)

## நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்.மாவட்ட பார வூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கபொதுக் கூட்டத்தின் புதிய நிர் வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. செ.ஜெயக் குமார் தலைவராகவும், இ.பாக்கியநாதன் உப தலைவராகவும் க.செல்வச்சந்திரன் செயலாளராகவும், ந.கௌரிதரன் பொருளாளராகவும், தா.இராஜேந்திரம், ம.ஜெயந்தன், க.இலங்கநிதன், க.ஜெயக்குமாரன், வை.மாணிக்கம் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஓ)

எதிர்வரும் 09.01.2014 அன்று மாலை 4.00 மணிக்கு பிரபல பல், முக சீரமைப்பு (Othodontic)சத்திரசிகிச்சை நிபுணர் சிகிச்சை அளிப்பதற்கு 342, பலாலி வீதியில் (பரமேஸ்வராச் சந்தி) உள்ள நொதேன் சென்றல் வைத்தியசாலைக்கு வரவிருப்பதால் சிகிச்சை பெறவிரும்பும் சகலரும் சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.




பல், முக சீராக்கல்
Dr. P. Sathyakumar
Consultant orthodontist

(சி/10969) (3.6.4) NORTHERN CENTRAL HOSPITALS (PVT) LTD
342, Palaly Road, Jaffna, Srilanka T.P: 021 221 9988, 021 221 9977,F:021 222 2263
E: nchjaffna @ gmail .com, inquiry @ nchjaffna.com W: www.nchjaffna.com.

## உறவினர் தொடர்பு கொள்ளவும்



தற்போது யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள ★போடப் பட்ட படத்தில் உள்ளவரின் மகள் படத்திலுள்ள ஏனைய உறவினரைத் தெரிந்தால் உடன் கீழ் குறிப்பிடப்பட்ட தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றார்.

தொடர்பு: 077 770 5097
For Contact: Rev.Fr.Vasanthan,
Bishop's House, Jaffna.
(42085) (12.3.8)

O/L பரீட்சைகளின் பின்
கொம்ப்யூட்டர் கல்வி
மற்றும் ஆங்கில பேச்சுப்பயிற்சி
CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
Direct Offer
Quality & Affordability

Diploma in Office Application — DDMO 3 months
Diploma in Computer Application — DCA 4 months
Tally Financial Accounting Programme — TFAP 3 months
Diploma in Web Design & Development — DWD 3 months
Advanced Dip. in Hardware & Networking — ADCHN 2 months
Professional Certificate in Graphic Design — PCGD 3 months

Diploma in Office Administration
Electronic Office Applications | Quick Books Accounting | DTP Applications
ADOA 1 பாடநெறியில் 3 டிப்ளோமாக்களை பெற்றிடுங்கள்

Multimedia Courses
Diploma in Digital Pre-Press
Diploma in Digital Video Production
Duration : 3 Months
Diploma in Web Animation
Diploma in 2D & 3D Animation

Spoken English
Qualified & experienced tutor
Duration : 3 Months

விசேட கட்டணச்சலுகைகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு

| யாழ். நகர | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677 | கொடிகாமம் வீதி, 021 2262399 | கட்டுக்காணி வீதி, 021 2270267 | A9 வீதி, ஆனந்தபுரம், 021 2283925 | 192, குருமண்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுங் குளிரால் கொழுந்து பறிக்கப் போகாமல் பெண் தொழிலாளிகள் வீட்டுக்குள் முடக்கம்

*பணிகள் ஸ்தம்பிதம் எனத் தோட்ட நிர்வாகம் விசனம்*

பதுளை பிரதேசத்தில் நிலவும் கடுங் குளிரால் தேயிலைக் கொழுந்து பறிப் பதற்குப் போக முடியாத பெண் தொழிலாளிகள் தமது வீட்டுக் குள் முடங்கிக் கிடப்பதால் தோட்டங்களின் வழமையான பணிகள் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளதாகத் தோட்ட நிர்வாகிகள் விசனம் தெரி விக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக நிலவிவரும் அசாதாரண குளிரால் ஹல்துமுல்ல, அப்புத்தளை, பண்டார வளை, அட்டாம் பிட்டி, பதுளை, பசறை, மடுல் சீமை போன்ற பகுதிகளில் அன்றாடப் பணி கள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

அத்துடன், குளிருடன் சேர்ந்த அதிகப் பனி மூட் டம் கொழுந்து பறிக்கும் வேலையை மேலும் சிரமமாக்கியுள்ளது எனவும் வழமையாக வேலைக்கு வரும் பெண்களில் தற்சமயம் 20 சத வீதமானவர்களே வேலைக்கு வருவதாகவும் தோட்ட நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன. நாளாந் தம் கிடைக்கவேண்டிய கொழுந்தின் வரவு மிகவும் வீழ்ச்சி யடைந்திருப்பதால் தேயிலைத் தொழிற்சாலைகளும் வழமைபோல இயங்க முடியாமல் போயுள்ளன.

இந்த நிலைமையில் வேலைக்குப் போக முடி யாத தொழிலாளர்களுக்கு மனி தாபிமான அடிப் படையில் அவர்களது நாளாந்த சம்பளத்தில் அரை வாசியையாவது வழங்கவேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் ஊவா மாகாணசபை உறுப்பினர் அரவிந்தகுமார் சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகங்களிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார். (வ-04)

# மாடுகளுக்கு கால்வாய் நோய் தடுப்பூசி

தென்மராட்சி, ஜன.7

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மாடுகளுக்கு கால்வாய் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருவதாக சாவகச்சேரி கால்நடை வைத்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

முதல் கட்டமாக கைதடி, நாவற்குழிப் பிரதேசங் களில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மாடு களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

# அரச வைத்தியசாலைகளில் திடீர்ச் சுற்றி வளைப்புகள்

*தரமான சேவை நடக்கிறதா என்பதை அறிய*

நாடளாவிய ரீதியில் உள்ள அரச வைத்தியசாலைகளில் திடீர் சுற்றி வளைப்புகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித் துள்ளது.

மாதத்திற்கு 3 சுற்றிவளைப்புக் களையேனும் மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணிப் புரை விடுத்துள்ளார்.

வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் மக்களுக்கு தர மான சேவை கிடைக்கின்றதா என்பதைக் கண்டறிவதே இதன் நோக்கம் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் விசேட சுற்றி வளைப்புப் பிரிவின் அதிகாரிகளை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்து வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் உள்ள வாக னங்களின் பயண விவரம் பதிவு செய்யப்படுகின்றமை குறித்து விசேட கவனம் செலுத்துமாறும் சுகாதார அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஓ-சி)

# தமிழ் மக்களின் உரிமைகளுக்காக துணிவுடன் குரல் கொடுத்த மாமனிதர்

*அமரர் குமார் பொன்னம்பலத்துக்கு ஆயர் புகழஞ்சலி*

வவுனியா, ஜன.7

அமரர் குமார் பொன்னம்பலம் தமது இறுதிக் காலம் வரை தமிழ் மக்களின் உரிமைகளுக்காக துணிவுடன் குரல் கொடுத்த மாமனிதர். இவ்வாறு தெரி வித்தார் மன்னார் ஆயர் வண.இராயப்பு யோசப்.

மறைந்த மாமனிதர் குமார் பொன்னம் பலத்தின் 14 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வவுனி யாவில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு உரையாற் றும் போதே அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்று கையில்;

வெண்ணெய் திரண்டு வரும் வேளை யில் பானை உடைந்ததைப் போன்று முக்கியமான தருணத்தில் இந்த மாமனி தரை இழந்து நிற்கின்றோம். இந்த அரசு எமக்கு ஒன்றுமே செய்யப்போவதில்லை என்பது எமக்கு அன்றே தெரியும். அமரருடன் நெருங்கிப் பழகியவன் என்ற வகையில் அவர் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்ததையும், அவர்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற் காக எடுத்த முயற்சிகளையும் நான் நன்கறிவேன். இவர் அப்போது மேற் கொண்ட முயற்சிகள் வெகு விரைவில் நிறைவேறும்-என்றார் ஆயர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா கிளையின் ஏற்பாட்டில் வவுனியா நகர சபை மண்டபத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்டக் கிளையின் உப தலைவர் எஸ்.கஜேந்திரன் தலை மையில் நினைவுதின நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாமனிதரின் உருவப்படத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின ருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம், மன்னார் ஆயர் வண.இராயப்பு யோசப் மற்றும் பலர் தமது அஞ்சலி யைச் செலுத்தினர். (க-421)


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தில் கடமையாற்றிய பணியாளர் ஆ.சங்கரநாதன் அவர்களின் அன்புத் தந்தை

**மாதர் ஆறுமுகம்**

அவர்கள் காலமானதையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத் திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள், புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்.** (42087) (12.6.3)


# தாபன விதிக்கோவை திருத்த பரிந்துரைக்கலாம்

வரணி, ஜன.7

தாபன விதிக் கோவையை திருத்தி அமைப்பதற்கு அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச ஊழியர்களின் கடமைகளை நிறைவேற்றிப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் அரச அலுவலர்களின் சேவை நிபந்தனைகள், சிறப்புரிமை கள் என்பனவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்படும் தாபன விதிக்கோவை யில் திருத்தம் தொடர்பில் பொது மக்களின் ஆலோசனைகள், கருத் துக்களையும் பகிரங்க அறிவித்தல் மூலம் குறித்த அமைச்சு கோரியுள்ளது.

தாபன விதிக்கோவையில் திருத்தப்பட வேண்டிய விடயங்கள், குறித்த கோவையில் புதிதாக உள்ளடக்கப் படவேண்டிய விடயங்கள் மற்றும் நீக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து தபாலில் அல்லது மின்னஞ் சல் முகவரி ஊடாக ஸ்தாபனப் பணிப் பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-122)

# கல்வி நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சை

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்III இற்கு ஆள் சேர்ப் புச் செய்வதற்கான திறந்த நிலை ஆளணிக்கான இரண் டாம் கட்டப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு நாடளாவியரீதியில் 5 ஆயிரம் பரீட்சார்த்திகள் மட்டில் தோற்றவுள்ளனர்.

முதலாம் கட்டப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி அதில் சித்திய டைந்தவர்களிடம் இருந்து இரண்டாம் கட்டப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இரண்டாம் கட்ட பரீட்சையில் பெற்றுக்கொண்ட உயர்புள்ளி அடிப்படையில் 120 பேர் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்III இற்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்III இற்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கு திறந்த நிலையில் 30 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகள் 25 வீதமானோரும் ஆசிரியர், அதிபர் சேவையில் உள்ளவர்களில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் 30 வீதமானோரும், இலங்கை அதிபர் சேவை தரம்I இல் உள்ளவர்களில் இருந்து சேவை மூப்பு திறமை அடிப்படையில் 45 வீதமானோரும் சேர்த்துக் கொள்ளப் படுவது உண்டு. இந்த முறை இலங்கை கல்விநிர்வாக சேவை ஆளணிக்கு 480 பேர் சேர்த்துக்கொள் ளப்படவுள்ளனர். (ந-11)


## மரண அறிவித்தல்

# சோமு வடிவேல்

(முன்னாள் முகாமையாளர்-புங்குடுதீவு நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்)



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் யாழ்ப்பாணம், வட்டக்கச்சி, இராமநாத புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமு வடிவேல் 05.01.2014 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சோமு- தங் கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான தியாக ராசா -அன்னம்மா மற் றும் பசுபதிப்பிள்ளை- மனோன் மணி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற பரமேஸ்வரி மற்றும் மனோன்மணி ஆகியோ ரின் அன்பு கணவரும், மதியழகன் (யாழ். வட்டக் கச்சி இராமநாதபுரம்), தமிழ்மாறன் (கண்ணன்- பிரான்ஸ்), தமிழ்ச்செல்வி (செல்வி -ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந் தையும், புஸ்பவதியின்(பிரான்ஸ்) அன்புச் சகோதரனும், சாந்த ரூபி(யாழ்), பாலசுதா(பிரான்ஸ்), விக்கினேஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மைத்துனரும், சந்துஷன், டினோஷன், சதீஸன், தட்சாயினி, நிதுஷன், கஜானி, ஜிந்துஷன், கேதாரன், நிவேசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு 93/12, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

93/12, இராசாவின்தோட்டம்,
யாழ்ப்பாணம். (42088)(4.8.3) மதியழகன் (மகன்)



# சாவகச்சேரி நகரில் இரு விபத்துகள்

சாவகச்சேரி நகர் பகு தியில் இரு இடங்க ளில் வாகனங்கள் மோதிக் கொண்ட சம்ப வங்கள்நேற்றுக் காலை இடம்பெற்றன,

சாவகச்சேரி நுணா வில் கிழக்கு பகுதி ஏ-9 வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள் கள் மோதிக் கொண் டதில் நுணாவில் மேற் கைச் சேர்ந்த 22 வயது பெண் ஒருவர், காயமடைந்தநிலையில் சாவகச்சேரிஆதாரவைத் தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

பிரதேசசெயலகம் முன் பாக வேகமாக வந்த கார் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை [illegible] இதில் எவருக் கும் சேதம் ஏற்பட வில்லை. (ஓ-9)


## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம்
03.03.1982

மறைவு
09.12.2013

மார்கழி 24ஆம் நாள் (08.01.2014)
புதன்கிழமை

செல்வி
**குணசிங்கம் தீபனா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் நாளை (08.01.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அனைவரும் கலந்துகொண்டு செல்வியின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அன்பான உறவுகள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

நன்றியுடன் நாடிநிற்கும்
குடும்பத்தினர்.

ஆதியாமலை, உடுப்பிட்டி. 077 544 1148


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் பாடசாலை அதிபர்களுக்கான பணிநயப்பு விழா

தென்மராட்சி, ஜன.7

தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர் சங்கத்தால் பாடசாலைகளில்கடமையாற்றிஓய்வுபெற்ற, இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் இலங்கைக் கல்வி நிர்வாகசேவைக்குள் உள்ளீர்க்கப் பட்ட அதிபர்களுக்கான பணிநயப்பு விழா நேற்று முன்தினம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்பட்டது.

சங்கத் தலைவரும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபருமான க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் விருந்தினர்களாக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், கணக்காளர், கோட் டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர்களான வேவிநாயக மூர்த்தி, வா.சடாச்சரம், சு.தர்மலிங்கம், திருமதி சா.நகுலேஸ்வரன், இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர் ச.மனோகரன், இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்கு உள்ளீர்க்கப் பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. அதிபர் வே.கந்தசாமி, நாவற்குழி ம.வி. அதிபர் திருமதி வ.மேகலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கு.சிவநாதன் ஆகியோரும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (வ-9)



நாய்க்குட்டி விற்பனைக்கு
2 மாதங்கள் நிரம்பிய Grate dane
குட்டி விற்பனைக்குண்டு
T.P 077 6053845

விற்பனைக்கு
மகேந்திரா டிறக்டர்
விற்பனைக் குண்டு.
தொடர்புகளுக்கு 0772102380

## கோட்டக் கல்வி அதிகாரியின் கூட்டத்தை புறக்கணிக்கத் தயாராகும் அதிபர்கள்

யாழ்ப்பாணம், ஜன.7

புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரியை இடமாற்றம் செய்வதாக அறிவிக்கப் பட்டும் அவர் இன்றுவரை இடமாற்றம் செய்யப்படவில்லை. இந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை கோட்டக்கல்வி அதிகாரி நடத்தவுள்ள அதிபர்களுக்கான கூட்டத்தை அனைத்து அதிபர்களும் புறக்கணிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

புதுக்குடியிருப்புக் கோட்டத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள கோட்டக்கல்வி அதிகாரியால் பணிகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை. அதனால் புதுக்குடியிருப்புக் கோட்ட அதிபர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளரை நீக்குமாறு வலியுறுத்தி முன்னர் கவனவீர்ப்புப் போராட்டமும் நடத்தியிருந்தனர். அவரை பதவி நீக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு பலமுறை அறிவித்திருந்தோம்.

அதை அடுத்து அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்மை என்றும் தவறு உள்ளது என்றும் விசாரணையில் தெரிய வந்துள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்வி அதிகாரி இன்று அதிபர்களுக்கான கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கூட்டத்தை அனைத்து அதிபர்களும் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளனர் என்று ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். (ஒ-4)

# பூநகரிப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

அக்கராயன், ஜன.7

பூநகரிக் கோட்டப் பாடசாலைகள் பெரும் ஆசிரியர் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளதாகப் பூநகரிக் கோட்டக் கல்வி அலுவலர் அ.தர்மரட்ணம் தெரிவித் தார்.

இரண்டு வருட ஒப்பந்தத்தில் பூநகரியில் கடமையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதால் ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக உயர்தர வகுப் புக்களைக் கொண்ட பாடசாலைகளில் பெரியளவில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

பூநகரி மகாவித்தியாலயம், முழங்காவில் மகாவித்தியாலயம், ஜெயபுரம் மகா வித்தியாலயம், வேரவில் மகா வித்தியாலயம், கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம், நல்லூர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளுக்கு ஆசிரியர் வெற்றிடம் காணப்படுகின்றது.

ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் உயர் தரத்தில் கற்பிப்பதற்கு ஆசிரியர் எவரும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

பூநகரி மகா வித்தியாலயம், பரமன் கிராய் பாடசாலை உட்பட அனைத்துப் பாடசாலைகளிலும் ஆசிரியர் நெருக்கடி அதிகளவில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# அம்பலப்பெருமாள் குளத்தை புனரமைக்க வேண்டுகோள்

கிளிநொச்சி, ஜன.7

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அம்பலப்பெருமாள் குளத்தைப் புனரமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இங்குள்ள கமக்கார அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தக் குளத்தின் கீழ் சுமார் 450 ஏக்கர் வயல் நிலங்களில் நெற்பயிர்ச் செய்கை இடம் பெற்று வருகின்றது. அத்துடன் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் இந்தக் குளத்தைப் புனரமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. ஆனால் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட காலம் ஆகிய போதிலும் இதுவரை நிறைவேறாத நிலையிலேயே காணப்படுகின்றன. மேலும் குளத்தின் அணைக்கட்டின் உட்பகுதிக்குரிய அலைதாங்கிக் கற்கள் பரவப் படாத நிலையே தற்போதும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த முறை மழை பொய்த்ததால் விவசாயத்தையே தமது வாழ்வாதாரமாகக் கொண்ட விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். (க-55)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் 10 . 11 . 1933
விண்ணில் 08 . 12 . 2013

அமரர் மயில்வாகனம் பொன்னுத்துரை

கடந்த 08.12.2013 ஞாயிற்றுக்கிழமை இறை பதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் மயில்வாகனம் பொன்னுத்துரை அவர்களின் அந்தியேட்டி இன்று (07.01.2014) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பயிற்றம் சாட்டி,
நவிண்டில்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

குடும்பத்தினர்.
021 226 2390
077 260 1663

(43044) (7.6.3)

மரண அறிவித்தல்



செல்லத்துரை கணேசரட்ணம்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயில் வண்ணார் பண்ணையையும், கொழும்பு வெள்ளவத்தையையும் வதிவிடமாகக் கொண்டிருந்த செல்லத்துரை கணேசரட்ணம் 05.01.2014 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-புவனேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற துரைச்சாமி-சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சண்முகவடிவேல், செல்வபுவிராஜரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரோஜினிதேவியின் ஆசைக் கணவரும், வாகீசன், சிவகாமி, பகீரதன், தர்ஷிகா ஆகியோரின் தந்தையும், சுபாசினி, பிரதீபன், சாந்தி ஆகியோரின் மாமனும், சகானாவின் பேரனும், காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற கனகலட்சுமி மற்றும் சீனிவாசகம், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் தனபாக்கியலட்சுமி, ஜெயலட்சுமி, காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.24, பௌத்த மத்திய நிலைய வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் 09.01.2014 வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று, கல்கிசை இந்து மயானத்தில் மாலை 5.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

(C/11164)(10.14)

தகவல்: குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
சிவபாக்கியம் தம்பிராசா



மலர்வு : 11.07.1944
உதிர்வு : 09.12.2013

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!
நாள்கள் முப்பத்தொன்று
ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்.

தம்பிராசா (கணவர்), மகேந்திரன் (மகன்), ஜெகதீஸ்வரி (மகள்), பாலினி (மருமகள்), கிருபானந்தன் (மருமகன்), கஜவதனன், துபிதா, யதுசிகன், கோபிகன் (பேரப்பிள்ளைகள்),

கரம்பைக்குறிச்சி கிழக்கு,
வரணி.

(33064)(2.6)

வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் சின்னராசா பாக்கியநாதன்

கடந்த 23.12.2013 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் சின்னராசா பாக்கியநாதன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 05.01.2014 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது. விட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று 07.01.2014 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இலங்கை வங்கி,
முன்ஒழுங்கை நெல்லியடி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதவள ஏற்றுமதி தொடர்பில் சவூதி அரேபியா உடன்படிக்கை

### 7 உறவு நாடுகளுடன் கைச்சாத்திடத் திட்டம்

வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டுசவூதி அரேபியா, 7 உறவுநாடுகளுடன்ஆறுவகையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடத் தீர்மானித்துள்ளது.

மனிதவளத்தை ஏற்றுமதி செய்யும் இலங்கை உட்பட்ட நாடுகளுடன் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ளதாக சவூதி அரேபியாவின் வெளிவிவகாரம் மற்றும் பிரதித் தொழிலமைச்சர் அஹ்மட் எப் அல் பஹய்ட் தெரிவித்துள்ளார். அரப் நியுஸ் செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

**"-" மனிதவளத்தை ஏற்றுமதி செய்யும் இலங்கை உட்பட்ட நாடுகளுடன் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ளது**

நேற்று அவர் புதுடில்லிக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில், இந்தியாவின் மனிதவள மேம்பாடு குறித்து கலந்துரையாடி ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளார். மனிதவள ஏற்றுமதியில் பிலிப்பைன்ஸுக்கு இரண்டாவதாக இந்தியா திகழ்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் 14ஆம் திகதி அளவில் இலங்கையும், சவுதி அரேபியாவுடன் உடன்படிக்கையில் இணைந்து கொள்ளவுள்ளது.

இதுதவிர, நேபாளம், இந்தோனேசியா, வியட்நாம், கம்போடியா ஆகிய நாடுகளும் மனிதவள ஏற்றுமதியில் எதிர்காலத்தில் சவுதி அரேபியாவுடன் இணைந்துசெயற்படவுள்ளன.

## குரங்கை காப்பாற்ற முயன்ற சாரதி சாவு

கொழும்பு, ஜன.7

பிரதான வீதிக்குப் பாய்ந்த குரங்கைக்காப்பாற்றுவதற்கு முயன்ற ஓட்டோச்சாரதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று அவிசாவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அவிசாவளை, கொட்டஹேர எனுமிடத்தில் குரங்கொன்று மரத்திலிருந்து பிரதான வீதிக்கு பாய்ந்துள்ளது.

ஓட்டோவைச் செலுத்தி சென்ற சாரதி, அந்த குரங்கை காப் பாற்றுவதற்கு முயற்சித்த போதே எதிரே வந்த ஓட்டோவுடன் மோதி அவர் விபத்துக்குள்ளானார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

**"-" குரங்கை காப்பாற்றுவதற்கு முயற்சித்த போதே அந்த ஓட்டோவுடன் மோதி அவர் விபத்துக் குள்ளானார்.**

இந்த சம்பவத்தில் குறித்த சாரதி உயிரிழந்த துடன் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் குறித்த குரங்கும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது. சம்பவத்தில் காயமடைந்த ஐவரும் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

**வேலையாள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனமொன்றுக்கு எழுது வினைஞர் (பெண்), சிற்றூழியர் (ஆண்) தேவை.


தொடர்பு : 075 4064604

## சட்டவிரோத கனிய வள அகழ்வுகள் தொடர்பில் விசேட விசாரணைப் பிரிவு

கொழும்பு.ஜன.7

சட்டவிரோத கனிய வள அகழ்வுகள், அவற்றை ஏற்றிச் செல்லல் தொடர்பில் பொது மக்கள் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கான விசேட விசாரணைப் பிரிவொன்றை நிறுவியுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித் துள்ளது.

இந்த மாதத்தில் இருந்து இயங்கும் வகையில் விசேட விசாரணைப் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளதாக பணியகத்தின் தலைவர் செனரத் ஜயசுந்தர தெரிவித்தார்.



நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கனிய வளங்கள் அகழ்ந்தெடுக்கப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

முறைப்பாடுகளைப் பதிவுசெய்து தனித்தனியே விசாரணை களை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதுதவிர மணல் அகழ்வுக் கான அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் இத்தகைய சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவார்களா யின், அவர்களது அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப் படும்.

அதுமட்டுமன்றி சட்ட நட வடிக் கைகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

**மரண அறிவித்தல்**

**செல்லத்துரை இராசலிங்கம்**

(அரச கட்டட ஒப்பந்தகாரர், ராஜா (Raja Civil eng. works)



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசலிங்கம் நேற்று (06.01.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அன்னலட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும் இனிதா, கிருஷன், ருஷாந்தன், திசாந்தன் ஆகியோரின் தந்தையும் தவரூபன், ஜெனனி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், கணேசலிங்கம் மற்றும் சங்கரலிங்கம், ஞானேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் கவிநயா, அபிநயன் ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2014) செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாசியப்பிட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலங்குழாய் வீதி, சண்டிலிப்பாய்

தகவல்: குடும்பத்தினர்

**மரண அறிவித்தல்**

திருமதி **சிவபாக்கியம் இராசநாயகம்**

(ரதி மில் கொக்குவில்)



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வதிவிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான சிவபாக்கியம் இராசநாயகம் (மணி அக்கா) கடந்த 29.12.2013 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் திருநாவுக்கரசு - அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சண்முகம் - சுந்தரம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற தம்பு சண்முகம் இராசநாயகம் (கொக்குவில் ரதி மில், உரிமையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற அம்பிகை, சிங்கராஜா, காலஞ்சென்ற பாக்கியரெத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற அன்னபப்பிள்ளை, காலஞ்சென்ற சண்முகலிங்கம், ஈஸ்வரி, கனகமணி, முருகையா காலஞ்சென்ற இரத்தினம், சிரோன்மணி, தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்புமைத்துனியும் வசந்தரூபி (கனடா), சசிநாயகம் (கனடா), கலாரூபி (கனடா), உஷாரூபி (டென்மார்க்), ரதிரூபி (கனடா), உதயரூபி (ஜேர்மனி), ரஜனி (கனடா), பத்மினி (கனடா), மாலினி (கனடா), சிவ்கௌரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் யோகராஜா, ஜெயகௌரி, நவமாணிக்கம், பரமநாதன், நித்தியானந்தன், வரதன், ராஜமாணிக்கம், விக்னராஜன், தனபாலசிங்கம், விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புமாமியும் ஹரியந்தி, ராவின், சஜி, றஜனிகாந்த், துஷானி, ரதீசன், பிரகாஷினி, கென், ஆதித்தியா, தாட் ஷாயினி, நவநீதன், மெலானி, அச்சுதன், செந்தூரபியா, சஞ்சுதன், விபீஷன், தர்மிகா, முகுந்தன், டினோதன், ஆதவன், ரனியா, வனஜா, கார்த்திகா, அனுஜன், தக்ஷிகா, சிந்துஷா, ஆரணி, ஆர்த்தி, அரூபன், சிரம்யா, சாஜித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அம்றித்தா, ஆகாஷ், தமிரா, ஆதேஷ், சுருதி, ஓவன், எல்லாளன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 05.01.2014 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிமுதல் 9 மணி வரை இறுதி வணக்கத்துக்காக Midland / Sheppard சந்திப்பில் அமைந்துள்ள Ogden Funeral Home (4164 Sheppard Ave East, Scarborough Ontario, M1S 1T3) இல் வைக்கப்பட்டு 06.01.2014 திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையும் அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பின்னர் 11.15 மணிக்கு Forest Lawn Cremation Centre (4570 Youg Street, Toronto, Ontario, M2N 5L6) இல் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
வசந்தரூபி - 289 6001577, சசிநாயகம் - 647 2942844
கலாரூபி - 647 8709330, உஷாரூபி - 459 718 1052 (டென்மார்க்)
ரதிரூபி - 416 551 2540, உதயரூபி - 49 01755964535 (ஜேர்மனி)
ரஜனி - 289 6600174, பத்மினி - 647 8687443
மாலினி - 9054720786, சிவ்கௌரி - 905 4716729, 647 8216475

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## சமையல் எரிவாயு கசிவால் உணவு விடுதியில் தீ

கொழும்பு, ஜன.7

சமையல் எரிவாயு கசிந்ததில் உணவு விடுதி தீப்பற்றி எரிந்து எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமாகியுள் ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.45 மணியளவில் நீர் கொழும்பு சிலாபம் பிரதான வீதியில் இடம் பெற்றது.

சம்பவத்தை அடுத்து நீர் கொழும்பு மாநகர சபையின் தீ அணைப்பு படைப்பிரிவினர் சம்பவ இடத்துக்கு வந்து தீயை அணைத்தனர்.

புதிதாகத் திறக்கப்பட்ட சென் வில் புட் ரெஸ்ட்டூரன்ட் என்ற உணவு விடுதியின் சமைய லறை பகுதியிலேயே தீவிபத்து இடம்பெற்றது.

சமையல் எரிவாயு சிலிண்டரின் குழாயில் ஏற்பட்ட எரி வாயுக் கசிவின் காரணமாக எரிந்து கொண்டிருந்த அடுப் பின் மூலம் தீ பரவியதாக விடு தியின் உரிமையாளரும் ஊழி யர்களும் தெரிவித்தனர். தீயின் காரணமாக சமையலறையிலிருந்த உணவுப் பொருள்கள், சமைத்த உணவுகள், குளிர்சாதனப் பெட்டிகள், காற்றாடிகள், மேசைகள், சமையலறை உபகரணங்கள் என்பன எரிந்து நாசமாகியுள்ளன.

எட்டு லட்சம் ரூபா பெறுமதி யான சேதம் ஏற்பட்டுள்ளதாக உணவு விடுதியின் உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தச்சம்பவத்தால் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பாக [illegible] பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர். (வ)

**மரண அறிவித்தல்**

**இராமலிங்கம் ஜெகதீஸ்வரன்**



அம்பனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், 44/2. திருவையாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் ஜெகதீஸ்வரன் நேற்று (06.01.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் நவமணிதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரன் (கமல், தேசிய சேமிப்பு வங்கி- கிளிநொச்சி), கமலவேணி (பிரசித்த நொத்தாரிசு. தா. அரியரத்னம் பணிமனை), மகேஸ்வரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கரைச்சிப் பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலேஸ்வரனின் அன்பு மாமனும், புவனேஸ்வரி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, மகேஸ்வரி, சாந்தினி, ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2014) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணிக்கு இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

077 5488973, 077 9167878

தகவல்
குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

திருமதி **பொன்னுத்துரை கனகாம்பிகை**



நல்லூரைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை கனகாம்பிகை நேற்று (06.01.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா-தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-செல்லம் தம்பதியரின் அன்பு மருமகளும், யோகேந்திரன் (அமெரிக்கா), மகேந்திரன் (சுவிஸ்), கனகேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், ஜமுனாதேவி (அமெரிக்கா), நிர்மலா(கனடா), ஜெயக்குமார்(கனடா), சுகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நிருஜனன், தயோதா-ஜெயகஜமுகன், கிருசன், நேரு, நிரூஜன், வேணுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசலிங்கம் மற்றும் கமலாம்பிகை, வடிவாம்பிகை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சுப்பையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2014) செவ்வாய்க்கிழமை பி.ப.1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேரதீவு வீதி, நாவற்குழி, கைதடி.

(42018)(17.14)

தகவல்
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடும் மழைக்கு மத்தியில் வேகமாகச் சென்ற ஓட்டோ யாழ்.முற்றவெளிப் பகுதியில் திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இதனால் ஓட்டோ சாரதிக்கு சிறு காயம் ஏற்பட்டது. (த-17)

# வாக்கு வேட்டை நடத்தவே ஜெனிவா நேரத்தில் தேர்தல்

## அரசு மீது ஜே.வி.பி. குற்றச்சாட்டு

ஜெனிவாவையும் மின்சாரக் கதிரையையும் தேர்தல் பரப்புரைக்காகப் பயன்படுத்தி வாக்கு வேட்டை நடத்துவதற்காகவே ஜெனிவா மாநாடு நடைபெறும் மார்ச்சில் அரசு இங்கு தேர்தலை நடத்துகின்றது என்று ஜே.வி.பி. குற்றஞ் சாட்டியுள்ளது.

நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்படுமானால் அதன் தாக்கம் மக்களுக்கே ஏற்படும் என அக்கட்சியின் பிரசாரச் செயலாளரான விஜித ஹேரத் கூறினார்.

ஜே.வி.பியின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஜெனிவாவில் எதிர் வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் சம்பந்தமாக ஊடகவியலாளர்கள் எழுப்பி கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே நாடாளுமன்றஉறுப்பினர்விஜிதஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டு மக்களுக்கு ஒன்றையும் ஜெனிவாவில் மற்றொன்றையும் கூறிவரும் இந்த அரசு மக்களைத் தூண்டிவிடும் வகையில் கருத்துவெளியிடுகின்றது. வருகின்ற தேர்தல்களின்போது மின்சாரக்கதிரை அரசின் தேர்தல் சின்னமாகக்கூட இருக்கலாம். ஏனெனில், ஜனாதிபதியை மின்சாரக் கதிரைக்கு கொண்டுச் செல்லப் போகின்றார்கள் என கூறி வாக்குகளைப் பெறுவதற்கு அரசு முயற்சிக்கும். இதனால்தான் மார்ச்சில் அது தேர்தலை நடத்துகிறது. எனவே, இதற்கு ஏமாற வேண்டாம் என நாம் மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, போரின் போது எது நடந்தாலும், போருக்குப் பிறகு இடம்பெறுகின்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால்தான் நாட்டுக்கும் மக்களுக்கும் இன்று சவால்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக மனித உரிமைகள் சபையில் நாட்டுக்கு எதிராக ஏதாவது ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டாலும் அதனால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவார்கள். பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டாலும் அதன் தாக்கம் நாட்டு மக்களுக்கே ஏற்படும்.

எனவே, ஜெனிவாவுக்குச் சென்று அறிக்கைகளை மாத்திரம் தாக்கல் செய்யாது, இந்த அபாய நிலையை தவிர்க்க வேண்டுமானால் அரசு நாட்டில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்றும் விஜித ஹேரத் வலியுறுத்தினார்.

# மாகாண தேர்தல்கள் குறித்து ஐ.தே.க. தீவிர ஆலோசனை

## 3 நாள்கள் கூடுகிறது தலைமைத்துவ சபை

மேல் மற்றும் தென்மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து தீவிரமாகப் பரிசீலனை செய்யவும், தேர்தலை எதிர்கொள்வதற்கான வியூகங்களை வகுக்கவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபை இவ்வாரம் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக கூடவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில்சபை கூடும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

கட்சித் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று இடம்பெற்ற இவ்வருடத் துக்கான முதலாவது தலைமைத்துவ சபைக் கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தலைமைத்துவ சபைக் கூட்டம் குறித்து கபீர் ஹாசிம் கருத்து வெளியிடுகையில்,

அண்மையில் அரசுப்பக்கம் தாவிய கட்சியின் தென் மாகாணசபை உறுப்பினர் கிஷாந்த புஷ்பகுமாரவின் கட்சி உறுப்புரிமையை நீக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அத்துடன், நடைபெறவுள்ள மேல், தென்மாகாணசபைத் தேர்தலுக்கான வியூகம் வகுப்பதற்காக எதிர்வரும் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில்தலைமைத்துவ சபை தொடர்ச்சியாகக் கூடவுள்ளது. இதன்போது மேற்படி இரு மாகாண சபைத் தேர்தல்களிலும் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

# ஹலால் சான்றிதழ் இடைநிறுத்தம்

ஹலால் சான்றிதழ் வழங்கும் சேவையை கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி முதல் நிறுத்திக் கொள்ள தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாநேற்று அறிவித்துள்ளது.

அத்தோடு, இவ்வருட ஆரம்பம் முதல் இலங்கையில் புகழ்பெற்ற துறை சார்ந்தோர் மூலம் நிறுவப்பட்ட உத்தர வாதமுள்ள வரையறுக்கப்பட்ட நிறுவனமொன்று ஹலால் சான்றிதழ் வழங்குவதையும் தயாரிப்பு செயற்பாடு தொடர்பான கண்காணிப்பு உட்பட அதன் அனைத்து விடயங்களையும் வழிநடத்தவுள்ளதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"தேசிய பொருளாதார அபிவிருத்தியையும் சமூக ஒழுங்கையும் பேணிப் பாதுகாப்பதற்காகவே பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட நல்ல முடிவாகவே இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. பலதரப்பட்ட பங்குதாரர்கள், அதிகாரிகள் மற்றும் உள்நாட்டு பிரதிநிதிகளுடன் ஆலோசனை செய்த பின்னரே உத்தரவாதமுள்ள வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனத்துடைய வடிவமைப்பில் சுதந்திரமான நிறுவனமொன்றை அமைப்பது இன்றியமையாததாக கருதப் பட்டுள்ளது.

நாட்டிலுள்ள ஏனைய தரச் சான்றிதழ் வழங்கப்படுவது போல் உள்நாட்டு நுகர்வோர் மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதியாளர்கள் ஆகிய இரு சாராருடைய வேண்டுகோளுக்கிணங்க செல்லுபடியாகும் கோரிக்கைகள் மற்றும் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த நிறுவனம் எதிர்பார்க்கிறது.

ஏற்கனவே ஹலால் சான்றிதழ் பெற்றுக்கொண்ட மற்றும் ஹலால் சான்றிதழ் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்திருக்கும் நிறுவனங்களுடைய அனைத்து விடயங்களையும் புதிதாக பொறுப்பேற்கவுள்ளப்படவுள்ளது.

மேலும் எதிர்காலத்தில் ஹலால் சான்றிதழ் வழங்குவது மற்றும் தயாரிப்பு செயற்பாடு தொடர்பான கண்காணிப்பு விடயங்களில் சமூக நலனையும் பொறுப்பையும் கருதி அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுடைய ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் எப்போதும் இருக்கும். " என குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கு

மைச்சரின் பிரத்தியேக செயலாளர் மன்மதராஜா உதயனிடம் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் இணைப்புச் செயலாளர் எனத் தன்னை அறிமுகப்படுத்திய செ.தனுபன் என்பவரே இந்த மோசடியை மேற்கொண்டுள்ளார். குறித்த 15 பேருக்கும் வவுனியாவில் வைத்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் நியமனம் வழங்குவார் என முன்னர் மோசடி நபர் தெரியப்படுத்தி உள்ளார். ஆனாலும் அது இடமாற்றம் செய்யப்பட்டு நேற்றுப் பிற்பகல் 3 மணிக்குத் தெல்லிப்பழையில் நடைபெறும் என அவர் பின்னர் கூறியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் அங்கு சென்ற 15 இற்கும் மேற்பட்டவர்களுக்கு குறித்த நபர் வேறுசிலருடன் இணைந்து கடிதங்களை வழங்கியுள்ளார். அந்தக் கடிதம் வடமாகாண சபையின் கடித தலைப்பின் கீழோ முதலமைச்சரின் இறப்பர் முத்திரையோ இன்றிக் கையளிக்கப்பட்டது. இதனால் கடிதங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் சந்தேகம் கொண்டு, வடமாகாண சபை உறுப்பினர்களிடம் தெரியப் படுத்தி உள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வடமாகாண உறுப்பினர் ப.கஜதீபன், வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன் ஆகியோர் இது தொடர்பில் விசாரணை நடத்தியபோது இந்தப் போலி நாடகம் அம்பலமாகியது.

எனினும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக உதயனிடம் தொடர்பு கொண்டவர்கள் எவரும் தம்மிடம் பணம் ஏதும் பெறப் படவில்லை எனத் தெரிவித்தனர்.

மோசடி செய்தார் என்று கூறப்படும் தனுபன் என்பவருடன் தொடர்புகொண்டபோது அவர் தொடர்பை துண்டித்தார். மீண்டும் அழைத்த போது அவரின் மைத்துனர் என்று கூறி ஒருவர் கதைத்தார். அவர் தனது மைத்துனர் தவறுதலாக அவ்வாறு செய்துவிட்டார் எனவும் இதை பெரிதுபடுத்தாதீர்கள் என்றும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து வடமாகாண சபை முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, அப்படி ஒரு நிகழ்வு வடமாகாண சபையின் ஏற்பாட்டில் நடைபெறவில்லை என்று தெரிவித்தார். (ஜ-4)

### தந்தையை

வனின் தந்தையான சிவசுப்பிர மணியம் வீரலிங்கத்தை மக்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்குமாறு கோரி அந்தப் பகுதிக் கிராம சேவகரின் உதவியுடன் உறவினர்கள் 40 ஆயிரம் ரூபாவுக்கு வாடகை வாகனத்தை அமர்த்தி நேற்று முன்தினம் இரவு கொழும்பு மத்திய சிறைக்குச் சென்றுள்ளனர். தந்தையை விடுவிப்பதற்கான காரணத்தையும் அதற்கான ஆவணங்களையும் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் கொழும்பு மத்திய சிறையில் குறித்த நபர் இல்லை என்றும் மகஸின் சிறைச்சாலையில் விசாரிக்குமாறும் கூறி அனுப்பி உள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணி வரை மகஸின் சிறைச்சாலையில் காத்திருந்த உறவினர்களிடம் அனுராதபுரம் சிறைச் சாலை ஊடாகவே அவரை அழைத்துச் செல்ல முடியும். எனவே கிளிநொச்சி பொலிஸ் நிலையம் ஊடாக அணுகுமாறு கூறி சிறை அதிகாரிகள் திருப்பி அனுப்பி உள்ளனர்.

சிறுவனின் சடலம் அடக்கம் செய்யும் நாள், நேரம் போன்றவற்றை உறுதிப் படுத்தி தமக்கு ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறும் அதன்படி சிறுவனின் உடலை பார்வையிடத் தந்தைக்கு அனுமதி வழங்குவதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் உறுதியளித்துள்ளார் என உறவினர்கள் தெரிவித்தனர். அதிகாரிகளின் மனிதாபிமானமற்ற இந்த அணுகுமுறைகள் குறித்து சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். தந்தையாரை பார்வை யிட அனுமதித்தால் சிறுவனின் சடலம் இன்று முற்பகல் 11 மணியளவில் அடக்கம் செய்யப்படும் எனவும் உறவினர்கள் தெரிவித்தினர். (ஐ)

### தோண்டத்

யோகத்துக்காக வெட்டப்பட்ட குழியில் இருந்து 4 எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டன. இதனையடுத்து மன்னார் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு மறுநாள் புதைகுழியைத் தோண்டும் பணிகள் மன்னார் நீதிவான் [illegible] முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது 21 ஆம் திகதி 2 மனித எச்சங்களும், 22 ஆம் திகதி ஐந்து மனித மண்டையோடுகளும் எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து தோண்டும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

மீளவும் ஜனவரி மாதம் மூன்றாம் திகதி தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. அன்றும் 4 மண்டையோடுகள், எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டன. அடுத்த நாளும் மூன்று மண்டையோடுகள் எலும்பு எச்சங்கள், குழந்தையின் பல் என்பன மீட்கப்பட்டன. இதேபோன்று நேற்று மழைக்கு மத்தியிலும் புதை குழியைத் தோண்டும் பணி காலை 8 மணிக்கு ஆரம்பமானது. இதன்போதும் 8 மண்டையோடுகள், எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதன்படி கடந்த 20 ஆம் திகதியில் இருந்து நேற்று வரைக்கும் 26 மண்டையோடுகளும் மனித எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இன்றும் தோண்டும் பணிகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-56)

### கரையோரப்

மாணவர்கள் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அதேநேரம் ஏனைய பாடசாலைகளும் பாதுகாப்புக் காரணமாக நண்பகல் 12 மணியுடன் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சீரற்ற காலநிலை தொடருமானால் இன்றும் பாடசாலைகள் நடைபெற மாட்டாது என்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

அதேபோல் முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் அனைத்தும் நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இந்தச் சீரற்ற காலநிலை தொடருமானால் விடுமுறைநாளும் அதிகரித்துச் செல்லும் என முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.ராஜ்குமார் அறிவித்துள்ளார். (த-422-17-173)

### 58 குடும்பங்கள்

இதனால் தாம் தொழிலுக்குச் செல்லவில்லை எனவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை,

யாழ். குடாநாட்டில் இரண்டாவது நாளாகவும் நேற்று மழை தொடர்ந்ததுடன் கடலும் கொந்தளிப்பாகக் காணப்பட்டது. அதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. தவிர மூன்று நாள்களாக மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. அதன் காரணமாக கடலுணவுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த மழை தொடர்ந்து கொண்டிருக்கிறது. காற்று மற்றும் கடல் கொந்தளிப்புக் காரணமாக மீனவர்கள் மூன்று நாள்களாகவும் தொழிலுக்குச் செல்லவில்லை. இதனால் மீன்பிடிப் படகுகள், கட்டுமரங்கள் என்பன கரையில் கட்டப் பட்டுள்ளன. மீனவக் குடும்பங்களும் வீட்டுக்குள் முடங்கியுள்ளதோடு முன்னெச்சரிக்கை காரணமாக விழிப்புடன் இருக்கின்றனர். அவர்களின் ஜீவனோபாயமும் பாதிக்கப்பட்டுள்ளது.

பொலிகண்டி கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் சில கடல் கொந்தளிப்புக் காரணமாக சேதத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் கரையோரப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட முன்னெச்சரிக்கை தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது. (த-4-17-173-400-433)

### மழை

இது தொடர்பில் திணைக்கள பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் மேலும் தெரிவித்ததாவது:-

தாழமுக்கம் முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ளது. அதனால் இன்றும் காற்றுடன் ஆங்காங்கே மழை தொடரும் . கடல் கொந்தளிப்பும் காணப் படும். நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5.30 மணி வரை 13.8 மில்லி மீற்றர் மழை திருநெல்வேலியில் பெய்துள்ளது. கடந்த ஞாயிறு காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணி வரை திருநெல்வேலியில் 24.6 மில்லி மீற்றரும், பருத்தித்துறையில் 35 மில்லி மீற்றர் மழையும் பெய்துள்ளது - என்றார். (த-4)

### நெடுந்தீவு

நெடுந்தீவு துறைமுகத்துக்கும் நெடுந்தீவு செல்வதற்காகக் குறிகாட்டுவான் துறைமுகத்துக்கும் சென்ற மக்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர். கடற்கொந்தளிப்பு தணியும் வரை தீவுப் பகுதிக்கான கடற் போக்குவரத்து தடைப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப் படுகிறது. (த-7-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனி பிளமிங்கின் சதத்தினால் சென்.ஜோன்ஸ் அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம்.ஜன.7
ஜெனி பிளமிங் சதம் கைகொடுக்க கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஓர் இனிங்ஸ் 194 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 19வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி கடந்த வாரம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் அணி 77 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 358 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜெனி பிளமிங் ஆட்டம் இழக்காமல் 113 ஓட்டங்களையும்.கானாமிர்தன் 59 ஓட்டங்களையும், கபில்ராஜ் 58 ஓட்டங்களையும், துவாரகசீலன் 43 ஓட்டங்களையும், ஏபிரகாம் அனோசன் 24 ஓட்டங்களையும், ஜதுசன் 19 ஓட்டங்களையும், சிந்துஜன் 14 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பந்து வீச்சில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சார்பில் விஸ்ணுகானன் 3 இலக்கினையும், உதயசுபேசன் 2 இலக்கினையும், சுரேஸ், விதுசன், கலைச்செல்வன் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.



தனது முதலாவது இன்னிங்சிற்காகத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி 34.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லோகதர்சன் 23 ஓட்டங்களையும், தமிழேந்தி 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் துவாரகசீலன் 5 இலக்கினையும் லோகதீஸ்வரன் 4 இலக்கினையும், கானாமிர்தன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 'பலோ ஒன்' முறையில் தனது 2 ஆவது இன் னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி 24.6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுசிகரன் 23 ஓட்டங்களையும், விஸ்ணுகானன் 18 ஓட்டங்களையும், விதுன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் துவாரகன் 5 இலக்கினையும் லோகதீஸ்வரன் 3 இலக்கி னையும், துவாரகசீலன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜன.7
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறும் ஆட்டங்களின் விவரம்:-

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங் லயன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.7
வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் சண்சையின் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பிறைன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வென்றது யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம். ஜன.7
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து நியூபைட் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.



இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



தெல்லிப்பழை கிழக்கு கலைச்செல்வி இளைஞர் கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்ட கலை ஒளி விளையாட்டுக்கழக அணியினர். (த-23)

# சண்டிலிப்பாய் இளைஞர் சம்மேளனம் வடக்கில் நடத்தும் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.7
சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் தைப் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக 6 பேர் பங்குகொள்ளும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் தங்களின் பதிவுகளை 8 ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர், செயலாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டு மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



முதலில் பதிவுகளை மேற்கொள்ளும் விளையாட்டுக் கழக அணியினருக்கு முன்னு ரிமை அளிக்கப்படும்.

முதற் கட்டப் போட்டிகள் எதிர் வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் இடம் பெறும்.

அரையிறுதி ஆட்டங்களும் இறுதியாட்டமும் தைப்பொங்கல் தினத்தன்று இடம்பெறும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

# சென்.சேவியர், திக்கம் அணிகள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜன.7
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதிக் கொண்டது. இதில் சென். சேவியர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

**" - "**

**இளைஞர் விளை யாட்டுக்கழக 'ஏ' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.**

இரண்டாவது ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து சுடர்ஒளி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# மேசைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.7
ஆசியா-ஜேர்மன் விளையாட்டுத்துறை பரிமாற்றத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்- வவுனியா மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கங்களின் ஏற்பாட்டில் அபான்ஸ், ஸ்ரார் இன்ரநஷனல் ஆகியவற்றின் அனுசரணையுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் முதன் முறையாக இடம் பெற்ற அகில இலங்கை ரீதியிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களின் விவரம் வருமாறு :-

**8 வயதுப் பிரிவு- ஆண்கள்**
முதலாமிடம்- [illegible] (போகு சன் உயர்தர பாடசாலை), இரண்டாமிடம்-டபிள்யு.எம். மாலித பண்டார (இரத்தினபுரி தர்ம ரவக கல்லூரி)

**10 வயது பிரிவு-ஆண்கள்**
முதலாமிடம்-கவிஷ்சா பியுமல் பண்டார (கம்பளை மேசைப் பந்தாட்ட பாடசாலை), இரண்டாமிடம் இந்தீரா ஜினதத் பண்டார (கேகாலை சென்.மேரிஸ் கல்லூரி)

**12 வயது பிரிவு- ஆண்கள்**
முதலாமிடம்- நந்தன் டினேத் புவனேகா அழுத்கே (கம்பளை மேசைபந்தாட்ட பாடசாலை) இரண்டாமிடம்- சவித்த அதீபா(பண்டாரவளை சென். தோமஸ் கல்லூரி)


**15 வயதுப் பிரிவு- ஆண்கள்**
முதலாமிடம்-கிமோதி ஷெரான் (கண்டி சென். அன்ரனிஸ் கல்லூரி) , இரண்டாமிடம்- நந்தன் டினேத் புவனேகா அலுத்கே (கம்பளை மேசைப் பந்தாட்ட பாடசாலை)

**18 வயதுப் பிரிவு- ஆண்கள்**
முதலாமிடம்-மோகன் அகாஷ் (யாழ்.மத்திய கல்லூரி இரண்டாமிடம்- வெற்றிவேல் நிரேஷன் (யாழ். இந்துக் கல்லூரி)

**21 வயது பிரிவு- ஆண்கள்**
முதலாமிடம்- தரிந்து இஷான் பெரேரா (இசிப்பத்தான கல்லூரி, இரண்டாமிடம்- மோகன் அகாஷ் (யாழ்.மத்திய கல் லூரி)

**திறந்த போட்டி-ஆண்கள்**
முதலாமிடம்-தரிந்து கிஷான் பெரேரா(இசிப்பத்தான கல்லூரி), இரண்டாமிடம்- புஸ்ப குமார (கம்பளை மேசைப் பந்தாட்ட பாடசாலை)

**40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான திறந்த போட்டி**
முதலாமிடம்-ஜே.மோகன் (யாழ்.மத்திய கல்லூரி), இரண்டாமிடம்- எம்.கண்ணன் (பொது சேவை விளையாட்டுக் கழகம் பண்டாரவளை)



ஆண்களுக்கான போட்டியில் சிறந்த வீரனாக இசிப்பத்தான கல்லூரி மாணவன் தரிந்து கிஷான் பெரேரா தெரிவு செய்யப்பட்டு பெரண்டிப் மெடிக்கல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (த-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






# இங்கிலாந்து அணியை துவம்சம் செய்த ஆஸி.

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் பங்குபற்றிவரும் இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 5 ஆவது டெஸ்ட் போட்டி 3 நாள்களில் நிறைவடைந்துள்ளது. இப்போட்டியில் ஆஸ்திரேலிய அணி 281 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.
சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி சார்பாக ஸ்டீவன் ஸ்மித் 115 ஓட்டங்களையும், பிரட் ஹடின் 75 ஓட்டங்களையும், ஷேன் வொட்சன் 43 ஓட்டங்களையும் பெற, அவ்வணி 326 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக பென் ஸ்ரோக்ஸ் 6 இலக்குகளையும், ஸ்ருவேர்ட் புரோட் 2 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்கொட் போர்த்விக் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சார்பாக பென் ஸ்ரோக்ஸ் 47 ஓட்டங்களையும், ஸ்ருவேர்ட் புரோட் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற, அவ்வணி 155 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக றயன் ஹரிஸ், மிற்சல் ஜோன்சன், பீற்றர் சிடில் மூவரும் தலா 3 இலக்குகளையும், நேதன் லையன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
171 ஓட்டங்களால் முன்னிலை வகித்த நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி சார்பாக கிறிஸ் றொஜர்ஸ் 119 ஓட்டங்களையும், ஜோர்ஜ் பெய்லி 46 ஓட்டங்களையும், பிரட் ஹடின் 28 ஓட்டங்களையும் பெற, அவ்வணி 276 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்கொட் போர்த்விக் 3 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்ருவேர்ட் புரோட், பென் ஸ்ரோக்ஸ் மூவரும் தலா 2 இலக்குகளையும், போய்ட் றாங்கின் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
448 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சார்பாக மைக்கல் காபெரி 43 ஓட்டங்களையும், ஸ்ருவேர்ட்ப்ரோட் 42 ஓட்டங்களையும், பென் ஸ்ரோக்ஸ் 32 ஓட்டங்களையும் பெற, அவ்வணி 166 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 231 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக றயன் ஹரிஸ் 5 இலக்குகளையும், மிற்சல் ஜோன்சன் 3 இலக்குகளையும், நேதன் லையன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக றயன் ஹரிஸ் தெரிவான அதே வேளை, இத்தொடரின் நாயகனாக மிற்சல் ஜோன்சன் தெரிவானார்.
5 போட்டிகள் கொண்ட இத்தொடரின் 5 போட்டிகளிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்று இங்கிலாந்து அணியை வெள்ளையடிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## டெஸ்ட் தொடரில் குலசேகரா இல்லை




பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து இலங்கை அணியின் குலசேகரா விலகியுள்ளார். இலங்கை- பாகிஸ்தான் அணிகள் மோதும் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்து வருகிறது. இவ்விரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி சமநிலை ஆனது.
இந்நிலையில் காயம் அடைந்த இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் குலசேகரா, தொடரிலிருந்து விலகியுள்ளார். இது இலங்கைக்கு பெரும் பின்னடைவாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. (த)

## சென்னை ஓபன் ரென்னிஸ் சம்பியனானார் வாவ்ரிங்கா

சென்னை ஓபன் ரென்னிஸ் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தைச் சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்கா கைப்பற்றியுள்ளார். ஏடிபி ஓபன் ரென்னிஸ் போட்டி சென்னையில் இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இறுதிப் போட்டி இடம்பெற்றது. இதில் சுவிட்சர்லாந்து வீரர் வாவ்ரிங்காவும் பிரான்ஸ் வீரர் ரோஜரும் போட்டியிட்டனர்.
போட்டியின் இறுதியில், வாவ்ரிங்கா 2-0 என்று நேர் செற்றில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் பெற்றார். (த)






## றொனால்டோவுக்கு விருது

போர்த்துக்கலின் புகழ்பெற்ற உதைபந்து வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கு, அந்த நாட்டின் உயரிய விருதான இளவரசர் ஹென்றி விருது வழங்கப்படவுள்ளது.
இதனைப் போர்த்துக்கல் ஜனாதிபதி அனிபல் கவாகோ சில்வாவிடம் இருந்து இன்று செவ்வாய்க்கிழமை றொனால்டோ பெற்றுக் கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
28 வயதான கிறிஸ்டினோ றொனால்டோ, போர்த்துக்கலின் தேசிய அடையாளமாக மதிக்கப்படுவதாக, அந்த நாட்டின் அரசு தெரிவித்துள்ளது. (த)



## அலிஸ்ரயர் குக் கவலை

ஆஷஸ் தொடரை முற்றாக இழந்துள்ள இங்கிலாந்து அணி கடும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக அணியின் தலைவர் அலிஸ்ரயர் குக் குறிப்பிட்டுள்ளார். இறுதிப் போட்டியில் தோல்வியின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இந்த நிலையில் தமது அணி, இனி வரும்காலங்களில் இவ்வாறான நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதைத் தவிர்க்க முற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டிகளில் மாற்றமில்லை



போராட்டங்கள் நடந்தாலும் திட்டமிட்டபடி ஆசியக் கிண்ணப் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெறும் என ஆசிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. பங்களாதேஷில் கடந்த இரண்டு மாதங்களாக அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலை நிலவுகிறது.

கடந்த மாதம் டாக்காவில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அருகே குண்டு வெடித்தது. இதனால், அந்த அணி தொடரை ரத்து செய்துவிட்டு நாடு திரும்பியது.

தொடர்ந்து வன்முறை நடப்பதால், பெப்ரவரி 24ஆம் திகதி தொடங்க இருந்த ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி வேறு இடத்துக்கு மாற்றப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இது குறித்து ஆலோசிப்பதற்காக ஆசிய கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டம் கொழும்பில் கூடியது. கூட்டம் முடிந்த பின்ஆசிய கிரிக்கெட் சபையின் தலைமை செயல் அதிகாரி அஷ்ரபுல் கூறுகையில், ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் திட்டமிட்டபடி பங்களாதேஷில்நடைபெறும்.

இத்தொடரில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகளுடன் ஆப்கானிஸ்தான் அணியும் இடம்பெறும். இந்தப் போட்டியை ஸ்டார் இந்தியா நிறுவனம் ஒளிபரப்பு செய்யும் என்றும், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பங்களாதேஷ் விரிவாக எடுத்துரைத்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (த)

# தரப்படுத்தலில் ஆஸி. அணி முன்னேற்றம்

International Cricket Council

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான தரப்படுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆஷஸ் தொடரின் முடிவில் இவை வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி, அணிகளுக்கான தரப்படுத்தலில் ஆஸ்திரேலிய அணி 2 இடங்கள் முன்னேறி 3ஆவது இடத்திற்கும், இங்கிலாந்து அணி 2 இடங்கள் பின்னிலைக்குச் சென்று, 4ஆவது இடத்திற்குச் சென்றுள்ளது. தென்னாபிரிக்க அணி தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகிறது.

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில் ஏபி.டி.வில்லியர்ஸ் தொடர்ந்தும் முன்னிலை வகிக்க, இரண்டாவது இடத்தில் ஷிவ்நரின் சந்தர்போல் காணப்படுகிறார். மூன்றாவது இடத்தில் றொஸ் ரெய்லர் காணப்படுகிறார்.

டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் வேர்ணன்பிலாந்தர், டேல் ஸ்ரெய்ன் இருவரும் முதலிரு இடங்களில் காணப்பட, மூன்றாவது இடத்தில்றயன் ஹரிஸ் காணப்படுகிறார்.

டெஸ்ட் சகலதுறை வீரர்களுக்கான தரப்படுத்தலில் இரவிச் சந்திரன் அஷ்வின், ஷகிப் அல் ஹசன் இருவரும் தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகின்றனர். (த-400)

# நடால் கிண்ணம் வென்றார்



கத்தார் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், முதலாம் நிலை வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் பிரான்சின் கேயல் மான்பில்சுடன் நேற்று முன்தினம் மோதிய நடால் 6-1, 6-7 (5-7), 6-2 என்ற செற் கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டி இரண்டுமணிநேரம் நீடித்தது. நடால் வெல்லும் 61 ஆவது ஏடிபி பட்டம் இது.

அதிக ஏடிபி பட்டம் வென்ற வீரர்கள் வரிசையில் அமெரிக்காவின் ஆந்த்ரே அகாசியை (60 பட்டம்) முந்திய அவர் 8 ஆவது இடம் பிடித்துள்ளார். (த- 400)

# இலங்கை அணியில் குசல் பெரேரா



ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக் குழாமிலிருந்து லஹிரு திரிமன்ன வெளியேற்றப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக குசல் பெரேரா சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் போது காயமடைந்த லஹிரு திரிமன்ன, முதலாவது டெஸ்ட் போட்டியிலும் பங்குபற்றியிருக்கவில்லை. அவரது வலது கணுக்காலில் உபாதை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், லஹிரு திரிமன்னவுக்கு வழங்கப்பட்டு வந்த சிகிச்சைகளுக்குப் போதிய விளைவுகளை லஹிரு திரிமன்ன வழங்கியிருக்கவில்லை எனக் குறிப்பிட்ட இலங்கை அணியின் முகாமையாளர் மைக்கல் டீ சொய்சா, அதன் காரணமாக லஹிரு திரிமன்னவை இலங்கைக்கு மீண்டும் திருப்பியனுப்ப முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

லஹிருதிரிமன்னவுக்கு மாற்று வீரராக அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குசல் பெரேரா அறிவிக்கப்பட்டுள்ளார். இதுவரை இலங்கை சார்பாக 19 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், ஒன்பது 20/20 சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ள குசல் பெரேரா, இதுவரைடெஸ்ட்போட்டிகள்எவற்றிலும் பங்குபற்றவில்லை.

ஏற்கனவே, இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர உபாதை காரணமாக இந்தத் தொடரிலிருந்து இலங்கைக்குத் திரும்புவார் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (400)

# இங்கிலாந்து அணியில் கிறிஸ் வோக்ஸ்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் ஒரு நாள் போட்டி தொடரில் சகலதுறை ஆட்டக்காரரான கிறிஸ் வோக்ஸ் சேர்க்கப்பட்டு உள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரில் 5-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது.

இந்நிலையில், இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. அதற்கான முதல் போட்டி ஆஸ்திரேலியா நாட்டின் மெல் போர்ன் நகரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடங்க உள்ளது. இதற்காக இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் 17வது நபராக 24 வயது நிறைந்த சகல துறை ஆட்டக்காரர் கிறிஸ் வோக்ஸ் சேர்க்கப்பட்டு உள்ளார். (த-400)

# நான் சுயநலத்துடன் விளையாடவில்லை



இந்திய அணியில் இடம்பிடிப்பதற்காக உள்ளூர் போட்டிகளில் சுயநலத்துடன் விளையாடவில்லை என இந்திய அணியின் வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

ஒருகால கட்டத்தில் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தவர் கௌதம் கம்பீர்(வயது 32).

கடந்த 2003ஆம் ஆண்டில் பங்களாதேஸுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமானவர், இதுவரையிலும் 54 டெஸ்ட் (4021ஓட்டங்கள்), 147 ஒருநாள் (5238 ஓட்டங்கள்), 37 சர்வதேச 20/20 (932 ஓட்டங்கள்) போட்டிகளில் விளையாடி உள்ளார்.

கடந்தாண்டு ஜனவரி மாதம் இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் விளையாடிய இவர், மோசமான உடற்தகுதி காரணமாக அணியில் இடம் கிடைக்காமல் தவிக்கிறார்.

தற்போது உள்ளூர் போட்டிகளில் விளையாடி வரும் கம்பிர், ரஞ்சிக் கிண்ணப் போட்டியில் டில்லி அணிக்காக 578 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதில் அரியானாவுக்கு எதிரான போட்டியில் அதிகபட்சமாக 153 ஓட்டங்கள் எடுத்தார். இருப்பினும் சமீபத்தில் நடந்த தென்னாபிரிக்கத் தொடருக்கோ, இனிவரப் போகும் நியூசிலாந்து தொடருக்கோ தெரிவு செய்யப்படவில்லை.

இந்நிலையில் இதுகுறித்து கம்பீர் கூறுகையில், நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் இடம் கிடைக்காதது உண்மை. இத்தொடருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய வீரர்கள் சிறப்பாகச் செயல்பட வாழ்த்துகிறேன்.

மீண்டும் இந்திய அணியில் இடம் பிடிப்பதற்காக, உள்ளூர் போட்டிகளில் சுயநலத்துடன் விளையாடி அதிக அளவு ஓட்டங்கள் சேர்க்க விரும்பவில்லை. திறமையை வெளிப்படுத்தி சாதிப்ப தற்காகவே விளையாடுகிறேன். இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய மண்ணில் நடக்கும் டெஸ்ட் தொடர்களில் [...]றி காணும் இந்திய அணியில் இடம் பிடிக்க விரும்புகிறேன். போட்டியில் எந்த இடத்தில் களமிறங்குகிறேன் என்பது பற்றி கவலை இல்லை, அணியின்வெற்றிக்குகைகொடுப்பது மட்டுமே இலக்கு என்று தெரிவித்துள்ளார். மேலும் தற்போது கவனம் முழுவதும் விஜய் ஹசாரே தொடர் மீது மட்டும் உள்ளதாகவும், இதன் பின் ஐபிஎல் தொடருக்கு தயாராக வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (த-400)

Personal Class
இணைந்த கணிதம்
(EM/TM) A/L 2016, 2015, 2014 & Repeat
மாணவர்களுக்கு.
(42090) (4.6.3) தொடர்பு:072 172 3528

A/L 2016 Technology subjects
O/L, A/L ICT
உறுதிA பெறுபேறு! பல்கலை அனுமதி!!
செயன்முறைரீதியான கற்பித்தல்
உங்கள் தெரிவிற்கேற்ப விரிவுரை நேரம்
MCS IT CAMPUS
யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்
Type ICT <Name>& send to 772 395 895

Job Vacancies
at
SofTTech
COMPUTER EDUCATION
Computer Lecturer (Female)
Visiting Lecturers For
AutoCAD
Mobile Repairing
Wiring & Pipelining
Interested candidates are invited to submit their updated CV through Post Or Email
Before 15.01.2014
அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
For More Details :
306, Kandy Road,Ariyalai, Jaffna.
T.P: 021-221-1220, 077 9122997
E-Mail: Softtech_ariyalai@hotmail.com

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 11.01.2014 சனிக்கிழமை
1. காலை 8.00 - 10.00
2. காலை 10.00 - 12.00
3. காலை 11.30 - 01.00
4. மாலை இடமில்லை
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்கள் கூட இப் பயிற்சிநெறியில் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்திலும் பேச முடியும்.
SAAMSON LANGUAGE SCHOOL
யாழ்நகர்.
077 621 4567

Learn French The French Way
French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே. இச்சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். Embassy க்கும் France இல் French படிப்பதற்கு / தொழில் புரிவதற்கும் எமது அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன.
இன்றே அனுமதிகளைப் பெறுங்கள் 021222 8093
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.